42

# திருக்கழுக்குன்றத் திருப்பதிக விளக்கம்

ஆசிரியர்
இளவழகனார்
அவர்கள் விரிவுரை

Q23:38·2111·
N52

...பனடியார் திருக்கூட்ட வெளியீடு

உ

திருச்சிற்றம்பலம்

# திருக்கழுக்குன்றத் திருப்பதிக விளக்கம்

ஆசிரியர்:

இளவழகனார்

அவர்கள், சென்னை இராயபுரம் இறைபணிகழகத்தில் நிகழ்த்திய விரிவுரை

தொகுத்தவர்:

ஒளியகம் ந. ரா. ஆடலரசு

பதிப்பித்தோர்:

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தார்

1, முல்லாசாயபு சந்து, சென்னை-1.

உரிமை ஆசிரியருக்கே

சூன் 1952

விலை அணா 8

முதற் பதிப்பு :
ஜூன் 1952
1000 படிகள்

ஸோஷியல் அச்சகம்
396, தங்கசாலை தெரு, சென்னை-1

இந்நூல்
மாணிக்கவாசகர் திருநாளில்
(27-6-52) திருக்கழுக்குன்றத்தில்
வெளியிடப்பட்டது.

## பதிப்புரை

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சமய வளர்ச்சிக்கான பணித்திட்டங்களில் நூல் வெளியீடும் ஒன்று. அதற்கேற்ப, இந்நூல் இறைவன் திருவருளை முன்னிட்டு இவ்வாண்டு மக விழாவில் வெளியிடப்படுகின்றது.

மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளியத் திருக்கழுக்குன்றத் திருப்பதிகம் எழு பாடல்களை யுடையது. அதற்கு விளக்கம் இராயபுரம் இறைபணிக் கழகத்தினர் சார்பில் ஆசிரியர் இளவழகனார் அவர்களால் திருவாதிரை விரிவுரையாக எழுநாட்களில் நிகழ்ந்தது. அவ்விரிவுரை ஏழாவது ஆண்டு விழாவின் மலராக வெளிவருதற்கு இசைவு தந்த ஆசிரியர் இளவழகனார் அவர்கட்கும், விரிவுரை நிகழ்வதற்குக் காரணமாயிருந்து பலர்க்கும் பயன்படுகிற முறையில் நூலாக வெளிவருதற்கு ஊக்கமும் மகிழ்ச்சியும் காட்டிய இராயபுரம் இறைபணி கழகத்தினருக்கும், தமக்குள்ள பலவகை அல்லல்களையும் பொருட்படுத்தாது சொற்பொழிவை கேட்ட போது எடுத்த குறிப்புகளைக் கொண்டு விரித்தெழுதி, ஒழுங்கு படுத்தி ஆசிரியரவர்களை அணுகி அதனை பார்வையிடச் செய்து திருத்தி வாங்கி தமக்கே உரிய விடா முயற்சியினால் நூலை உருவாக்கித் தந்த அன்பர் திரு. ந.ரா. ஆடலரசு அவர்கட்கும், அச்சுப்பிழைகளை திருத்தி உதவிய அன்பர்கள் திரு. கோ. லோகநாதன், திரு. ரா. கண்ணன் அவர்கட்கும், மிகக் குறுகிய காலத்தில் பொறுப்போடு சிறந்த முறையில் நூலை அச்சிட்டுக் கொடுத்த சோஷியல் அச்சகத்தினருக்கும், குறித்த காலத்தில் நூல் வெளிவருதற்கு உழைப்பெடுத்து எல்லோருடனும் ஒத்துழைத்த எம் திருக்கூட்டத் துணைச் செயலாளர் திரு. மயிலை. தெய்வசிகாமணி அவர்கட்கும், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் எம்மனங்கனிந்த நன்றியும், எல்லோருக்கும் தோன்றாத் துணையாக விருந்து பேருணர்வு வழங்கி யருளிய திருக்கழுக்குன்றக் கண்ணுத லெம்பெருமானுக்கு எம் வணக்கம் உரித்தாகுக!

ம. ரா. சம்பந்தன்,
செயலாளர்.

சென்னை,
27-6-'52.

## கருத்துரை

திருக்கழுக்குன்றம், தொண்டநாட்டுத் திருப்பதிகளில் நால்வர் பாடல் பெற்ற பெருமையுடையது; தன்னைத் தொழுவார்க்குப் பரிபக்குவம் விளைக்குந் தலம்!


மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருக்கழுக்குன்றப் பதிகம், அத் திருப்பதியை அடையும் அன்பர்க்கும் பிறர்க்கும் மிக்க உருக்கத்தைத் தந்து அருளூறவாய்த் திகழ்கின்றது. சென்னையில் இராயபுரம் இறைபணிக் கழகத்தார் அப் பதிகத்தின் விளக்கம் விரும்பினர். சில விரிவுரைகள் அதற்காக அங்கே நிகழ்ந்தன.

பிறரும் அவற்றை அறிதல் நலமென்று கருதி, இந் நூல் இப்போது வெளிவருகின்றது; இவ்வூக்கம் போற்றுதற்குரியது! அன்பர் ஆடலரசு, விரிவுரைகளைக் கேட்டுக் குறிப்பெடுத்து விரித்தெழுதி உதவியிருக்கின்றார். நிகழ்ந்தவாறே பெரும்பாலும் அவர் எழுத்து அமைந்துள்ளது; எழுதிய ஆற்றல் பாராட்டத்தக்கது!

ஏதோ எளிய அறிவினாலும் அன்பினாலும் விரித்துரைக்கப்பட்ட இவ்விரிவுரை மக்கள் ஓரளவேனும் விளக்கமும் உருக்கமுங் கொள்ள உதவுமானால், நல்லது!

குருகுலம், மாம்பாக்கம்;
15—6—52

இளவழகன்



ஆசிரியர் இளவழகனர்
(மாம்பாக்கம் குருகுலம் அமைப்பாளர்)

உ

திருச்சிற்றம்பலம்

# திருக்கழுக்குன்றத் திருப்பதிக விளக்கம்

(இராயபுரம் இறைபணிக்கழகத்தின் சார்பில்
மாணிக்கவாசகர் திருநாளில் (1951) நடைபெற்ற
ஆசிரியர் இளவழகனார் அவர்களின் விரிவுரைத் தொகுப்பு)

## முன்னுரை:

**மாணிக்க வாசகர் காலம்**

இத்திருப்பதிகம் திருவாசகத்தில் உள்ளது. திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் சைவசமய குரவர்களாகிய நால்வர்களுள் முன்னவர். முதல் நிலையில் இருப்பவர். அவர் காலம் மூன்றாம் நூற்றாண்டு என்பது சான்றோர் துணிபு. பிற்பட்டதென்று கூறுவாரும் உளர். விரிந்த ஆராய்ச்சி ஈண்டு வேண்டுவதில்லை. சங்ககாலத்து நடை அவர் பாடல்களில் விரவி இருக்கிறது. அக்காலம் இரண்டாம் நூற்றாண்டு என்பது பலர்க்கும் உடன்பாடாதலின், அவர் காலம் மூன்றாம் நூற்றாண்டென்பது தவறாகாது.

மாணிக்கவாசகர் ஞானத்தில் ஞானமாகிய உயர்நிலையை எய்தியவர். அதற்குமேல் வீட்டு நிலைதான். அவர் வாக்கு திருவாசகம் என்று பெயர் பெற்றது. வாய் என்பது உண்மை; உண்மை பேசுவதுதான் 'வாய்' எனப்படும். வாக்கு-வாசகம்-

### அவர் வாக்கின் சிறப்பு

வாக்கியம் என்பனவெல்லாம் உண்மை உரை. உண்மை ஆதலின் வாக்கு, காரிய உருவானது; பயன் உடையது; முன்னேற்றுவது. அது வெறும் 'ஆகாசதத்துவத்'தில் பிறப்பதன்று; 'சக்திதத்துவத்'தில் பிறப்பது. அருள் பெற்ற பெரியோர்களிடத்தில் வாக்குப்பிறக்கும்; அது நல்ல கவியாகவும், நல்ல உரையாகவும் இருக்கும். அத்தகைய வாக்கு 'செல்வாக்'காக இருக்கும்; எண்ணிய பயனை உடனே தருவதாக இருக்கும். வாக்கு என்றாலே செல்வாக்கு தான்; வேறுநிற முள்ள நிலாவிலிருந்து பிரிப்பதற்காகவா நிலாவை வெண்ணிலா என்று சொல்கிறோம்? நிலவுக்குள்ள இயல்பான வெண் மையைக்கருதியே இயல்பான அடையாகச் சேர்த்து வெண் ணிலா என்கிறோம். அதுபோலவே வாக்கு என்பதையும் அதன் இயல்பு கருதிச் செல்வாக்கு என்கிறோம். மாணிக்கவாசகர் வாக்கு செல்வாக்கு; வாசகம் திருவாசகம். திரு-தெய்வத்தன்மை; தெய்வம்-உண்மையானது; 'திரு'இங்கே இயல்பான அடை. திரு வாசகம் உண்மையான தெய்வத்தன்மையை உள்ளபடி உரைப் பது. ஆன்றோர் வாக்காதலின் அது திருவருளை உண்மையாகவே நம்மிடம் சேர்க்கக் கூடியது.

திருவாசகப்பாடல் பெற்ற பதிகள் மிகச்சில; அவற்றுள் ஒன்று திருக்கழுக்குன்றம்; அது நால்வர் பாடலும்பெற்ற ஒரு மலைக்கோயில்; மலைக்கோயில்கள் எல்லாம் மன ஒருமையோடு

### திருக்கழுக்குன்றச் சிறப்பு

வழிபடுதற்கும் சுற்றிவந்து உடல் நலத்துக்கு இசைவான அதன் நல்ல காற்று நன்னீர் முதலியவற்றால் ஐம் புலங்களினாலும் தூய்மையின்பம் கொள் வதற்கும் ஏற்றவையாகும். நல்ல கால மாகத் திருக்கழுக்குன்றம் நமக்கெல் லாம், (சென்னை மக்களுக்கு) அண்மையில் நல்லநிலையில் போக்கு வரவு வசதிகளுடன் இருக்கிறது.

மூவர் என்றால் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய தேவார ஆசிரியர்களைக் குறிக்கும்; நால்வர் என்றால் மாணிக்கவாசகரும்

### மணி வாசகரின் தனி நிலை

சேர்வர். நால்வர்வாக்கும் தேவாரம்தான்; திருவாசகம்தான். ஆனால் மணிவாசகரை மட்டும் நால்வர்களினின்று பிரித்து, மூவரை ஒன்றாகவும் இவரைத் தனியாகவும் சிறப்பித்துப் பேசுவதும் வழக்கம். மூவர்வாக்கைத் தேவாரம் என்றும்: மற்றவர் வாக்கைத் திருவாசகம் என்றும் பிரித்துச் சொன்னது, பின்னதில் உள்ள சில தனிச்சிறப்புக்களை எண்ணியே ஆகும்.

### அதற்குரிய காரணம்

இம்மாதிரி வாதவூரடிகளையும் அவர்களின் வாக்கையும் மட்டும் தனியே சிறப்பித்ததற்குள்ள காரணங்கள் பல. அவற்றுள் சிறந்ததும் ஈண்டுக் கொள்ளத்தக்கதும் அவர் 'ஞானநிலையினர்' என்பதே. சரியை, கிரியை, யோகம் என்னும் மற்ற மூன்று நிலைகளும் அறிவு நிலைகள்; ஓர் உயிர், தன் முயற்சியினாலேயே அடையக்கூடிய உயர் நிலைகள். ஞான நிலையோ அருளால் மட்டுமே பெறக்கூடிய முடிந்த நிலை. நால்வர்களும் ஞான நிலையினரே. ஆயினும், தேவார ஆசிரியர்கள் மூவரும் முறையே ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகமாகிய உயர் நிலைகளை உலகுக்கு விளக்கவந்த உரவோராவர். மணிவாசகர் முடிந்த நிலையாகிய ஞானத்தில் ஞானநிலையை, வீடுபேறளித்துப் பிறவிப்பயனைத்தரக்கூடிய பெருநிலையை அடைந்தவர். ஆகவே அவர் நிலைக்கும் அவர்தம் நுகர்வுகள் (அநுபவம்) அடங்கிய திருவாசகத்துக்கும் ஒருதனிச் சிறப்பு இருப்பது இயல்பாயிற்று.

### கழுக்குன்றக் காட்சி

இனிக் கழுக்குன்றத்தில் தாம் கண்ட காட்சியை அடிகளார் 'கணக்கிலாத் திருக்கோலம்', 'ஆட்கொள்வான் வந்த' கோலம், 'கலங்காமலே வந்த' கோலம், 'காணாத்திருக்கோலம்', 'ஓத வந்த கோலம்' 'அடியார்முனே வந்த' கோலம், என்றெல்லாம் பொதுப்படக் குறிப்பிடுகிறாரேதவிர, அதை வடிவம் விளக்கிச் சொல்லவில்லை. அப்பர், சம்பந்தர்,

சுந்தரர் முதலிய ஆசிரியர்கள், தாம் கண்ட இறைக்காட்சிகளை, இப்படி இப்படி இருந்தன என்று விளக்கியிருக்கிறார்கள்; அடிகளும் பெருந்துறை, மதுரை முதலிய இடங்களில் தாம் கண்ட காட்சியை நன்றாக விளக்கிக் கூறியிருக்கிறார்கள்; ஆகவே அவர்கள் திருக்கழுக்குன்றத்தில் கண்ட கோலம், வடிவங்கடந்த தனித்த நிலையினதான ஓர் ஒளிக்கோலமாய், ஞானத்தில் ஞான நிலையை அடைந்த அருளாளர்களுக்கு மட்டுமே விளங்கக்கூடிய மிகு நுண்ணிய அருட்கோலமாய் இருக்கலாம் என்று தெரிகிறது. கோலம் என்பதனால் (கோலம் - அழகானது, கோலுதல் - அடிப்படை அமைத்தல்) அது கண்ணுக்குத் தெரியக்கூடியதாய், அழகாகவும், காட்சிகளுக்கெல்லாம் அடிப்படையானதாகவும் இருந்திருக்க வேண்டும். உத்தர கோசமங்கையில் இது போன்ற ஓர் *ஒளிக் காட்சியைத் தாம் கண்டதாக அடிகள் குறிப்பிடுகின்றார்கள். ஆனால், அதனினும் இது நிறைவுடையது.

இத்தகைய ஒளிக்காட்சி (சோதி தரிசனம்) மெய்யுணர்வு (ஞானமார்க்க) நெறியினர்க்குச் சிறப்புரிமை என்று தெரிகிறது. சோதி என்றதும் இக்காலத்தில் இராமலிங்க அடிகள் நினைவு வருகின்றது; அவர்கள் மார்க்கம் சன்மார்க்கம்; ஞான மார்க்கம் என்றாலும் சன்மார்க்கம் என்றாலும் ஒன்றே. (சத்-உண்மை, உண்மையை அறிவதே ஞானம்) சன்மார்க்கம் என்பதையே, வெண்ணிலா, செல்வாக்கு, திருவாசகம் என்பவற்றைப் போல, இயல்பான அடைகொடுத்து சமரசசன் மார்க்கம் என்றனர் சான்றோர்.

## ஒளிக்காட்சியும் பொதுமை உணர்வும்

சன்மார்க்கமெல்லாம் (உண்மை எப்போதும் ஒன்றாகவே இருக்குமாதலின்) எப்போதும் சமரசம் (பொதுமை) ஆகத்தான் இருக்கும். எனவே திருவாசகம், திருவருட்பா முதலிய சன்மார்க்க நூல்கள் திருக்குறளைப் போல் உலகப்பொது உடையனவே. தமிழில் உள்ள பல நூல்கள் இத்தகைய பொதுநூல்களே. அவற்றின் உண்மைகளைச் சரியான முறைகளில் பரப்புதல் வேண்டும்; பரப்பினால் அவை பொதுமை அடையும் என்பதில் ஐயமில்லை; அதற்குரிய கருவான கருத்துக்கள் அவற்றில் ஏராளமாக இருக்கின்றன.

* நீத்தல் விண்ணப்பம் 15–ஆம் பாடல்.

ஞானமார்க்க மாகிய சன்மார்க்கத்தை விளக்க வந்தவர் மணிவாசகர்; அதையே பின்னும் சமரச சன்மார்க்க மாக விளக்கியவர் வடலூ ரடிகள். இவருக்கும் ஜோதிக்காட்சி உண்டு; முன்னவர் வாக்காகிய திரு வாசகத்தை ஓதி ஓதி உருகி உருகி அதற்கு வாச்சியம் (உரை) போலவே பின்னவர் திருவருட்பாவைப் பாடியிருக்கின்றார்.

### திருவாசகமும் திருவருட்பாவும்

### அடிகளின் அடிப்படை வாழ்வு

ஆளுடைய அடிகளின் அருள்வாழ்வு, ஞானவாழ்வு, பெருந் துறையில் தொடங்கிற்று; அதற்குமுன் அவர் பாண்டிய அரச னிடம் முதல் அமைச்சராக இருந்து பொருளுலகில் சிறந்திருந்தார்; ஆனல் அவர் அதில் நிறைவு கொள்ளாமல் அருளுக்காகவே ஏங்கினர்; அவ் ஏக்கம் அவருக்குப் பெருந்துறையில் குருவருள் மொழி பெறுதற்குரிய பக்குவத்தைக் கொடுத்தது; அங்கே அவர் குருவை எதிர்ப்பட்டுத் தம்மை அவர் பால் ஒப்படைத்து அருளாளராகமாறினர்; ஞானவாழ்க்கையைத் தொடங்கினர்; தமது மெய்யுணர்வின் வழி ஒழுகினர்; பல திருப்பதிகளுக்கும் சென்றார்; குருமுகமாகப்பெற்ற திருவடி ஞானம் மேலும் மேலும் வளர்ந்தது; திருக்கழுக்குன்றம் போந் தார்; அங்கே அவருக்கு அருட் கோலக் காட்சி கிடைத்தது; தாம் பெற்ற திருவடிஞானத்தை அந்தத்திருப்பதியிலேயே உல கோர்க்குப் பயன்படத் திருப்பதிகம் பாடிவைத்தார்; பின் தமது செலவை (யாத்திரையை) முடித்துக்கொண்டு நேரே தில்லைக்குச் சென்று திருவருளிற் கலந்தார்; இதுவே அவர் வாழ்வின் சுருக் கம்.

### விளைவுப்பதி

பொருட் கரையிலிருந்து அருட்கடலில் அவர் இறங்கிய இடம் திருப்பெருந்துறை; அதிலிருந்து அவரை முத்திக்கரை வற்றியபதி, கலங்கரை விளக்கம் திருக் கழுக்குன்றம்; அங்கே அவர் ஏறிவந்த ஞானக்கலம் (ஏந்தி வந்த திருவடி) இருக்கிறது. ஆகவே ஞானம் வேண்டு

வார்க்கெல்லாம், வாழ்வின் பயனை அடைய விரும்புவார்க்கெல் லாம்நன்மைதரும் விளைவுப்பதியாக இருப்பது திருக்கழுக்குன்றம் என்பதை அறிதல் வெண்டும். கரைஏறிய இடம் இல்லை; அது முத்திக்கரை.

சைவசமயத்தவர் 'கோயில்' என்ருல், அது தில்லையைக்குறிக் கும். திருக்கழுக்குன்றத்தைக் கண்ணுதலான் காதல் செய் கோயில் என்று பாடல் தோறும் குறிப்பிடுகின்ருர் திருஞான சம்பந்தர். தில்லை-அடிப்படைத்தலம், இறைவனின் ஐந்தொழில் இயக்கத் தைக் காட்டும் அருட்பதி; திருக்கழுக்குன்றம்-விளைவுத்தலம். ஐந் தொழிலின் முடிந்தவிளைவாக உயிர்கள் பிறவி நீங்கி மலம் கழன்று வீடுபெறுதற்குரிய பரிபக்குவம் விளக்கும் பதி. ஆளுடைய அடி களின் 'யாத்திரை' அங்கே முடிந்ததனுலும், அவர் மேல்விளைவு பற்றிய நோக்கம் எதுவுமின்றித் தில்லைக்குச்சென்று திருவருளிற் கலந்ததனுலும் இவ்வுண்மைகள் உறுதிப் படுகின்றன. அடிகளே 'மேல் விளைவதறிந்திலேன்' எனப் பதிகத்தில் தம் பிறவிப்பய ஞகிய முத்திப் பரிபாகம் (விளைவு முற்றியநிலை) கிட்டியதைக் குறிப்பிடுகின்ருர்.

### ஞான பீடம்

திருப்பெருந்துறையிற் பெற்ற திரு வடி ஞானத்தை உலகோர்க்குப்பயன்பட வைத்த இடம் திருக்கழுக்குன்றமாதலின் அது உலகோர்க்கு ஒரு ஞானபீடம், குருபீடம் என்று கொள்ளப்படவேண்டிய இடமாக இருக்கிறது.

## திருக்கழுக்குன்ற ஆதீனத்தின் முதற்பெருங்குரவர்

மாணிக்க வாசகர்; அங்கேசென்று அருள் ஞானம் பெறுகிறவர் களெல்லாம் அவர் பாரம்பரையின் மாணவர்களாகிருர்கள் என்று கொள்வதும் பொருந்தும். எனவே அடிகளின் மாணவர்களாக இருந்து அவர் வழங்கி விட்டுச்சென்ற திருப்பதிகத்தின் விளக் கத்தைப் பார்ப்போமாக!

## முதலாவது 'பிணக்கிலாத பெருந்துறை'

1. பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு
    மான்! உன் நாமங்கள் பேசுவார்க்(கு)
இணக்கி லாததோர் இன்ப மேவரும்
    துன்ப மேதுடைத் தெம்பிரான்!
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
    யாமல் என்வினை ஒத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம் நீ வந்து
    காட்டி னாய்கழுக் குன்றிலே.

பிணக்கிலாத பெருந்துறைப் பெருமான்! :— (யாருக்கும்) மாறுபாடு இல்லாமல் அருள்செய்கின்ற திருப்பெருந்துறைப் பெருமானே!

ஞானத்தை வைக்கிற இடத்தில் அதைப்பெற்ற இடத்தை நினைவு கூர்வது இயற்கையே! அதனால் பெருந்துறைப் பெருமானை நினைந்து விளிக்கிறார். விளிக்கிறபோது அவன்றன் பிணக்கற்ற தன்மைதான் முதலில் நினைவுக்கு வருகிறது. (பிணக்கு - மாறுபாடு) அடிகளார் அருள்வாழ்வில் நுழைகிறபோது அரசன் உள்ளிட்ட பலர் அவரோடு பொருள் காரணமாக மாறுபட்டனர். பிணக்கெல்லாம் பொருள் காரணமாகவருவது; ஆகவே பொருள் தொடர்பு இருக்கிறவரை பிணக்கு சிறிதாயினும் இருந்து கொண்டுதான் இருக்கும்; ஆனால் அருள் நிலையில் பொருளுக்கு முதன்மையில்லை. ஆதலின் அங்கே பிணக்குக்கும் வழியில்லை. அருள்கிட்டுகிறபோது மெய்யுணர்வு (ஞானம்) அரும்பும், பொருள்தொடர்பு விட்டுப் போம் அல்லது அதன்பயன் கிடைத்துவிடும்; எனவே, பிணக்கும் இராது. பெரிய துறையிலே பிணக்குக்கு இடம் எது? அங்கே ஞானத்துக்குத்தான் குறைவு எது? அருளுக்கும் ஞானத்துக்கும் உறைவிடமாகவுள்ள ஆண்டவன், எந்த உயிர்களிடமும் அவற்றிற்குப் பக்குவமில்லை என்பதற்காகப் பிணக்குக் கொள்ளாமல் அவை எவ்வளவு தாழ்ந்த நிலையில் இருந்தாலும் இணங்கிவந்து ஏற்ற நன்மைகளைச் செய்து கொண்டிருக்கிறார். பெருந்துறையில் எழுந்

**பெருந்துறையும் பிணக்கின்மையும்**

தருளியுள்ள பெருமானுக்கு இவ்வாறு அருள் செய்யும் பண்பு சிறப்புரிமை போலும்.

உயிர்களிடத்திலெல்லாம் காணப்படுகிற இப்பிணக்கு நிலையைக் கடந்து நிற்கிற இயற்கை நிலையைக் கடவுள் என்று

### இயற்கையும் கடவுளும்

சொல்வதில் தவறு என்ன இருக்கிறது? அப்படிச் சொல்லமாட்டோம் இயற்கை என்றுதான் சொல்வோம் என்று ஒரு சாரார் பிடியாயிருந்தால், அது அவர்கள் விருப்பம். இயற்கை என்பதைப்போலவே கடவுள் என்ற சொல்லும் ஆண்பால் பெண்பால் முதலிய எந்தப் பாலிலும் சேராமல் அதே பொருளில்தான் இருக்கிறது. 'இயல்பானன் சாழலோ!' என்கிறார் அடிகள் பிரிதோரிடத்தில்.

உன் நாமங்கள் பேசுவார்க்கு:—உன் திருப்பெயரை ஓதுகிறவர்களுக்கு, நாமம் - பெயர்.

வடிவமிருந்தால் பெயர் இருக்கும், இறைவனுக்குத் தனித்த நிலையில் வடிவமில்லை எனினும் உலகில் நாம் காணும் வடிவ

### கடவுளுக்குப் பல பெயர்கள் ஏன் ?

மெல்லாம் அவன் வடிவமே, அவற்றுக்குள் அவன் 'சக்தி' ஊடுருவி இருத்தலின் என்க. ஆகவே அவனுக்கு எத்தனையோ பெயர்; ஒவ்வொரு பெயரும் இறைவனின் ஒவ்வோர் ஆற்றலையும் புகழையும் நினைப்பூட்டும்; அவன்றன் பொருள்சேர் புகழ் புரிதற்கு (இடைவிடாது எண்ணுதற்கு) அவை உதவியாக இருக்கும்.

இனி ஈண்டு நாமங்கள் என்றது அப்பெயர்களை எல்லாம் எண்ணியல்ல, அப்பெயர்களுள் எல்லாம் சிறந்ததான ஐந்தெ

### சிறப்புப் பெயர்

ழுத்தை எண்ணியே எனலாம்; ஏனெனின், அஃதொன்றே அவன்றன் எல்லா ஆற்றல்களையும் அருளையும் செயல்களையும் அறிவிப்பதாதலின் என்க. 'நந்தி நாமம் நமச்சிவாயவே' என்றார் ஆளுடைய பிள்ளையார், அதுவே அவன் சிறப்புப்பெயராதலின் ஐந்தெழுத்துப் பெயரும் பலவாகும். அவற்றுள் பேசுதற்குரியது 'ஸ்தூல பஞ்சாட்சரம்' எனப்படும் முதல்நிலை ஐந்தெழுத்து. திருப்பெருந்

துறையில் அடிகள் பெற்ற அருள்மொழி (உபதேசம்) இதுவே யாகும். அதுபலமுறை உச்சரிக்கப்படும் ஆதலின், 'நாமங்கள்' என்று பன்மையில் குறிப்பிடப்பட்டது.

**துன்பமே துடைத்து இணக்கிலாததோர் இன்பமே வரும்:-** துன்பங்களை அடியோடு போக்குகிற, அடங்காத (மேன் மேலும் மிகுகின்ற) ஒப்பற்ற இன்பம் வரும்

துடைத்தல்-அடியோடு போக்குதல். (துடைப்பம்-அடியோடுதூசு போக்குவது)

இணக்குதல்-அடக்குதல். இணக்கிலாததோர் இன்பம்-அடங்காத பேரின்பம்; முடிவும் ஒப்புமில்லாத இன்பம்.

**உலகியல் அருளியல் இன்பங்களின் இயல்பு**

உலகியலிலும் இன்பம் உண்டு; ஆனால் அவ்வின்பத்தின் பின்னாலேயே துன்பம் இருக்கும்; அருளியலில்தான் துன்பம் துடைத்த இன்பம்கிட்டும். உலகியற் பொருள்களின் ஆற்றலையே நம்மால் முழுதாக அறியமுடியவில்லை; வான், வளி முதலிய நுண்ணிய பூதங் களின் ஆற்றலை நம்மால் அளக்கமுடி யுமா? அவைகளின் அளவும் ஆற்றலும் நமக்கு வரம்பற்றவைகளாக இருக் கின்றன. வரம்புள்ள இவற்றின் ஆற் றல்களுக்கு மேலும் வரம்பற்ற ஆற்றல்கள் பல இருக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலான மூலமான ஆற்றலுடையதையே நாம் 'கடவுள்' என்று கொள்ளுகின்றோம். உலகியல் பொருள்களின் இன்பங்களையே (பின்னால் துன்பம் விளைப்பினும்) நாம் பெருமை யாக எண்ணுகிறபோது, எல்லாம் கடந்த மூலப்பொருளான கடவுளின் இன்பம் எவ்வளவு பெரிதாக இருக்கும்! அதை இணக் கிக் கொள்ள (வரம்பு படுத்த) இயலுமா? அதன் நிழலிற்கூடத் துன்பத்துக்கு இடமில்லையே! அதனால்தான் அது துன்பம் துடைத்த இன்பம் என்று குறிக்கப் பெறுகிறது.

**எம்பிரான்-எம் ஆண்டவனே! உணக்கிலாததோர் வித்து-** உலர்த்தப்படாதது எனினும் (வழக்கத்திற்குமாறாக) முளைவிட்டுக்கொண்டிருக்கிற ஆணவம் என்கின்ற ஒப்பற்ற வித்தானது; **மேல் விளையாமல் என்வினை ஒத்தபின் -** மேலும் விளையாதபடி என்னுடைய செயல்கள் அருளோடு ஒத்துப்போய்விட்ட பிறகு

உணக்குதல்-உலர்த்துதல். வித்து-விதை.

விதைகள் எல்லாம் உலர்த்தப்படும், உலர்த்தப்பட்ட விதைகளே முளைக்கும் தகுதிபெறும். பிறவிக்கு வித்து ஆணவம்; அது உலர்த்தப்படவில்லை; எனினும் முளைக்கிறது! நம்முடைய பிறவித்துன்பங்கட் கெல்லாம் அடிப்படை இந்த ஆணவம் என்கின்ற மலமே. 'அது ஆணவம் பிடித்துப் போய்த் தடுமாறுகிறது' என்கிறார்கள்; எனவே 'ஆணவம்' என்று ஒன்று இருக்கிறதென்பதும், அது இருந்தால் தடம் மாறி (நெறிதவறி) போகிற நிலைஉண்டு என்பதும் தெரிகிறதல்லவா? அப்படியே 'என் கன்மத்தைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றேன்' என்கிறார்கள். அதனால் 'கன்மம்' என்ற ஒன்று (வினை) உண்டு என்று தெரியலாம். இவையிரண்டுமே பிறவியின் வித்தும் விளைவுமாகும்.

## பிறவி வித்து

ஆணவம் என்பது உயிர்களைப் பற்றியுள்ள அறியாமை என்கிற மலம். அதை நீக்கவே இறைவன், அருளால் உயிர்களைப் பிறப்பிக்கின்றான். பிறக்கும் உயிர்களுக்குரிய உலகம் உடம்பு புற அகக் கருவிகள் மற்றுமுள்ள நுகர் பொருள்கள் எல்லாவற்றையும் அவன் 'மாயை' என்னும் ஒரு மூலப் பொருளிலிருந்து உருவாக்கப் படைத்தல் அளித்தல் முதலிய ஐந்தொழில்களைப் புரிகின்றான். இவ்வாறு உயிர்களின் பிறப்பிறப்புகளுக்குத் துணையாக இருக்கின்ற மாயையும் ஒரு மலமாகவே ஆன்றோர்களால் கருதப்பட்டது; என்றாயினும் ஒருநாள் உயிர்கள் அதன் பிடிப்பிலிருந்து கழலவேண்டியிருக்கின்றது. இனி, வித்திலிருந்து முளை இரண்டாகப் பிரிந்து முளைப்பது போல ஆணவம் என்கிற வித்திலிருந்து நல்வினை தீவினை என்கிற இரண்டு வினைகள் விளைகின்றன. அவைதான் 'கன்மம்' என்படும். உயிர்களின் மேல்மேல் பிறவிகளுக்குக் கன்மம் காரணமாக இருத்தலின் அதுவும் ஒரு மலமாகின்றது. ஆக, ஆணவம் மாயை கன்மம் என்னும் மூன்று மலங்களினால் ஒவ்வோர் உயிரும் கட்டுப்பட்டுக் கிடக்கின்றது.

## மும்மலங்கள்

காரணமில்லாமல் காரியம் உண்டு என்று எந்த அறிஞரும் சொல்லமுடியாது. பிறவிக்கும், அதன் சூழல்களுக்கும் உள்ள கார

ணத்தை 'வினை' என்ற பெயரால் வழங்கினர் முன்னோர்; இப்போது அப்பெயர் பிடிக்கவில்லை என்றால் வேறுபெயர் வைத்துக்கொள்ளலாமே ஒழிய, காரணத்தை இல்லை என்று சொல்லி விடமுடியாது.

## வினை உண்டு

வினை (அருளோடு) ஒத்தால் ஆணவமாகிய வித்து மேலும் முளைக்காது, பிறவி வாராது என்கிறார் அடிகள். வினை ஒத்தல் என்றால் என்ன? உலகியலிலே நாம் பல்வேறு செயல் (வினை) களில் ஈடுபடுகிறோம். உலகில் பிறந்துவிட்டதால் ஈடுபடத்தான் வேண்டும். ஆனால் அதிலேயே நிறைவு கொண்டுவிடாமல் மேல் நிலைகள் உண்டா என ஆராய்ந்து, அப்படி உண்டென்று அறியப்பட்டால் அந்நிலைகளை அடைதற் பொருட்டு உலகியலைக் கடக்கிற முறையிலும் நம் செயல்கள் நிகழ்வது நல்லது தானே? அருளோடு ஒத்துப் போவது என்பது, அங்ஙனம் கடக்கிற முறையில் உலகியலைக் கொள்வதுதான். அதாவது, உலகத்தையும் உயிர்களையும் படைத்த ஆற்றலின் நோக்கத்துக்கு ஏற்றபடி நம் செயல்களைச் செய்வது. அப்படிச் செயலாற்றுகிறபோது அவற்றால் வரும் இன்ப துன்பங்களைப் பொருட்படுத்தாத நிலை நம்மிடம் ஏற்படுகிறது. உலகியலிலேயே ஏதேனும் ஒரு குறிக்கோளுக்காகச் செயலாற்றுகிறபோது, அதனால் நேரும் இன்பதுன்பங்களைப் பொருட் படுத்தாத நிலை உண்டாவதை நாம் அனைவரும் அறிவோம். ஆதலின் அருளியலில் இத்தகைய அடைவுக்கு ஏதும் ஐயமில்லை. வினைகளைச் செய்கிறபோது உண்டாகும் இன்ப துன்பங்களை ஒன்றாகக் கொள்ளுகிற நிலையே வினை ஒத்த நிலைஎன்றும், எவ்வளவு நல்வினை பெருகியதோ அவ்வளவுக்குத் தீவினைதேய்ந்து அடங்கியதே வினை ஒத்த நிலைஎன்றும், நல்வினையானாலும் தீவினையானாலும் இறைபணி என்னும் வகையில் ஒத்த மதிப்புடையனவேயாதலின், அந்நிலைமையே வினை ஒத்த நிலை என்றும் பலபடப் பொருள் சொல்வர். எப்படி இருந்தாலும் அருள் உணர்வோடு காரியங்களைச் செய்கிறபோது நல்வினை தீவினைகளால் ஆம் இன்பதுன்பங்களும் அளவும் செய்கிறவர்களைத் தாக்காமல் அற்றுப்போகிற நிலை உண்டாகிவிடுகின்றது. அருளில் வினை

## வினை ஒத்தல்

ஒத்துப்போவதென்பதும், வினை அற்றுப் போவதென்பதும் ஒன்றுதான்.

அறிவு நிலையில் நிகழும் வினைகளுக்கெல்லாம் பயன் உண்டு; அவை உரியவரைத்தாக்கும். அருள் நிலையில் செல்லுகிற போதும் வினை நிகழும், ஆனால் அவற்றின் தாக்குதல், வினை நிகழ்ச்சிக்கு இடமான உயிரையோ உடம்பையோ ஒன்றும் செய்யாது; காரணம் அவை உயிரறிவினால் நடைபெறாமல் அருளுணர்வினால் நிகழ்வன ஆதலின். சண்டேசுரர் அருள் நிலையில் வாழ்ந்தவர். அவர்வாழ்வில் பசுவைக் காத்தலாகிய நல்வினை போல்வதும், தந்தையின் கால்களைத் தடிதலாகிய தீவினை போல்வதும் நிகழ்ந்திருக்கின்றன. அருளோடு ஒத்துவிட்டபின்னரும், இவ்வாறு எடுத்தபிறவி முடிகிற வரை வினைகள் போல்வன நிகழும். நல்வினையாயினும் தீவினையாயினும் அருளோடு ஒத்து நிகழ்தலின் அவற்றிற்குத்தனிப் பயன்எதுமின்றி அருட்பயனே பயனாயிருக்கும்; ஆகவே, அது உரியவர்களைத் தாக்குவதில்லை.

**அருள் நிலையிலும் வினை உண்டு**

**கணக்கிலாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே** - அளவில்லாக் கலைகளுக்கும் எட்டாத அடிப்படையான தெய்வக்காட்சியைத் திருக்கழுக்குன்றத்திலே வந்து நீ புலப்படுத்திக் காட்டியருளினாய் !

கணக்கு - அளவு - கலை என்றும் பொருள்படும்.

கலையறிவுக்கு எட்டாதது கடவுள் நிலை; ஆதலின் அக்கடவுள்காட்சியைக் 'கணக்கிலாத் திருக்கோலம்' என்றார். வினை ஒத்தபின் காட்சி கிட்டும். அதற்கு முன்பும் காட்சி கிட்டும்; ஆயினும் இரண்டுக்கும் வேறுபாடு உண்டு; கலைகளுக்கெட்டாத் திருக்கோலம் வினை ஒத்தபின்பே கிட்டுவது. வினைஒத்த நிலை 'சீவன்முத்தி' நிலை; ஆகவே அது சீவன்முத்தர்கட்கே விளங்கக்கூடியது. அக்காட்சிக்குப்பின் அமைதியைத் தவிர வேறு நிலை இல்லை. அந்நிலைக்கு முற்பட்ட காட்சி எல்லாம் அவரவர் பக்குவ நிலைகட்கு ஏற்ப

**அருட்காட்சி**

இறைவனால் அதிட்டிக்கப்பட்ட தேவர்களின் காட்சியாகவே இருக்கும்; இறைவனின் தனித்த பொருட்காட்சியாக இராது. அடிகட்குப் பெருந்துறையிலும், மதுரை முதலிய இடங்களிலும் குரு வடிவமாகவும், குதிரைச் சேவகனாகவும், மண் சுமக்கும் கூலியாளாகவும் வந்த காட்சிகளெல்லாம் அப்படிப்பட்ட அதிட்டான தேவர்களின் காட்சிகளேயாகும். அவை எல்லாம் கலைகளுக்கு எட்டக்கூடிய காட்சிகளாதலின், அவற்றைப்பற்றிய விளக்கங்கள் அடிகள் வாக்கில் அங்கங்கே வருகின்றன. கழுக்குன்றக் காட்சி கணக்கிலாக் காட்சி ஆதலின், விளக்க முடியாததாய், அவர்தம் நிலைக்கு மட்டுமே விளங்கியதாய், அதற்குப்பின் அடிகளுக்குத் தில்லையில் சென்று அமைதியடைகிற நிலையைக் கூட்டுவிப்பதாய் இருந்தது.

## இரண்டாவது 'பிட்டு நேர்பட மண் சுமந்த'

2. பிட்டு நேர்பட மண்சு மந்த
   பெருந்து றைப்பெரும் பித்தனே!
சட்ட நேர்பட வந்திலாத
   சழக்க னேன்உனைச் சார்ந்திலேன்;
சிட்ட னே!சிவ லோக னே!சிறு
   நாயி னுங்கடை யாய வெங்
கட்ட னேனையும் ஆட்கோள் வான்வந்து
   காட்டி னாய்கழுக் குன்றிலே!

பிட்டு நேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பெரும்பித்தனே- வாங்கிய பிட்டு எவ்வளவோ அவ்வளவே மண் சுமந்து வைகைக்கரை அடைத்த திருப்பெருந்துறையில் உறைகின்ற பெரிய பித்தனே!

நேர்பட-அளவுஒக்கும்படி; நிறத்தாலும் உதிர்தல் முதலிய தன்மைகளாலும் பிட்டை ஒத்துள்ள மண் என்றும், ஒப்புக்கொண்டு வாங்கிய பிட்டாகிய கூலிக்கு, ஒப்புகொண்டபடியே மண் சுமந்து என்றும் பொருள் கொள்வதுண்டு.

இறைவன் 'வந்தி' என்னும் பிட்டு வாணிச்சிக்காக மண் சுமந்தார். விரிவான அவ்வரலாறு திருவிளையாடற் புராணத்தில் இருக்கிறது. வந்தி என்றால் கடவுளை நாடோறும் வந்திக்கிறவள் அதாவது வணங்குகிறவள்; தன் குணமாட்சிக்காக, இறையன்புக்காக எல்லாராலும் வந்திக்கப்படுகிறவள் என்று பொருளாகும். 'வந்தி' ஓர் ஏழைப்பிட்டு வாணிச்சி; அவள் அன்புக்காக எட்டாத நிலையினனாய் மண் முதல் நாதம் வரையுள்ள முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்துள்ள இறைவன், முதல் தத்துவமாகிய மண்ணுக்குங்கீழே, அதாவது மண்ணைத் தலைமேல் சுமக்கின்ற நிலையில் கூலியாளாக வந்தான். அதனால் அவனுடைய பெருங்கருணைத் திறமும், வந்தியது அன்பின் மேன்மையும் புலப்படுகின்றன. ஏழை என்றும் பணக்காரர் என்றும் இறைவன் பார்ப்பதில்லை; அவர்கள் அன்பையும் குணத்தையுமே பார்க்கின்றான். (பிட்டு—'பின்' பகுதி; பிண்டு போவது பிட்டு; பிண்டு போதலாவது உதிர்தல்) ஈசன் உதிர்ந்த பிட்டை உண்டு, வந்தியின் வினைகள் உதிர்ந்துபோகும்படி செய்தான் போலும்! மக்கள் எப்போதும் நல்லதை எடுத்துக்கொண்டு மற்றதை ஒதுக்குவர்; தெய்வம் குறைகளை வாங்கிக்கொண்டு நிறைகளைக்கொடுக்கும். உதிர்ந்த பிட்டைக் கேட்டுக்கேட்டுப் பெற்று வந்திக்கு அருள் செய்ததே இதற்குச் சான்றாகும்.

### வந்திக்கு இரங்கல்

சான்றோர்க்கு உணவிட்டால் வினைகழியும்; வந்தி இறைவனுக்குப் பிட்டளிக்கவே அவள் வினை கழிந்தது. இறைவன் பிச்சாண்டியாகக் கோலம் பூண்டு பிச்சை எடுப்பதாகக் கூறுவது மக்களின் வினைகளைக் குறைக்கவே. ஆகவே மற்ற மூர்த்தங்களுக்கு வழிபாடு முதலியன செய்தாலும் செய்யாவிட்டாலும், பிச்சாண்டி விழா நடைபெறுகிறபோது கட்டாயம் சிறப்பான முறையில் படைப்பு முதலியன செய்து வழிபடவேண்டும். துறவிகள் எப்போதும் பிச்சை எடுத்தே உண்ணவேண்டும் என்று ஒரு விதி உண்டு; பிச்சை எடுப்பது, இடுவார் வினையைக் குறைப்பதற்கேயன்றி வேறில்லை; 'பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்பும் மிகை' என்ற வள்ளுவர் வாக்குப்படி, துறவிகளுக்கு அவர்கள்

### சான்றோர்க்கிடும் பிச்சையும் அதன் பயனும்

உடம்பும் ஒரு சுமை, அவர்கள் தம் உடம்பை மட்டும் நன்றாக வைத்துக்கொள்ளவேண்டும் என்று கருதார். காய், கனி, சருகு அருவி நீர்களாலேயும் அவர்கள் வாழமுடியும்; ஆதலால், அவர்கள் தம் உடம்பை வைத்திருப்பதும், அவ்வப்போது தவ நிலையினின்று எழுந்து மக்களுக்கிடையில் உலவிப் பிச்சை எடுப்பதும் தம் அருளுணர்வுகளை மக்களிடைப் பரப்புதற்கும், மக்களிற் பக்குவமுடையார் இடும் பிச்சை உணவை ஏற்பதன் வாயிலாக அவர்களின் வினைப்பளுவைத் தாம் ஏற்றுக்குறைப்பதற்குமே ஆகும். உண்மைத் துறவிகளைத் தவிர மற்றவர்கள் பிச்சை எடுப்பது கூடாது; அரசினரும் அவர்கள் பிச்சை எடுக்கும்படி விடக் கூடாது.

ஒருவர் வினையை மற்றவர் ஏற்கமுடியுமா? என ஐயம் நேரலாம்; இந்திய நாட்டு வரலாற்றில் 'பாபர்' என்னும் மொகலாய அரசன் ஒருவன் இறைவனை வேண்டித் தன் மகன் உமாயூனின் நோயைச் சிறிது சிறிதாகத்தான் ஏற்றுக்கொண்ட வரலாற்றைக் காணலாம். வழிபாட்டினால், எளிய ஓர் அரசனுக்கு இந்நிலை கைகூடுமாயின் அருளாளர்களுக்கு இது எவ்வளவு எளிது!

**ஒருவர் வினையை மற்றவர் ஏற்றல்**

பொது மக்களைத் துன்புறுத்தும் வினை சான்றோர்களை அவ்வளவு துன்புறுத்ாது; காட்டுத்தீயில் வாழை மரங்களும் வெந்து போகும்! தேவாசுரர்களை எல்லாம் துன்புறுத்திய நஞ்சு தன்னை ஏற்றுக் கொண்ட ஈசனை ஒன்றும் செய்யவில்லை அல்லவா? அருளுள்ளம் படைத்த சான்றோர்கள் மக்களின் வினைகளைத்தாம் ஏற்று நலம் செய்யவே முனைவர். இந்து முகம்மதியர் காழ்ப்புணர்ச்சிக்குக் காந்தியடிகள் தம் உயிரையே கொடுத்துவிட்டாரல்லவா?

**சான்றோரும் வினைகளும்**

எட்டாத நிலையில் உள்ள கடவுள், தனக்கென ஏதும் தேவையில்லாத இறைவன், அறியாமையில் துன்புறும் உயிர்களின் கீழ் நிலைக்கு இறங்கி அவற்றிற்குப். பிறவியைக்கொடுத்து உயர்த்தி

## ஆண்டவன் அருட்பித்து

வருவதோடு, அவற்றிற் பக்குவ முடைய உயிர்களின் வேண்டுகோட்கு இரங்கியும் உதவுகின்றான். அவற்றிற்கு அப்படி அருள் செய்வதன் மூலம் மற்ற உயிர்களை யும் ஈடேற்றுகின்றான். அருவம், அரு வுருவம், உருவம் என்னும் நிலைகளையும், முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்த தன் தனி நிலையிலிருந்து இறங்கிக் கட்புலனுக்குத் தோன்றும் வடிவத்திலும் அவன் வருவதுண்டு. வந்திக்காக மண் சுமக்கும் கூலியாளாகவும், சுந்தரருக்கு உணவுதரப் பிச்சை எடுக்கும் மறையோராகவும், மாணிக்கவாசகருக்குக் குதிரைச் சேவகனாகவும் இவ்வாறே பிறர் பலர்க்கும் விறகு வெட்டியாகவும் வேடனாகவும் பிறவாறாகவும் ஆண்டவன் தோன்றி அருள் செய்தான் என்றால், அவன், அடியார் மீது வைத்த பித்தன்றோ அதற்குக்காரணம்! அடைக்கலம் என்று தம்மை முழுதாக ஒப்படைப்பவர்கட்கு, அவன் எவ்வளவு கீழ் நிலைக்கு வேண்டுமானாலும் வருவான். பன்றிக்குட்டிகட்கும் தாயாக வந்து அருளியவனல்லவா அவன்? அருமைத்தாய் ஒருத்தி தன் மகள் வீட்டுக்குப் போகும்போது வழியிற்கிடைக்கும் 'சாணி' 'துடைப்பம்' முதலிய பண்டங்களையும் அன்போடு எடுத்துக் கொண்டு போவதைச் சிற்றூர்ப்பகுதிகளில் இன்றும் காணலாம். அன்பின் முதிர்ச்சியினால் நடைபெறுகின்ற செயல்கள் இவை. ஆண்டவன் வந்திக்காக மண்ணையும் (முதல்தத்துவத்துக்கும் கீழே வந்து) சுமந்தார் என்றால், அது அவன்றன் அருட்பித்தையே காட்டுகின்றது. அடியார்க்கு அருள் செய்வது அவன் நோக்கம், தன்பெருநிலையை அப்போது அவன் கருதுவதில்லை. கருமமே கண்ணானவர்கள் இப்படித்தான் இருப்பார்கள். எடுத்த செயலை முடிக்கப் பித்தர்போல இழிந்த நிலையில் இருந்தால், அது இழிந்த தன்மையென்று கொள்ளப்படாமல் இறைமைப் பண்பு என்றே கொள்ளப்படும். எவ்வளவு போாற்றலும் போறிவும் படைத்திருந்தாலும் உயிர்களுக்கு அருள் செய்கின்ற வகையில் தன் நிலைகருதாத அருட்பித்து ஆண்டவனுக்கும் அவன்வழிப் பட்டு ஒழுகுவார்க்கும் இருக்கிறது; அதுவே சிறப்புகளில் எல்லாம் முதன்மையானது; உலகை வாழ்விப்பது.

சட்டநேர்பட வந்திலாத சழக்கனேன் உனைச்சார்ந்தி லேன்? - சட்டத்துக்கு ஒத்து ஒழுகாத குற்றமுடையவ ஞகிய நான் உன்னை அணையாமலும், அணையமுடியாமலும் இருக்கின்றேன்; (ஆனாலும்)

சட்டம் - நடப்புமுறை; அரசியல் ஆணை. சடு - மிகுதி; தவறி (ஒழுங்கு முறைக்கு மிகுந்து - மீறி)ப் போகிறபோது மிகுதியான அதிகாரத்தினால் தடை செய்வது; சரி தப்புபார்க்க உதவுவது. 'சட்டதிட்டம்' என்பது வழக்கு. சட்டம்வேறு; திட்டம் வேறு. திட்டம் - அளவு; சட்ட என்பதற்கு விரைவாக எனப்பொருள் கூறுதலும் உண்டு. சழக்கு - குற்றம்.

**சான்றோரும் சட்டமும்**

சட்டத்துக்கு உலகம் கட்டுப்படுகின்றது. எவ்வளவு உயர்ந்த ஞானியாயினும் உலகியல் சட்டத்துக்கு உட்பட்டே நடக்க வேண்டும். சான்றோர்க்கு எந்த வரம்பும் கிடையாது; அவர்கள் எதைவேண்டு மானாலும் செய்யலாம் என்பன போல வெல்லாம் சொல்வது ஓரளவு உண் மையே என்றாலும் போலிகளால் மக் கள் ஏமாற்றப்படாமல் இருப்பதற்காக அவர்களும் உலகியல் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டே நடப்பார் கள். இன்றியமையாத மேல்நிலைமைகளிலேயே அவர்கள் தம் வழிச்செல்வர். இதுகருதியே அடிகள் தம்மைச் சட்டத்துக்கு ஒத்துப்போகாத குற்றமுடையவன் என்று தாம் அரசன் பொருள்களைக் கொண்டு திருப்பணிகள் செய்த செயலை எண் ணித் தம்மைப் பற்றிக் குறிப்பிட்டுக் கொள்ளுகிறார் போலும்!

**சட்டத்துக்கு மாறுபட்டவர்கள் நிலை**

அடிகள் கூற்றுப்படி சட்டத்துக்கு மாறுபட்டவர்கள் இறை வனைச் சாரமுடியாது என்று தெரிகிறது; அவர்கள் எவ்வளவு நன்மை செய்தாலும் பயனில்லை; எடுத்துக்காட்டாகக் கள்ள வாணிபத்தில் பெரும் பொருள் குவிக்கும் ஒருவர் பெரிய திருக் கோயில்களில் தேர் திருவிழா நடத்திவிடுவ தனுலோ, ஏழைகளுக்கு உணவிட்டு விடுவ தனுலோ இறைவன் அருளைப் பெற்று விட முடியுமா? அடிகளும், பின்னால் இறைவனால் காப்பாற்றப்பட்டாலும், அரசன் பொருளை உணர்ச்சி வசப்

பட்டுத் திருக்கோயிற் பணிகளில் செலவிட்டு விட்டமைக்காக, (அவர் நிலைகண்டும், நல்லசெயல்தானே என்று அவர் திருப்பணியின் மேன்மையினை அறிந்தும் அரசன் விட்டுவிட்டிருக்கலாமாயினும்) தண்டிக்கப் பட்டார் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

### காந்தியடிகளின் சட்ட மறுப்பு

காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கம் நடத்திச் சட்டத்தை மீறும்படி மக்களுக்குக் கற்பித்தார்; மக்களுக்கு மக்களை அடிமைப் படுத்திவைத்தவர்களால் தங்கள் வசதிக்காகச் சட்டமே தவறான அடிப்படையில் செய்யப்பட்டது என்ற காரணத்தினால். ஆகவே அவர் செய்தது உண்மையில் சட்ட மறுப்பு ஆகாமல், சட்டமல்லாத சட்டத்தை மறுத்ததாக ஆகின்றது.

### இயற்கைச்சட்டமும் மக்கள் வாழ்க்கையும்

இயற்கையும் ஏதோ ஒரு சட்டதிட்டத்துக்கு உட்பட்டே இயங்குகிறது; அதன் எந்தப்பொருளிலும், இயக்கத்திலும், ஓர் ஒழுங்குமுறை இருப்பதைக் காணலாம்; அம்முறையினின்று அது மாறுவதில்லை; ஓர் ஒழுங்கின்றி அவைகள் இயங்குமானால் மன்னுயிர்களின் வாழ்க்கை செம்மையாக நடைபெறுமா? உயிரினங்களில் மக்களைத்தவிர மற்றவைகளெல்லாம் இயற்கையை ஒட்டியே வாழ்ந்து வருகின்றன. மக்கள் மட்டுந்தான் இயற்கைச் சட்டங்களை மீறிச் செயற்கைவாழ்விற் புகுந்து பசியும் பிணியும் பகையும் மிகுந்து அல்லற்படுகின்றனர். இயற்கையின் ஆற்றல்களையும் தம் அறிவினால் கிளறித் தம் செயற்கை வாழ்க்கைக்குப் பயன் படுத்திக்கொள்ள முனைந்திருப்பதோடு அவ்வாற்றல்களைத் தம் அழிவுக்கும் இடமாக்கிக்கொண்டு செய்வகை அறியாது விழிக்கின்றனர். இயற்கையைக் கிளறித் தம் விருப்பம் போல் பயன்கொள்ள முனைந்ததனாற்றான் அதன் இயல்பான செல்வங்கள் இன்று மிகுதியாகக் குறைந்துவிட்டனவோ என்று ஐயுற்று ஆராய்கிற அறிஞர்களும் இருக்கிறார்கள். அதை அதன் இயல்பிலேயே கிளறிப்பயன் கொள்வது மக்கள் அறிவின் மாட்சிக்கு ஒத்ததே; இயற்கைச் சட்டத்துக்கு ஒத்துப்போகாத செயற்கைகள்

விலக்கப்பட்டால்தான் மக்கள் வாழ்வு நன்மை மிக்கதாக இருக்கும். முனிவர்கள் எப்போதும் இயற்கையின் சூழலிலேயே இருப்பார்கள். அதனால் அவர்கள் இறைவனை எளிதில் நேர் படுவார்கள்.

### அறத்துப்பாலின் முதன்மை

ஒழுங்காய் இயங்கும் இயற்கையை ஒட்டிய நல்வாழ்வில் ஒழுங்கு (சட்டம்) முதன்மைபெறும். திருவள்ளுவர் அதனால் தான் அறத்துப்பாலை முதற்கண்வைத்தார். அறம் என்பது ஒழுங்குதான் தொல்காப்பியர் இன்பவேட்கையால் உயிர்களிடத்துப் பொருள் முயற்சி தோன்றுகிறது, அது ஒழுங்காயிருப்பது நல்லது என்று இன்பமும் பொருளும் அறமும் என வைத்தார். அருளியல் உலகியல் என்னும் இரண்டு முறைகளிலும் உலகியல் அறம், ஒழுங்கு, சட்டம் வற்புறுத்தப்படுகின்றன. அருளியலுக்கும் அதுவே வழி என்றும் சுட்டிக் காட்டப் படுகிறது.

### அதிகாரியை விடச் சட்டத்துக்கே அஞ்சவேண்டும்

மக்களில்பலர் மேலுள்ளவர்களுக்காகவும் பழிக்காகவும் சட்டத்துக்கு உட்பட்டு ஒழுகுகிறார்கள்; எவரும் காணாத விடத்தில் தம்மனச் சான்றையும் கடந்து அதை மீறிவிடுகிறார்கள். சட்டத்துக்கு அஞ்ச வேண்டுமே ஒழிய அதை நிறைவேற்றுகிறவர்களுக்கு அஞ்சுவது கூடாது. திருக்கழுக்குன்றம் போகிறவர்கள் இவ்வுண்மைகளை அறிந்து சட்டத்துக்கு ஒத்துப்பழகி வாழ்க்கை நடத்த வேண்டும்.

சிட்டனே! சிவலோகனே! சிறு நாயினும் கடையாயவெம் கட்டனேனையும் ஆட்கொள்வான் வந்து காட்டினாய் கழுக்குன்றிலே - மேலானவனே! செம்மை நிலையோனே! புல்லிய நாயினும் கீழான கொடிய துன்ப நிலையுடைய ஏழையேனையும் ஆட்கொள்ளும் பொருட்டுத் திருக்கழுக் குன்றத்தில் வந்து நின் திருக்கோலக் காட்சியைக் காட்டி அருளினாய்!

சிட்டன் - மேலானவன். சிவலோகன் என்றது சிட்டன் என் பதையே மேலும் விளக்கியபடி. சிட்டன் என்றது பொது; சிவலோகன் என்றது சிறப்பு; மனிதர், அடியார் என்பது போல. மண்ணுக்குங் கீழே வந்தநிலையை நோக்கிப்பித்தனே என்றவர், அவன் அருட்காரியத்தை எண்ணிச் சிட்டனே என் கிறார். உண்மை, தூய்மை, நன்மை இவை படிப்படியே உயர்ந் தவை. இவற்றின் திரண்ட நிலையையே சிவலோகம் என்பது; தொழிலின் நிலையும், இலக்கிய நிலையும் அவற்றின் பரப்பை நோக்கித் தொழில் உலகம், இலக்கிய உலகம் எனப்படுவது போல, உண்மை, தூய்மை, நன்மை என்றும் செம்பொருட் சிவநிலை, அவற்றின் பரப்பும் மிகுதியும் நோக்கிச் 'சிவலோகம்' எனப்பட்டது. சிவம் - செம்மை, உண்மை தூய்மை நன்மை இவற் றின் நிறைவு. நாய் என்றாலே இழிவு, சிறுநாய் என்று பின்னும் இழிவாகத்தம்மைப் பணிவினால் குறித்துக் கொள்ளுகிறார் அடி கள். கட்டம் - மலம், (அழுக்கு) (கட்கு) வரம்பு, துன்பம். வரம் பாந்தன்மை ஒருசிறுமை; துன்பம்; அழுக்கு; மலம்.

## பெருமைக்குரிய வழி

பெருமை பெறுதற்குரியவர்கள் சிறு மையை உணர்ந்து பணிபவர்களே. 'பணி யுமாம் என்றும் பெருமை' என்றார் திரு வள்ளுவர். சிறுமையாவது தம்மிடமுள்ள குறைகள்.

## புறநானூறு காட்டும் பாதை

குறைகள் என்கிறபோது நாம் பெரும்பாலும் நம் சூழலையே எண்ணுகிறோம்; சூழலோடு நின்றுவிடாமல் உள்ளும் நோக்க வேண்டும். அகம் புறம் இரண்டும் சிறுமை நீங்கப் பெருமை உறவேண்டும். மக்கள் வாழ்வில் இன்று அரசியல் முதன்மை பெற்றிருக்கிறது; அதுபுற முயற்சிகளில் மட்டுமே நிகழ்கிறது. வல்லரசுகள் வெறும் புற நிகழ்ச்சிகளிலேயே கருத்திருத்தி உலகை அழித்து வருகின்றன; அகமுயற்சியும் வேண்டும்; "நன்னடை நல்குதல் வேந்தர்க்குக் கடனே" என்பது புற நானூறு. மக்களுக்கு நல்ல உணவு உடை உறையுள் முதலியன தருவதே அரசியலின் கடமை என்று கருதுகிற இக்காலத்த வர்க்கு, அரசினர் செய்யவேண்டிய முதன்மையான கடமை மக்களுக்கு அன்பு முதலிய உயர் குணங்களும் அவற்றால் நிலை

பெறும் ஒழுக்கமுமே என்று புறநானூறு வழிக்காட்டிக் கொண்டிருக்கிறது. இன்றுள்ள வாழ்வியற் குழப்பங்களெல்லாம் தீர வேண்டுமானல் இப் புறநானூற்றை எங்கும் அரசியல் இயக்கங்களின் கண்ணிலும் கருத்திலும் படும்படி பரவச்செய்தல் வேண்டும். அதனல், அவற்றின் கட்சிப்பூசல்களும், நேர்மைக் குறைவுகளும் ஒழியும். நாடு நலம் பெறும்.

**இறைவனின் இரக்கமும் இறக்கமும்**

உயிருக்குயிரான உறவினர்கள் அல்லது நண்பர்கள் இறந்து விட்டால் அவர்களை நினைந்து ஏங்குகிறவர்கள் சிலருக்கு இறந்தவர்களின்காட்சி கனவில் கிட்டும். ஆனல் இறந்த ஆவி தூய்மையானதாய் இருந்து நுண்ணிய ஒளியிடங்களில் நல்ல நிலையில் உலவுவதாயிருந்தால், கனவில் தோற்றுகிற போது, அங்கிருந்து இறங்கவேண்டியதாக இருக்கிறதே என்பதற்காக அதுவருந்தும். இறைவன் மிகவும் தூய்மையானவனுகவும், நுண்ணிய நிலையுடையவனுகவும் இருக்கின்றுன். அடியார்களுக்காக அவன் அவ்வுயர் நிலையினின்று இறங்கிக் கீழே வருகின்றுன் என்றுல், அது அவன் அடியார்கள் மாட்டு வைத்த பேரிரக்கத்தையே காட்டுகிறது. அதனல்தான் அடிகள், தம்மைச் சிறுமை யுடையவராக வைத்துப் பணிவினுல், "சிறு நாயினும் கடைப்பட்ட எனக்கும், மிக வுயர்ந்த நீ, உண்மையிலேயே உயர்ந்தவன் என்கிற காரணத்தால் இரங்கி (அருள் கூர்ந்து), இறங்கி (உன் நுண்ணிய நிலையிலிருந்து கீழ் இறங்கி) வந்து காட்சி கொடுத்தாய்! என்னே நின் போருள்" என்று சொல்லி வியக்கிற முறையில் இப்பாடலின் இறுதி யடிகளை அமைத்துள்ளார்

திருக்கழுக்குன்றம் இவ்வாறு நம் புன்மைகளைச் சிறிதும் பொருட்படுத்தாது ஞானம் வழங்கிப் புனிதப்படுத்துகிறது.

மூன்ருவது 'மலங்கினேன் கண்ணினீரை மாற்றி'

3. மலங்கி னேன்கண்ணில் நீரை மாற்றி மலங்கெ
டுத்தபெ ருந்துறை
விலங்கி னேன்வினைக் கேட னேன்இனி
மேல்வி ளைவத றிந்திலேன்
இலங்கு கின்றநின் சேவடிகள் இரண்டும்
வைப்பிட மின்றியே
கலங்கி னேன்கலங் காம லேவந்து காட்டி
ஞய்கழுக் குன்றிலே!

மலங்கினேன் கண்ணில் நீரை மாற்றி மலங்கெடுத்த பெருந்துறை விலங்கினேன் - குறுக்குவழியிலே தடிப் பாகச் சென்று மயங்கித் துன்பங்களை அடைந்த அடியேன் கண்களில் வடித்த நீரை மாற்றி, அடியேனது மலத்தை ஒழித்த அருட்பெரும் பதியாகிய திருப்பெருந்துறையை விட்டுப் பிரிந்து விட்டேன்.

பதிகத்தின் நோக்கம் இப்பாடலில் விளக்கப்பட்டிருக்கிறது;

**பாடலின் சிறப்பு**

திருவடி வைப்புக்குக் காரணமும், வழங்குதல் அடைதலாகிய நற்செயல் நற்பேறுகளும், திருப்பெருந்துறை திருக்கழுக்குன்றம் இவற்றின் தொடர்பும் பிறவும் இதில் குறிப்பிடப் படுகின்றன.

மலங்குதல் - மயங்கிக் குறுக்கிடுதல், குறுக்கிடுதலில் இரண்டு வகை; தாக்கிக்கொண்டு குறுக்கே போதல் (மலங்குதல்) விலகிக் குறுக்கேபோதல் (விலங்குதல்); எருமை குறுக்கே போனால்

**மலங்குதல்**

வலிவாக உரசிக்கொண்டு போகும், மலங்கும்; பறவைகள் குறுக்கே போனால் விலகிப்போகும், விலங்கும், மலங்குமீன் என்றொரு மீனுண்டு, தான் போகும்வழியே வலிந்து போவதனால்தான் அதற்கு அப்பெயர் வந்தது. எருமையும் மீனும் அப்படி இருக்கலாம்; மக்கள் அப்படியிருக்கலாமா? கூடாது; ஆனால் அருள்பெறாத மக்கள் அப்படித்தான் மலங்குவார்கள். வழியில் எவரேனும் எதிர்ப்படுகிறபோது விலகிப் போகாமல் விரைப்பாகக் குறுக்கே போவார்கள். அப்படியே பிறர் வாழ்க்கைக்குக் குறுக்கேயும் கேடு சூழ்கிற முறையிலும் போவார்கள்.

குறுக்கு வழியிற் போகிறவர்கள் அறிவு மயங்கியே அவ்வாறு செய்வார்கள். அவர்கள் தடிப்பான போக்கெல்லாம் மயக்கத்துக்குரிய பொருளை எதிர்ப்படுகிற நிலையில்தான். குறுக்கே செல்வதற்குக்காரணம் திறமற்ற அறிவு; மயங்கிய அறிவு; இராவணன் எவ்வளவோ தவமும் வலிவும் உடையவன்; ஆனால், ஆணவத்தடிப்பு மிக்கவன்; அவன் நெறி மயங்கி அழிந்ததாக அறிகிறோம். அப்படியே சூரனும் தேவர்கள் வாழ்வில் குறுக்

கிட்டுச் சிங்கமுகன் அறிவுறுத்தலையும் கேளாமல் நெறி மயங்கினன். இறுதியில் அழிவு எய்தினன்.

இப்பாடலால் ஆளுடைய அடிகள் தமது இளமைக் காலத்தில் அமைச்சர் வாழ்க்கையில் இருந்தபோது உலகியற் பதவிகளிலும் பிறவகைகளிலும் மயங்கி இன்புற்றிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இளமையில் அடிகள் நன்றாய்ப் படித்து அமைச்சர் பதவி பெற்றதும், அந்நிலை நேர்ந்திருக்கலாம் போலும்; என்றாலும், மயங்குகின்றோம் என்று தெரிந்து அவற்றிலிருந்து மீளவும், ஞான குரவரை எதிர்பட்டு அருள் மொழி (உபதேசம்) பெறவும் அவர் ஏங்கி ஏங்கி, அமைச்சர் நிலையிலிருந்து வேறுபடத் தக்க வளர்ப்பை நோக்கிக்கொண்டிருந்து, (திறமை நோக்கி அரசன் அவர்க்கு இடந்தராமலிருந்திருக்கலாம்) குதிரை வாங்க நேர்ந்தபோது திருப்பெருந்துறையில் திருவருளால் ஞான குரவரை எதிர்ப்பட்டுத் தம் நினைவிழந்து உணர்ச்சி வயமாகி உருகிச் சிவப் பணியிற் புகுந்துவிட்டார் தமது பழைய நிலையை எண்ணியே அடிகள், 'மலங்கினேன்' என்றும், அதனல் வடித்த கண்ணீரைப் பெருந்துறை மாற்றியது என்றும், அதாவது பெருந்துறையில் குருவடிவமாக வந்த இறைவன் மாற்றினர் என்றும். அத்தகைய பெருந்துறையைக் குருவின் மறைவுக்குப்பிறகு அவர் ஆணைப்படி பிரிய நேர்ந்தது என்றும் குறிப்பிடுகிறார்கள்.

> **அடிகளின் முன்பின் வாழ்க்கைகள்**

மலங்குதற்குக் காரணம் மலம். அதுகெடவே மலங்கிய காரணத்தால் வந்த துன்பக்கண்ணீர் மாறி விட்டது, பெருந்துறையில் இறங்கினர், மலம் நீங்கியது. மலங் கெடுத்த நிலை பெருந்துறையாயிற்று. குருவருள் பெருந்துறையிலேதான். அதாவது, அருள் இணக்கத்திலேதான்! புறத்திற் பெருந்துறை, அகத்தில் அருள் பரந்தவுள்ளம். புறத்தில் ஆசிரியர் எதிர்ப்பட்டார், அவரருள் மொழியினல் செம்மை விரிந்த வுள்ளம் வாய்த்தது; அவ்வுணர்ச்சி, ஆணவத்தை அழித்தது; அதாவது மலத்தைக் கெடுத்தது (மலம் - இங்கே ஆணவம்.)

> **மலக்கேடு**

மலங்குவது உயிர்களுக்கு இயல்பு. ஆனல் மலங்குகிறேம் என்று தெரிந்ததும் அதிலிருந்து மீள வேண்டும்; ஏங்கிக் கண்ணீர் விட்டுக்கதற வேண்டும்; கதறினல் அதை மாற்றி ஆளக் குரு வருவார். "அழுதடி அடைந்த அன்பர்" என்றே அடிகளுக்கு ஒரு பெயர் உண்டு. ஆகவே அவர்களைப் பின்பற்றி நாமும் நம் குறைகளை உணர்ந்து வருந்திக்கொண்டு புனித வாழ்விற் செல்ல வேண்டும்

**அதற்குரிய முயற்சி**

அழுவது என்பது, உலகியலில் பெரும்பாலும் நன்றி அல்லது வருத்தம் தெரிவிக்கிறர்களே முகமனுக்கு அதுபோல் அன்று; உள்ளபடியே உருகி நெஞ்சங் கரைய வேண்டும். கரைந்து தூய்மையில் அதாவது தூய் நினைவு சொற் செயல் களில் ஒன்றவேண்டும். அடிகளே "அழுதால் உன்னைப்பெறலாமே" என்கிறர் பிறிதோரிடத்தில். எது எதற்கோ அழுகிறேம்; பிறர்க்காகப் பிறர் முன்னிலையில் அழுவது போல் அழுகிறேம்; இறந்தவர்களை எண்ணி அழுகிறேம்; நாமும் இறந்து விடுவோமே என்பதையும் எண்ணமல் அழவேண்டியது நம் அழுகிய நிலையை எண்ணி; அதனல் உருக வேண்டியது நமது தடிப்பு நிலை. "நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றனே" என்பதனல் உருக்கமான அழுகை அருளை எளிதில் நம்மிடம் சேர்க்கும் என்று உணரலாம்.

**அழுகையின் பயன்**

இயற்கை ஆற்றலை, அருளை எண்ணினல் நமது அழுகிய சிறுமை நிலை நன்கு புலப்பட்டு உருக்கம் பெருகும். அமிழ்த மயமான இந்த உருக்க உணர்வு விரிந்து, உயிர்களிடத்து ஓடுகின்ற நிலையைத்தான் 'கண்ணேட்டம்' என்பர் சான்றேர். நாகரிகம் என்பதற்கே 'கண்ணேட்டம்' என்று பொருள்கண்ட நாடு தமிழ் நாடு. அருளை நினைந்து உருக உருக ஆணவம் கழலும். தடிப்பு அகன்ற மெல்லிய உள்ளத்தில் பிறர் மனம் நோகாதபடி நடக்கும் பேரன்பு நிலைமுகிழ்ப்பது இயல்பே! அதுதானே நயத்தக்க நாகரிகம்! அவ்வாறு கூறுகிறர் திருவள்ளுவர்.

**நாகரிகம்**

உருக்க உணர்வும் அதன் பயனான நாகரிக (கண்ணோட்ட) வாழ்வும் இயல்பாக நம்மிடம் அரும்பத் துணை செய்வது வழிபாடு. இயற்கையின் ஆற்றலையும் அதனால் உயிர்கள் பெறும் நலங்களையும் கருதக்கருத, அதைப்படைத்து இயக்கும் எல்லையற்ற பேரறிவும் பேரருளும் உடைய ஒரு பொருளின் உண்மையும் அதன் பெருமையும் நம் சிறுமையும் தெளிவாகத் தெரியும். வழிபாடு என்பது இவ்வாறு இயற்கை என்னும் அருள் நலங்களிலும் உயிர்களின் நலங்களிலும் கருத்தை இருத்துவதே. அதன் பயனே, மேற்சொன்ன நாகரிக வாழ்க்கை!

## வழிபாடு

இயற்கை நலங்களில் படிந்து இறை உணர்வு தலைக் கூடி அதன் பணிவிலும், பணியிலும் சிறத்தற்கே மூர்த்தி தலம் தீர்த்தங்களை முறையாக வழிபடுவது! இத்தகைய வழிபாட்டுக்காகச் செய்யும் திருப்பயணங்களைப் புரிந்து இயற்கை நலங்களில் திளைப்பதோடு, அங்கங்கும் நிகழ்ந்த ஆன்றோர் வரலாற்று நலங்களில் ஈடுபட்டு அவ்வவ்விடங்களில் அவர்கள் பெற்ற நல் உணர்வுகளை நாமும் பெற முயலலாம். திருப்பெருந்துறைக்குச் சென்றால், அங்கே மணிவாசகர் பெற்ற அருள் நலங்களை எண்ணி உருகலாம்; நமது மலங் கெட அது பெரிதும் உதவி செய்யும். திருவெண்காடு என்னும் திருவூருக்குச் சென்றால் அது மெய்கண்ட தேவரின் பெற்றோர் நன்மகவு வேண்டி நோன்பிருந்த இடம் என்ற உணர்வோடு வழிபட்டு, நன் மக்களை உலகுக்குதவத்தக்க அருளைப் பெறலாம், அல்லது நன் மக்கள் அங்கங்கும் தோன்றுக என்னும் நன்னினைவுங் கொள்ளலாம். இப்படியே ஒவ்வொரு திரு ஊருக்கும் தனிச் சிறப்பான பயன்கள் உண்டு. அவற்றைத் தக்கோர்வழி அறிந்து அங்கங்கே ஈடுபடவேண்டும். முடிந்த பரிபாக நிலையை வேண்டுவோர்க்குத் திருக்கழுக்குன்றம் ஏற்ற இடம்.

## திருத்தலங்களின் சிறப்பு

பெருந்துறையில் அறியாமை என்கிற ஆணவமலங் கெடக் குருவருள் மொழி (ஞானோபதேசம்) பெற்ற அடிகளார் ஞானத்தின் பயனாக வீடுபேறு அடைந்திருக்கலாம்; ஆனால் பெற்ற நலத்தைப் பிறர்க்கு வழங்காமல்

## ஆசிரியர் அருள்

அவ்வாறு ஆதல் என்பது அருளின் காரியங்களுக்கே மாறுபட்டதாதலின் குருவடிவாக வந்த இறைவனும் அடிகளை இவ்விடமே இருக்கச் செய்து பிரிந்துவிட்டான்.

அடிகளும் பல தலங்களுக்கும் சென்று தாம் பெற்ற திருவடி ஞானத்தைப் பின்னும் பெருக்கி முடிவாகப்பலருக்கும் பயன் படும்படி திருக்கழுக்குன்றத்தில் வைக்க நேர்ந்தது. இது கொண்டு ஆசிரியரின் அருள் எப்போதும் இவ்வாறு பணிகொள்ளுதலாகத்தான் இருக்கும் என்று உணரலாம்.

**பணி**

பிறக்கும் போதே பிறவி நலத்தாலும் பிறப்பின் அமைப்பு சூழல் நலத்தாலும் அமைந்தகல்வி அறிவு ஒழுக்கம் செல்வம் முதலியவற்றை மேலும் மேலும் பிறர்க்கு வழங்கவும், அதற்காக அவற்றைத் தக்கபடி வளர்க்கவும் முயலுவதே பணி. முடிவான அருள் நிலை இதனுல் தான் கிட்டும். ஆருயிர்த் தொண்டே ஆண்டவன் தொண்டு. அதை நினைப்பூட்டவே கோயில் குளம் முதலிய குறிகளும் பிறவும்.

**மக்கட் பேறு**

குடும்பத்துக்குக் குழந்தை வேண்டும் என்று எண்ணுகிறோம். சேர்த்து வைத்துள்ள பணத்துக்கும்; பெயருக்கு மல்ல; நாம் உலகத்துக்குச் செய்த நன்மையை மேலும் வளர்த்துத் தொடர்ந்து செய்ய என்று எண்ணவேண்டும். “தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது” என்கிறார் வள்ளுவர். நலம் அடைவது பிறர்க்கு நலம் செய்யவே; தன்னலம் பிறர் நலத்தை ஓம்பவே என்று கருதவேண்டும்.

**பொருள் வேட்கை**

இக்கருத்தோடு நாம் எத்தகைய நலங்களையும் அடையலாம்; அடைய முயலலாம். உணவு, உடை மற்றுமுள்ள உலகியல் நலங்களை எல்லாம் விரும்பலாம். ஆனல் அவற்றில் மயங்கித் திளைக்காமல் பிறர் நலத்துக்காகவே பெற்றுப் பயன் கொண்டு சிறந்து சிறப்பிக்கவேண்டும்.

**மாயையின் தன்மை**

உலகப் பொருள்கள் எல்லாம் மாயை. மாயை நம்மைக் கெடுக்கவும் எடுக்கவும் வல்ல மழை போன்றது. மும்மலங்களில் ஆணவமும் கன்மமுமே நம்மைக் கெடுப்பன; மாயை அவற்றிலிருந்து நம்மை விடுவிக்க வந்த கருவி! ஆனால் அம்மாயையில் மயங்கிவிட்டால் அதுவும் நம்மைக் கெடுத்துவிடும். மயங்காமல் தாம் அறிந்து பயன் படுத்திக் கொண்டால் அது நம்மை எடுக்கும்; (உயர்த்தும்). அறிவு மதுகையால் உலக நலங்களில் மயங்காமல் உயர்ந்து அவற்றை அடைந்து நலம் பயக்க முயலவேண்டும்.

**எடுத்துக் காட்டு**

எடுத்துக் காட்டாகப் பொருள் வேண்டும்; கல்வி அதனினும் முதன்மையாக வேண்டும். ஆதலின் இவற்றிற்குள்ள தரத்தை (வேறுபாட்டை) அறிந்து ஒன்றுக்கு மற்றொன்றைத்தக்கபடி பயன்படுத்தி வளர்த்து வழங்க வேண்டும்.

**செல்வமும் கல்வியும் உடலும் உணர்வும்**

செல்வம் கிளை விட்டால் அழியும்; கல்வி வளரும். உடம்பும் ஒருபொருள். அது உழைக்க உழைக்கத் தளரும்; உணர்வு பெருக்கப் பெருக்க வளரும். வளர்கின்ற கல்வியும் உணர்வும் ஆகிய பொருள்களை நாம் சேர்ப்பதில்லை. தேய்கின்ற செல்வத்தையும் உடம்பையுமே ஓம்புமுனைகின்றோம். நம் நினைவை, ஆற்றலை, நேரத்தை பெருமிதத்தை அவற்றிற்காகவே செலவழிக்கின்றோம். கல்விக்கும் உணர்வுக்கும் முதன்மைதந்து செல்வத்தை அதற்காகவே பயன் படுத்தவேண்டும். "பிறந்து மொழி பயின்றபின்னெல்லாம் காதல் சிறந்து" என்கிறார் காரைக்காலம்மையார். "பிறந்து செல்வம் பயின்றபின்னெல்லாம் உடல் சிறந்து" என்று சொல்லவில்லை. மொழி, காதல் என்பன முறையே கல்வியையும் உணர்வையும் குறிப்பன. இப்படிப் பெறுகின்ற கல்வியும் உள் உணர்வும் வையத்து வழங்கத்தக்கன.

"செவியறிவுறூஉ", "சொல்மருந்து" என்பன வெல்லாம் உள்ளுணர்வை வளர்ப்பன. மனமாசுகளைக் (நோய்களை) கழுவுவன. இத்தகைய பெருமருந்து கொடுக்கிற சான்றோர்களை உலகம் இன்று சரிவர மதிப்பதில்லை. இலேசாக (அலட்சியமாக) எண்ணுகிறது. குறிப்பாக நம்நாட்டில் அத்தகையோர்க்கு நல்ல ஆதரவேயில்லை. அதனால் இழப்பு உலகத்துக்கே தவிரச் சான்றோர்களுக்கன்று.

**சான்றோர் சிறப்பு**

விலங்கினேன் என்கிறபோது, விலங்கமுடியாத நிலையில் விலங்கிய ஏக்கம் புலப்படுகிறது. அருள் கிட்டிவிட்டாலும் அதை உலகோர்க்கு வழங்க வேண்டி இருத்தலின் குருவின் ஆணைப்படி விலக வேண்டி இருந்தது. மாயையில் மயங்காமல் அதன் மயக்கத்திலிருந்து நீங்கி உகுத்த கண்ணீரால் அருளும், அவ்வருளால் மலக்கேடும் உண்டாயின என்றாலும், பெருந்துறையில் ஆணவமலம் மட்டுமே கெட்டது; விளைந்த கன்ம மலம் கெடவேண்டுமல்லவா? பயன் கருதாப்பணியினாற்றான் அது கெடும். ஆதலினாற்றான் பெருந்துறையிலிருந்து விலகும்படி நேர்ந்தது.

**விலங்கல்**

வினை கேடனேன் இனிமேல் விளைவது நிந்திலேன்— இங்கே (திருக்கழுக்குன்றத்தில்) வினைக்கேடு உடையவனானேன்; மேல் விளையக்கூடியது இனி அறியப்படுவதில்லேன்; (தற்போதம் இன்மையால்) மேல் விளையக்கூடிய அருள் நிலை இனி என்ன என்று தெரியாதவனுமானேன்.

உலகியல் முடிந்த இடம் திருக்கழுக்குன்றமாதலின் அங்கே அடிகளாரின் வினை யனைத்தும் கெட்டது; அதாவது அதன் தாக்குதல் (மேல் விளைவு) அற்ற நிலை எய்தியது. இத்தகைய நிலையே வினைக் கேடுடைய நிலை; செயலே அவிந்த நிலை. மேல் விளைவு அற்ற நிலை. செயல் எப்போதும் நடக்கும்; முடிவான வீட்டு நிலையிற்றான் செயல் இராது. மலநிலையில் அதற்கு வினை என்றும், அருள் நிலையில் அதற்குப்பணி என்றும், தொண்டு என்றும்

**வினைக்கேடு**

பெயர். முன் நிலையில் அதன் தாக்குதலும் பெருக்கமும் (விளைவும்) உண்டு; பின் நிலையில் அவை இல்லை. முன்னரும் இது விளக்கப்பட்டிருக்கிறது. முதல் அடியில் அடிகள் தாம் எய்திய தூய்மை நிலையை, வளர்ச்சி நிலையை விளக்கி இருப்பதாலும், வினைக் கேடனேன் என்று வினை கெட்ட தன்மையையும் குறிப்பிட்டிருப்பதாலும் மேல் வினை விளைவற்ற நிலையை அவர்கள் எட்டிவிட்டார்கள் என்பது நன்றாகத் தெரிகிறது; தெரியவே மேல் விளைவு பற்றி அறிய முடியவில்லை என்பதை அறியவேண்டுவதும் (மேல் விளைவு ஒன்றுமில்லை ஆதலின்) இல்லை என்று கொள்ளவேண்டும். வினை கெட்ட இடத்தே அருட்பெருக்கமாகிய சிவானந்த விளைவு தோன்றும்; அவ்விளைவு யானென்னும் நினைவுக்கு (தற்போதத்துக்கு) எட்டுவதன்று; அவ்விளைவு தன்னுணர்வால் அறியப்படுவதில்லாமையால் அக்கருத்துந் தோன்ற, 'இனிமேல் விளைவதறிந்திலேன்' என ஆராமையாற் கூறினமையும் புலப்படுகின்றது.

**இலங்குகின்ற நின் சேவடிகள் இரண்டும் வைப்பிடமின்றியே கலங்கினேன்—மேலும் மேலும் ஒளி விட்டுத் திகழ்கின்ற நின் சிவந்த திருவடிகள் இரண்டையும் வைக்கும் இடம் தெரியாமல் கவலையுற்றேன்.**

### இலகும் சேவடி

இலங்குதல்-மேலும் மேலும் ஒளிவிட்டுத் திகழ்தல், நிழலாடுதல்; விளங்குதல் என்பது-இயல்பாக ஒளிவிட்டுக் கொண்டிருத்தல்; இலங்குதல் என்பது இயல்பாக உள்ள ஒளிமேல் பிறிதோர் ஒளிபட மேலும் விளங்கித்திகழ்தல். வைர ஒளி, நல்ல ஒளியில் மேன்மேல் ஒளிவிட்டுத் திகழும். சேவடி-சிவந்த திருவடி, தூயஞானம், மெய்யுணர்வு. இயல்பாக உள்ள உயிரறிவு மலமாசு நீங்கி ஒளிவிடத்தொடங்கியதும், அதன்மேல் அருள் ஒளி படப்பட, மெய்யுணர்வாகிய பேரொளி அதன்கண் அரும்பும். அது மேல்மேல் வளர்ந்து விரிந்து எல்லையன்றுத் திகழக் கூடியது ஆதலின் இலங்குந் தன்மை உடையது என்க.

இலகும் சேவடி இரண்டு என்பன உண்மையும் (சத்து) அறிவும் (சித்து). ஒன்றின் ஒன்று நீங்காத இவை இரண்டையும்

### சேவடி இரண்டு

பற்றினுல்தான் இன்பம் கிட்டும். உண்மையைப்பற்றுவதும் அதனை அறிவதும் இன்பமாதலை அறியாதாரும் உண்டா? சத்து சித்து என்னும் இவற்றின் இணக்கமே, அதாவது பிரிவற்றநிலையே ஆநந்தம். அதனுல் இவற்றின் கூட்டுணர்வைச் 'சச்சிதாநந்தம்' என்பது வழக்கு.

### சைவத்தின் சிறப்பு

உலக சமயங்களில் "சைவம்" இறைவனை 'மாதொருபாகன் என்று பிரியாப்பாகமாக வைத்து வழிபடுகிறது. உண்மையும் அறிவும் ஆகிய இவற்றின் ஒன்றிய நிலையையே அது இப்படிக் கொண்டிருக்கிறது. இது போலக் கொண்ட பிறிதொரு சமயம் உலகில் இல்லை. வாழ்க்கையின் மூலமாக இயற்கையில் அமைந்த இவ்விருவேறு ஆண் பெண் தன்மைகளைவைத்து உண்மை யறிவை வளர்ப்பது எவ்வளவு இயற்கையாகவும், விளக்கமாகவும், நுட்பமாகவும் இருக்கிறது!

### இருவேறு ஆற்றல்கள்

உலகுயிர்களை இயக்கும் மூலப்பொருள் இரண்டு பிரிவாக இருந்து ஒற்றுமையோடு காரியங்களைச் செய்கிறது. ஒன்று அருவாக இருக்கிறது; மற்ருென்று உருவாக இருக்கிறது. ஒன்று காரணமாக இருக்கிறது; மற்ருென்று காரியமாக இருக்கிறது. ஒன்று, கடந்த ஒன்ருக இருக்கிறது; பிரிதொன்று தெரிந்த ஒன்ருக இருக்கிறது. (சத்து) உண்மையாகவும் (சித்து) அறிவாகவும் உள்ள இவை இரண்டும் தனித்து நில்லாமல் பிரிவுக்கிடையே ஒன்றை ஒன்று பற்றிக் கொண்டு செயலாற்றுவதனுல்தான் உலகம் ஓர் ஒழுங்கில் இயங்கிக் கொண்டிருக்கிறது; பயனும் விளைந்து கொண்டிருக்கிறது. தனித்தனியே இருத்தலோ இயங்குதலோ இப்பொருள்களின் இயல்பன்று; அப்படியிருக்க எதுவில்லை; இயல்பாகவே அவை அப்படி மொச்சையின் இருபருப்புபோல ஒன்றிக் கொண்டிருக்கின்றன. இறையாற்றலை 'அம்மையப்பர்' என்பது இதனுற்ருன்.

### திருவள்ளுவர் விளக்கம்

திருவள்ளுவர் இவ்விரு மூலப் பொருளையும், அவற்றை அறிந்தோர், அவர்கள் அறிவுரை என்னும் நான்கையுமே தமது பாயிரத்தில் விளக்குகிறார். கடந்த ஒன்றை (ஒரு திருவடி) முதலதிகாரத்தினாலும், தெரிந்த ஒன்றை, உருவை, (பிறிதோர் திருவடி) இரண்டாம் அதிகாரத்தினாலும் விளக்குகிறார். கடவுள் வாழ்த்தும், வான் சிறப்பும் அம்மையப்பர் வழிபாடு என்றே சொல்ல வேண்டும். உண்மையைக் கடவுள் வாழ்த்தினாலும், தெரியாத அதை விளக்கும் மழையை (வாழ்க்கைக்கு உதவியாக இருந்து அதனால் உண்மையை அறியும்படி செய்கிற வானை) வான் சிறப்பினாலும் போற்றுகிறார். தெரியாத ஒன்றின் ஆற்றலால் மழை தெரியும்படி வருகின்றது. அதுபோலச் செயல் நடைபெற வேண்டும்; செய்வாரும் தெரியவேண்டும் என்பது கட்டாயமன்று; செய்கை ஆற்றலுடையதாக ஆக ஆக அதனைச் செய்வார் புலப்பட முடியாமல் இருத்தலே இயல்பாயிருக்கிறது. செய்வாரின் செய்கையே புலனாதல் இயல்பு; அப்போதுதான் அது நன்கு பயன்படும். உண்மையாய் அறிவாய் ஆனால் தம்முள் இணக்கமாய்ச் சேர்ந்திருப்பதுதான் இரண்டு திருவடிகள்!

### குருமார் இயல்பு

குருமார் தாம் அறிந்த உண்மைகளை (உபதேசங்களை) வழங்கத்தக்க பக்குவிகள் எங்கே எங்கே என்று தேடிக்கொண்டே இருப்பார்கள். சொத்து தேடிவிட்டால் அதை யாரிடம் ஒப்படைப்பது என்று மக்கள் கவலைப்படுகிறார்கள் அல்லவா? தேடுவதே பெருமுயற்சி; அதைத் தக்கபடி வைப்பது அதனினும் முதன்மையானது அல்லவா? புறப்பொருளுக்கே இப்படியானால் அகப்பொருளுக்கு இது இன்னும் எவ்வளவு முதன்மையாகின்றது. அதனால் அடிகளாரும் தாம் பெற்ற அருள் மொழியை, திருவடி ஞானத்தை எங்கே வைத்தால் நலமாக இருக்கும் என்று கலங்கினர் போலும்.

கலங்காமலே வந்து காட்டினாய் கழுக்குன்றிலே— அவ்வாறு கலங்காதபடி (திருவடிவைப்புக்குரிய பதி இதுவே என்று தெளியப்படுத்தும் முறையில்) திருக்கழுக் குன்றத்திலே வந்து நின் திருக்கோலக் காட்சியினைக் காட்டி யருளினாய்!

### நமது பேறும் கடமையும்

நல்லகாலமாக நமக்கு அருகில் 'சான்றோர் உடைத்து' என்று ஔவைப் பிராட்டியாரால் சிறப்பிக்கப்பெற்ற தொண்டை நாட்டில், திருக்கழுக்குன்றத் திருப்பதியில் திருவடி ஞானம் வைக்கப் பெற்றது. ஆண்டவன் அருளும் நமது பேறும் அப்படி இருந்திருக்கின்றன. ஆகவே, திருக்கழுக்குன்றம் நமக்கெல்லாம் ஒரு ஞானவைப்பு. மறைமலை வேதகிரி என்ற பெயருக்கு பொருந்தியுள்ளது. இதற்கு இலக்காகி நின்ற அம்மலை இந்நிகழ்ச்சிக்குப்பின் மேன் மேலும் சிறப்பும் புகழும் பெற்றது. பின் வந்த மூவர் பெருமக்களாலும் பாடல் பெற்றது. அருணகிரியாரும் நால்வர் பாடலையும் பெற்றுளிரும் அதனைத் 'தமிழ் வேத வெற்பு' என்று புகழ்ந்தார். பட்டினத்தார் முதலிய மற்றும் பலர் பாடல்களும் நூல்களும் அதற்கு அமைந்தன. ஆகவே திருநெறிச் சிறப்புக்கு திருமறை விளக்கத்துக்கும் உரிய நிகழ்ச்சிகள் எல்லாம் அவ்விடத்தை நடு இடமாகக்கொண்டு நடைபெறுமாறும் ஆண்டுக் கொருமுறையேனும் அங்கே அன்பர்கள் எல்லாரும் ஒன்றுபட்டு வழிபாடு ஆற்றவும், பல்வகைத் தொண்டுகளையும் எங்கும் பரவ இயற்றுமாறும் செய்வது மிகவும் நல்லது. அடியார்களுக்கு இது கடமையாகின்றது. அதனால் தான், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் ஆண்டுதோறும் ஆனி மகமாகிய மணிவாசகர் திருநாளில் அன்பர்கள் பலரைக் கூட்டிக்கொண்டு அங்கே சென்று வழிபாடும் திருமறைப் பெருவிழா முதலிய நிகழ்ச்சிகளும் செய்து வருகின்றனர். பலரும் அவர்களோடு இணங்கிப் பங்கு கொள்வது சிறப்பாகும்.

## நான்காவது "பூணேணாத தோர் அன்பு பூண்டு"

4. பூணே ணாததோர் அன்பு பூண்டு பொருந்தி
நாள்தோறும் போற்றவும்
நாணே ணாததோர் நாணம் எய்தி நடுக்க டலுள்
அழுந்திநான்
பேணே ணாதபெ ருந்து றைப்பெரும் தோணி
பற்றிஉ கைத்தலும்
காணே ணாத்திருக் கோலம்நீ வந்து காட்டி னாய்கழுக்
குன்றிலே

பூணேணாததோர் அன்பு பூண்டு பொருந்தி நாள் தொறும் போற்றவும் - மக்கட் பிறவியாலன்றி மற்ற பிறவி களினால் பூணமுடியாத ஒப்பற்ற எல்லையில்லாத பேரன்பை அணிகலனாகக்கொண்டு, அதிலிருந்து வேறு படாமற் பொருந்தி நாள்தோறும் நின்னைப் போற்றிவரவும்.

மாணிக்கவாசகர் அன்பும் நாணமும் ஒருங்கே எய்திப் பெருந்துறைத் தோணியைப்பற்றித் திருக்கழுக்குன்றக் கரையில் வந்து கரையேறியதாகத் தம் வாழ்க்கை அடைவை இப்பாடலிற் கூறுகிறார். இக்கரை ஏறியே அதாவது, கல்வி என்னும் பல் கடலின் எல்லையாகிய திருமறைப் பதியாம் மறை மலை முகடு ஏறியே தில்லையாகிய அருள் வெளித்தலத்தை அடைய வேண்டு வது முறைபோலும்.

**அன்புச் செல்வம்**

அன்பு என்பது நம்மிடமுள்ள ஓர் ஒப்பற்ற செல்வம், உயிர்ச்சொத்து. அன்பின் வழியது உயிர் நிலை என்கிறார் வள்ளுவர். அது உள் ளத்தில் எங்கோ புதைந்து கையாள முடியாதபடி இருக்கிறது. சிற்சில நேரங்களில் சிலரிடம் சிறந்து வெளிப் படுகிறது. மிகச்சிலரிடத்தில் பெரிதும் வெளிப்படுகிறது. அடிகள் போன்றாரிடத்தில் அது முழுதும் வெளிப்படுகிறது.

தாயாருக்கு நோய் கொடுத்து, நாமும் எவ்வளவோ துன்பப்பட்டு, அறியாமை, பசி, வெப்பம் நெருக்கடி இவற்றை எல்லாம் தாண்டிப் பிறந்தோமே! எதையோ சாதிப்பதற்காகத்தானே? பிறந்த பின்னரும் நம்மால் தாய்க்கு எவ்வளவு கவலை! தந்தைக்கு எவ்வளவு அல்லல் மற்றவர்களுக்கும் எவ்வளவு தொல்லை! நமது அகத்தின் சொத்தை நாம் பெருக்கிக் கொண்டோமா? பிறப்பின் பயன் தான் என்ன?

## பிறப்பின் பயன்

உடம்பு நம்மிடம் உள்ள கண்ணுக்குத் தெரிகிற சொத்து. இது பெற்றோர் தந்தது என்று எண்ணுகிறோம். உடம்பு இல்லையேல் ஒன்றுமே இல்லை. அதைச்சார்ந்த வீடு, வாசல், மாடு, மனை எல்லாம் கூட சொத்துதான்; அவை எல்லாம் புறச்சொத்துகள். நம் நண்பர்கள் உறவினர் முதலியோர், பொருள்கள் எல்லாம் புறப் புறச் சொத்துகள்; உடம்பு அகப்புறச் சொத்து. மன முதலிய கருவி காரணங்கள், நம் அகத்தே பெருகும் அறிவு, அன்பு முதலியன அகச்சொத்துகள். புறச் சொத்துக்களைப் போற்றவும் பாதுகாக்கவும் அகச்சொத்து வேண்டும். அகச் சொத்தைச் செம்மையாகப் பெறாதவர்கள் புறச் சொத்தையும் செம்மையாகச் சேர்க்கவோ, காப்பாற்றவோ முடியாது. எற்ற அறிவு, அன்பு முயற்சிகள் இல்லாத சோம்பேறிகளால் பொருள் சேர்க்கமுடியுமா?

## புறப்பொருளும் அகப்பொருளும்

உடம்பின் உள்ளே உயிர் என ஒரு பொருள் இருக்கிறது என்று தெரியாதவர் பலர்; மனம் என்று ஒன்று உண்டா? எங்கே? என்று கேட்பவர் பலர். பலர் என்றால் உலகாயத முதலிய சமயவாதிகள். உடம்பே உயிர் என்று சொல்லும் மதங்களும். உடம்பு வேறு உயிர் வேறு என்று கூறும் மதங்களும் உண்டு. புத்தமதத்தினர் உயிர் தனியேயில்லை என்பர். சமணர் 'உயிர்' தனியே உண்டு என்பர். சைவம்உயிரிலேயே ஆண் பெண் உண்டு. தக்க இரு ஆண் பெண் உயிர்கள்

## பல்வேறு மதங்களின் நிலை

தமக்குள் ஒன்று பட்டால் உயிர் நலங்களில் மிகுந்து பிறவி நீங்கி வீடுபேறெய்தும்; இயற்கையிலேயே அதற்குரிய அன்பு என்னும் கவர்ச்சி நிலைகள் அவற்றின் உயிரில் அமைந்துள் ளன என்றெல்லாம் கூறுகிறது. விரிவு ஈண்டுத் தேவையில்லை. இவ்வாறு பல்வேறு பட்ட கொள்கை யுடைய சமயங்களில் உயிர்வேறு உடல்வேறு என்றும் உயிரின் அன்பு நிலையும் எளிதாக அறிந்துகொள்ளுகிற நிலையில் உள்ள சைவசமயத்தில் நாம் பிறந்திருப்பதே ஒரு பெரிய பேறாகும்.

### நமது பேறு

### உயிர்ச் செல்வம்

உயிரின் தன்மை அறிவு, அது சிறிதாக இருப்பதால் பல வகையிலும் வளரத்தக்கது; அறிவு வளர்ந்து நயப்பட்டால் அதுவே அன்பு என்னும் உணர்ச்சியாகும். அன்பு தான் உயிரின் பெருகிய சொத்து; அகப் பொருள். திருவள்ளுவர் பொருட் பாலில் கல்வியால் வளர்ந்த அறிவு, இன்பத்துப்பாலில் கலையாகி வளர்ந்து மென்பதமுற்று, அறத்துப்பாலில் மிகவும் நயமுற்று அன்பாய்க்கனிந்து உருவாகிறது. அது வளர்வதற்கு உலகப் பொருள்கள் உதவியாக இருக்கின்றன. அவற்றைக் கையாண்டும் வழங்கியும் அன்பை நாம் மிகுக்கவேண்டும்.

### அறிவும் அன்பும்

கல்வி உயிரற்றது. அதற்கு அறிவில்லை; அதனுல் அதற்கு உணர்ச்சியும் இல்லை. அறிவுள்ள உயிர் களுக்கெல்லாம் உணர்ச்சி யிருக்கும் அறிவு வலிவானது; அது நயப்பட்டால் உணர்ச்சி என்று பெயர் பெறும். அதுவே அன்பு. அறிவுவேறு அன்பு வேறு என்பது பண்படாத தன்மையை யும் பண்பட்ட தன்மையையும் எண்ணியே ஆகும். அறிவு நன்மை தீமை அறியும், அறிந்து தீமையை நீக்கி நன்மையிற் செல்ல முயலும். எதிரில் வரப்போவதை ஓரளவு உய்த்துணரும். அவ்வளவே அறிவினுல் ஆவது. அன்பு நம் உடம்பில் ஒரு மின்னுற்றலை, அமிழ்த நிலையை உண்டாக்கும். பலவற்றையும் பலரையும் அருளையும் நம்மில் ஒற்றுமைப்படுத்திப் பயன் முகமாக் கும்; நயப்பட்ட அன்பால் மெய்யுணர்வு (ஞானம்) அரும்பும்;

அருள் அம்மலரில் மணக்கும். அறிவினுல் அளந்தறிய முடியாத வைகளை எல்லாம் உணர்ந்து கொள்ளுகிற நிலை மெய்யுணர்வு நிலையில் உண்டாகும்.

### கடவுள் உணர்ச்சி

நம்முடைய அறிவும் உணர்வும் தமக்கு மேற்பட்ட அறிவும் உணர்வும் உள்ள இடத்தில் ஈடுபடுகிறபோது மேன்மேல் விரிவடையும். ஆகவே நாம் எப்போதும் நமக்கு மேற்பட்ட நிலையில் உள்ளவர்களிடம் இணக்க மறிந்து இணங்கிக் கொள்ள வேண்டும்; எல்லாம் வல்ல இறைவனிடத்தில் நம் அறிவும் உணர்வும் ஈடுபட்டால் அவை தம் முழு வளர்ச்சியை அடைந்து அருளாய் மிளிரும். கடவுளுணர்ச்சியில்லாமற்போனுல் நம்மிடம் பிறர்க்காக இரங்கும் தன்மை இராது. அவ்வுணர்ச்சி நம்மையும் அறியாமல் நம்முள்ளே இருந்துக்கொண்டிருக்கிறது. கடவுள் இல்லை என்பார்க்குள்ளும் இவ்வுணர்ச்சி பதிந்து நின்று ஏதோ ஒரு வகையில் ஓர் அளவில் இரக்கம் ஈவு முதலிய தன்மைகளாக வெளிப்படுகின்றது. கடவுள் உணர்ச்சி மேற்பட மேற்பட அன்பின் முதிர்ந்த நிலையில் (கனிவில்) அவை தகுதியான நிலையில் தகுதியான அளவில் சிறக்கும் அருள் நலமும் பதியும்.

### அன்பும் அருளும்

அன்பு உயிரின் தன்மை என்றுமேலே கண்டோம். அருள் இறைமைத்தன்மை. அன்பு தன் முழு வளர்ச்சியை அடைந்தபின் அருள் நம்மிடம் பதியும். அறிவு முதிர்ந்தால், நயப்பட்டால் அன்பாகுமே தவிர அருளாகாது. அன்பு தன் முதிர்ந்த நிலையில் அருளைப் பெறும்; ஒரு பெண் வளரவேண்டிய அளவு பெண்மைத் தன்மையில் வளர்ந்தால், பின்பு தாய்மைத்தன்மை பெறுவதைப் போன்றது இது. தாய்மைத்தன்மை குழந்தையோடு கூடியது; அத்தகைய தாய்மை ஒரு பெண்மையால் மட்டும் பெறக்கூடியதன்று; மற்றொருவர் கூட்டுறவால் அடைவதொன்று. அதுபோல, உயிரின் பண்பாகிய அன்பு தானே முதிர்ந்து அருளாவதில்லை; இறைவன் பண்பாகிய அருட்பதிவைப்பெற்றே அருளாய்த் தழைக்கின்றது. "அருளென்னும் அன்பின் குழவி" என்றார் திருவள்ளுவர்.

அருளின் முதிர்ச்சியில் அவா அறும்; தன்னலம் இழந்து பிறர் நலமே கருதும் பெரும் பண்பாகிய (தியாகம்) துறவுள்ளம் தோன்றும். அதனால்தான் அன்புடைமையை இல்லறத்திலும் அருளுடைமையைத் துறவறத்திலும் வைத்தார் திருவள்ளுவர். அன்பே, பரிவு நல்லுணர்வு அடக்கம் ஒப்புரவு ஈகை என்னும் பல்வகைக் கோலங்களாக மக்கள் பால் நிகழ்கின்றது. விரிவு திருக்குறள் இல்லற வியலில் காண்க. அருளின் விரிவு துறவறவியலில் இருக்கின்றது.

**இல்லறமும் துறவறமும்**

அன்பை அகச் சொத்து என்று கண்டு, வாழ்வில் அதற்கு முதன்மை கொடுத்து அதனை 'அகப் பொருள்' என்றே பெயரிட்டு இலக்கண இலக்கியங்கள் செய்த தமிழ் மொழியையும் நாட்டையும் போன்ற வேறு மொழியும் நாடும் உலகத்தில் உண்டா? இப்படிக் கேட்பதனால் பிறநாடும் பிறமொழியும் மதிப்பற்றவையென்பதன்று. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருவகை மதிப்புண்டு. அவற்றில் தமிழ்க்கு உள்ள சிறப்பை எடுத்துக் காட்டுவதாகவே, இதனைக் கொள்ள வேண்டும். தமிழில்தான் பொருளிலக்கணம் இருக்கிறது. வேற்று மொழியில் இல்லை.

**தமிழின் சிறப்பு**

அன்பை அகம் என்றும் பொருளைப் புறம் என்றும் வழங்கி அன்பை வளர்க்கும் காதல் ஒழுக்கத்தை (அகமுயற்சிகளை) அகத்திணை (திணை-ஒழுக்கம்) என்றும், பொருள் முதலியவற்றைப் பெருக்கும். பிற முயற்சிகளைப் புறத்திணை என்றும் தமிழ் நூலார் வழங்குவர். சங்க இலக்கியங்கள் எல்லாம் இவ்வகப்புறப் பொருள் பற்றிய வாழ்க்கை நூல்களாகவே இருக்கின்றன.

**அகத்திணை புறத்திணை**

அகப்பொருளாகிய அன்பை வளர்ப்பார் அகவினத்தார் என்றும், அன்பை வளர்க்காதவர் எல்லாம் புறவினத்தார் என்றும் கூறப்பெறுவர். இவ்வழக்கைப் புலப்படுத்தியவர்கள் வடலூரடிகள்.

**அகப்புற இனத்தார்**

புலால் என்பது (அற்பம்) புன்மையானது. இது அந்தப் பெயரினாலேயே பெறப்படுகிறது. அன்புக்கு மாறான நெறியில் பிற உயிர்களின் உடம்பைச் செகுத்துப் பெற்ற புலால் உணவு

### புலாலுணவின் புன்மை

கொண்டு புற உடம்பை வளர்ப்பாரைப் புறவினத்தார் என்பது பொருத்தம்தானே? "தன்னூன் பெருக்கற்குத்தான் பிறிது ஊன் உண்பான் எங்ஙனம் ஆளும் அருள்?" என்று கேட்கிறார் திருவள்ளுவர். உணர்வைப்பெருக்க ஊன் உணவு உதவாது. பால், மோர் முதலியவற்றால் ஊனும் பெருகும்; உணர்வும் பெருகும். தயிரும், மோரும் வெண்ணெயும் தசையை மினுமினுப்பாக்கி வளர்க்கும். பாலும் நெய்யும் அறிவையும் உணர்வையும் பெருக்கும். சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் இவ் ஆனைந்தின் (பால், தயிர், மோர், வெண்ணெய், நெய்) நலங்கள்பற்றி வருகின்றன. ஊன் உணவு உணர்ச்சியைப் பெருக்காததோடு அதன்வளர்ச்சிக்குத் தடையாகவும் இருக்கிறது. ஆகவே மெய்யுணர்வைப்பெறும் பிறவிநோக்கத்துக்கே தடையாக உள்ள புலாலுணவை உடனே விலக்கிவிட வேண்டும்.

அன்பின் மின்னாற்றல் அனைவரையும் தன்பால் ஈர்க்கும்.

### அன்பின் ஆற்றல்

ஒரு தாய் தன் மகள் வீட்டுக்குப் போகும்போது வழியில் கிடைக்கும் தடைப்பம் சாணி முதலிய பண்டங்களையும் கொண்டுபோகும் பித்து நிலையை மேலே பார்த்தோம். இவை எல்லாம் அன்பின் கவர்ச்சி ஆற்றலால் நிகழ்வனவே. அன்புக்குக் கட்டுப்படாத உயிர்கள் இல்லை. "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்." என்றது இக்கவர்ச்சி நிலையை எண்ணியே ஆகும். தன்னைக் காப்பாற்றுவானின் ஏவல் வழி நின்று புலி சிங்கம் முதலிய முரட்டு விலங்குகளும் பணி செய்வதை நாம் (Circus) 'வட்டக் காட்சிகளில்' காண்கின்றோம் அன்றோ? அன்பே வடிவான மின்னாற்றல் மிக்க பெரியோரிடம் அவை பணிந்து நிற்கும் என்று சொல்லவும் வேண்டுமா? அப்பரடிகளைக் கொல்லுமாறு விடப்பட்ட யானை அவரை வலம் வந்து போனது எதனால்? அவர் தம் இடையறாப் பேரன்பு நிலையினால்தான்.

"செல்வத்துப் பயனே ஈதல்" என்பது ஆன்ருேர் வாக்கு. அகச்சொத்தாகிய அன்பை வளர்ப்பதற்காகவே புறச்சொத்தாகிய

### பொருளின் பயன்

பொருள்கள் இருக்கின்றன. பொருளை நன்முறையில் ஈட்டி அவற்றைக் கலைத்திறப்படுத்திப் பல்லோருக்கும் பயன்படுத்தி வழங்க வழங்க அன்பு வளரும். அன்பு இருக்கிறது என்ருல் அதற்கு அடையாளம் புறப்பொருள் களைத் தேவைக்கேற்பவும், சிறப்பு நோக்கியும் வழங்குவதே. வாயால் இன்சொல் கூறுவதோடு நில்லாமல் இயன்றதைக் கையால் உதவுதல் வேண்டும் என்பதும் அதனுல்தான். இங்கே மலர்மாலை பழம் முதலியன கொடுக்கிருர்கள். அவை அன்புக்கு அடையாளமே தவிர வேறு என்ன? பொருள்களைக் கொடுத்தும் கொண்டும் அன்பு முதலிய அக நலங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதற்காகவே அவைகள் இருக்கின்றன. பொருள் களில் பால், பழம், பூ முதலிய இயற்கைப் பொருள்கள் அன்பை மிகுதியாக வளர்க்கும். செயற்கைப் பண்டங்களையும் தேவை யறிந்து நல்கலாம்.

### பொருள் முயற்சியின் அடிப்படை

உடலை ஓம்புதற்கெனப் பொருளைத் தேடுதல் இழிவு; நோக்கம் எப்போதும் பெரிதாக இருக்கவேண்டும்; பிறர்க்கு வழங்குவதற்காகவே, பொதுப் பணிகளுக் காகவே தேடவேண்டும். அப்படித் தேடிய பொருள் அதற்கு உதவியாக இருக்கும். உடலை ஓம்புதற்கும் பயன்படாமற் போகாது.

### பொது உடைமை

பொருளைத் தேடுகின்றபோதே பொதுமை நோக்கங் கொள்ளுமாறு மக்கள் மனத்தைச் செம்மைப் படுத்தாமல், பழக்காமல், சட்டமுறைகளினுல் அதன் வழங்குதலைக் கட்டாயப்படுத்திப் பொதுமையாக்குவது மக்களின் உரிமை நிலைக்கு ஒத்ததாக இல்லை. தாமே தமது முயற்சியில் தேடிப் பிறர்க்கும் வழங்கி 'ஈத்துவக்கும் இன்ப'மாக மகிழ முடியாத நிலையில், பொருட் பொதுமை கட்டாயப் படுத்தப் பட்டால், மக்கள் வாழ்க்கை பொறிபோல் இயங்குவதன்றி

அவர்களின் அக நலங்கள் வளர்வதற்கு அந்நிலையில் வழி எங்கே இருக்கிறது? தமிழ் நாட்டின் பண்டைய அரசியற் போக்குக்கும் இது முற்றும் வேறுபட்டதாகும்.

**பண்டைத் தமிழரசு**

மன்னராட்சியாயிருந்தாலும் பண்டைத் தமிழரசு 'ஐம்பெருங்குழு, 'எண்பேராயம்' என்னும் அமைப்புகளால் குடியரசாகவும் திகழ்ந்து வந்தது. ஐம்பெருங்குழுவில் ஒன்று 'மாசனம்' என்பது. (சனம்-தமிழ்ச் சொல், சலம் என்பது போல. பரிசனம்-அணுக்கத் தொண்டர்) குடிமக்கள் அவை என்பதே அது. தமிழரசு மக்களுக்கு 'நன்னடை நல்குவது'; இயல்பு வாழ்க்கையை அளிப்பது. அதில் பொருட் பரிமாறுதல்களும் பிறவும் நிரவலாக அமையும். அருளுக்கும் அது வழி கோலும். மக்கள் நோக்கம் உயர்ந்து சென்றால் இழிந்த பொருள் போராட்டங்கள் நேரா அல்லவா? பொருளிலேயே மக்கள் நாட்டங் கொள்ளுமாறு செய்யாமல் அன்பு, ஒழுக்கம், அருள் முதலிய உயர் நிலைகளில் நாட்டங்கொள்ளுமாறும், அந் நிலைக்கு உதவியாகப் பொருளைத் தேடுமாறும் செய்தால் தனி உடைமை பொது உடைமை என்கிற வேறுபாடுகட்கே, போராட்டத்துக்கே, வழியிராது. அதனால்தான் 'நன்னடை நல்குதல் வேந்தர்க்குக் கடனே' என்று பண்டைத் தமிழரசில் நெறி காட்டப்பட்டது. உணவுக்கும் உடைக்கும் மக்களைப் போராட விட்டும், அவற்றிற்காக அவர்களைக் கட்டுப்பாடாக அடிமைப் படுத்தியும் மேல் நோக்கங்களே யில்லாமல் பொருள் நிரவுதலுக் காகவே 'அரசியல்' என்ற அடிப்படையில் இயங்கும் இக்கால அரசியல் எங்கே? பண்டைத் தமிழரசு நிலைகள் எங்கே?

**வரியும் பரிசும்**

அருளுக்காகப் பொருள் தாவித் தாவித் தன் தனித்தன்மை யையும் பொதுத்தன்மையையும் இழந்து ஏவல் செய்யும் போக் குத் தமிழரசில் உண்டு. நடைநல்கும் வேந்தனுக்கு மக்கள் தம் வருவாயில் ஆறில் ஒருகடமையை (அது தமது கடமை என உணர்ந்து) தாமே வரிந்து (விரும்பி) கொடுப்பர். வரி என்ற சொல்லிலேயே அது இருக்கிறது. வரிப் பணத்தைப் பெற்ற அரசன் அதைச் சான்றோர்க்கும் கலைஞர்க் கும் வாரி வாரி வழங்குவான். இத்தகைய மக்களும் அரசனும்

நிலவும் நாட்டில் வளத்துக்கும், கலைக்கும் அருளுக்கும் அமைதிக்கும் குறைவு ஏது? அதனால்தான் உலக வாலாற்றிலேயே காணமுடியாத வகையில் பண்டைய சேர சோழ பாண்டிய அரசர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தொடர்பாக அரசு செலுத்தி வந்திருக்கின்றனர்.

இனி, அன்பின் இயல்பாவது ஏதேனும் ஒரு தொடர்பு பற்றி நிகழ்வது. உறவு, ஊர், நாடு, மொழி, சமயம் முதலிய ஏதேனும் ஒரு தொடர்பினால் மக்கள் ஒருவர்க்கொருவர் அளவளாவுவர். பொருளைத் தமக்குள் பரிமாறிக்கொள்வர் உயிர் உடம்பின் தொடர்பால் இயங்குவது. உயிர்கள் தம் தேவைகளுக்கேற்பத் தம்முள் தொடர்பு கொள்ளும். எனவே அன்பு உயிரின் இயல்பு என்பது (அன்பின் வழியது உயிர் நிலை) தெளிவாகின்றது.

**அன்பும் உயிரும்**

தேவைகளினால் உயிர்களுக்குள் தொடர்பும் அன்பும் ஏற்படுவது போலவே பிணக்கும் ஏற்படும். ஆகவே, தேவைகள் உள்ளவரையில் அவை எவ்வளவு சிறிய தேவையானாலும், எவரிடமேனும் சிறிதாவது கருத்துவேறுபாடும் பிணக்கும் இருந்தே தீரும். தேவைகள் குறையக் குறையக் கருத்து வேறுபாடும் பிணக்கும் நீங்கும். பிணக்கில்லாதவன் இறைவன் ஒருவனே. காரணம் அவன் தேவையற்றவன். பிறப்பறுக்கும் நோக்கமுடைய துறவிகளுக்கு உடம்பும் மிகை ஆதலின் அவர்களுக்குத் தேவைகள் மிகமிகக் குறைவாக இருக்கும். ஆகவே, அவர்கள் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் பிணக்கற்ற பெரு நிலையில் நின்று உலகுக்கு அருளால் (தியாகத்தால்) நன்னெறி காட்டிவருவர்.

**கருத்து வேறுபாடு**

பிறவிச் சொத்தாக இருந்தாலும் 'அன்பு' என்பது அறியாமையினாலும் தேவை வேட்கைகளினாலும் எங்கோ புதைந்து கொண்டு எளிதில் வெளிப்படாததாய் இருக்கிறது. ஆகவே தான் அதைப் 'பூணாத அன்பு' என்றும், பூண்டு விட்டால் அதுவே ஒப்பற்ற செல்வமாய் நம்மை உயர்த்துமாதலின்

**பூணாத பேரன்பு**

'ஓர் அன்பு' என்றும் சிறப்பிக்கிறார் அடிகள். பொருந்திப் போற்றுகின்ற கண்ணப்பர் போன்றார் அன்பு எவ்வளவு பெரிதாய் எல்லையற்றதாய் இருக்கவேண்டும். அது இறைவனையே நேரில் இழுத்து வரும் ஆற்றல் உடையது. அருள் நிலையே போல் வது அது. அன்பு முற்றிய நிலையில் அருள் இயல்பாய் இடங் கொள்ளும். அறிவு நிலையில் இறைவனைத் தெளிந்தால் போதாது; அது பொருந்துவதாகாது. அன்பு நிலையில் பொருந்தி(பக்தி செய்து) நாள் தோறும் போற்றவேண்டும். 'பொருந்தி' என்ற சொல்லும் 'நாடோறும்' என்ற சொல்லும் எண்ணத்தக்கவை. மறந்து மறந்து நினைக்காமல் தொடர்பாக இறைவனை நினைந்து பத்தி செய்யவேண்டும்.

நாணுதோர் நாணம் எய்தி நடுக்கடலுள் அழுந்தி நான்—நாணுதற்கரிய கீழான நாணத்தை அடைந்து பிறவியாகிய உலகியல் கடலின் நடுவில் அழுந்தி விட இருந்த நான்.

## நாணம்

கெட்டதிலே போகாதபடி தடுக்கும் நிலையில் நம்மிடத்திலே உள்ள ஒரு நல்லியல்புக்கு 'நாணம்' என்று பெயர். இருக்கவேண்டிய தன்மைகளில் ஒன்று அது. இறைவன் அருளால் அது நம்பால் அமைந்திருக்கின்றது. பெண்களிடம் சிறப்பாக இருக்கவேண்டிய நல்ல தன்மைகளில் அதுவும் ஒன்று.

## அதன் தன்மை

அன்பு முதிர முதிர நாணம் குறைந்து கொண்டே வரும். அன்பு கெட்ட வழிகளிலே போக விடாது ஆதலின், தனக்கு வேலையற்ற நாணம் மறைந்து விடுகிறது. காதலர்கள் நிலையில் நாணத்தின் மறைவு நிலையை நன்கு காணலாம், முதல் நிலையில் தமக்குள் அன்பிருப்பினும் காதலர் ஒருவரை ஒருவர் கண்டு நாணமுறுவர். அன்பு முதிர முதிர, தமது ஒற்றுமை இன்றியமையாதது என்ற நிலை வரவர நாணம் குறைந்து அடிக்கடி காணவும் பேசவும் தலைப்படுவர். அவர்களுக்குள் இணக்கம் நேர்கின்றபோது முழுதும் மறைய வேண்டிய நாணம்; அணையும் விளக்குபோல, மிகுந்து நின்று தன்னைச் சிறப்பாக உடையவர்தம் கண்களைப் புதைந்துக்

கொள்ளுமாறு செய்யும். அந்நிலையில் மற்றவர் இணக்கம் முனைந்து முந்துதலும் நாணமும் அகலும்.

### இரண்டறும் நிலை

இதே நிலை அருளிலும் உண்டு. அன்பு தொடர்புடையோரிடம் நிகழ்வதாகலின் அந்நிலையில் இரண்டு என்னும் உணர்வு இருக்கும். அதன் முதிர்ச்சி நிலையில் இரண்டு என்கிற உணர்வு அழியும். அந்த நிலை. அருள் கால் கொள்ளுகிற நிலை. இரண்டென்கிற (துவைத) நிலைமாறி ஒன்றென்கிற நிலை (அத்வைத பாவம்) வருகிறபோது அந்தத் 'துவைத' உணர்ச்சி சற்றுத்தலை தூக்கி நின்றொழியும். அன்பின் முதிர்ச்சியால் கண்ணீர்வடிக்கிறபோது பிறர்காணுகிறார்கள் என்னும் (துவைத) இரட்டுணர்வு தோன்றினால் நாணம் வரும். அருள் கிட்டி விட்டால் அத்தகைய நிகழ்ச்சிகளில் நாணம் இராது. தன்னைமறந்த தனிநிலை அது.

### பெருந்துறையில் அடிகள் நிலை

அரசன் பொருளோடு திருப்பெருந்துறை சார்ந்த அடிகட்குச் சிவப்பணியில் நாட்டமும், அதேநோத்தில் உலகியல் நிலைகளை எண்ணிப் பணத்தைக் கையாள நாணமும் ஏற்பட்டிருக்கும் போலும்; பின் குருவின் காட்சி கிடைத்து அவர் அருள் மொழி பெற்றதும் தன்னை மறந்து, பரிசனங்களை மறந்து சிவப்பணியிலேயே ஒன்றி விட்டார். அறிவு நிலையிற் பார்க்கிறபோது என் அன்பு நிலையில்கூட, அவர்கள், அரசன் பொருளைக் கையாண்டது தவறுதான். அருள் நிலையில் நிகழ்ந்த செயலுக்கு அதற்குக் கீழ்ப்பட்ட நிலைகளின் நீதிகள் எப்படிப் பொருந்தும் ?

### அதற்குரிய அமைதி

தூக்கநிலையில் ஒருவர் பொருளைப் பறி கொடுத்து விட்டால் எப்படி பறி கொடுக்கலாம்? கெட்டியாகப் பிடித்துக் கொள்வதற்கென்ன? என்று கேட்பதில்லை. அப்படி நிகழ்வது இயல்புதான், ஆனால் தூங்கியதுதான் தவறு என்று சொல்லுவார்கள், இரங்குவார்கள். இங்கே, அருள்நிலைக்கு ஏறுதல் தவறாகாது ஆதலின், அந்நிலைக்கு ஏறி

அடிகள் செய்த செயல்களைக் கீழ்நிலைகளிலிருந்து தவறு என்று சொல்லுதல் பொருந்தாது; இயல்பு என்றே கொள்ள வேண்டும்; போற்ற வேண்டும்.

அன்பின் முதிர்ச்சி நிலையில், இயல்பாகவே தமதுள்ளம் சிவப்பணியில் ஈடுபட, அதே நோக்கில் (துவைத உணர்ச்சி) உலகியல் நிலைகளை எண்ணி, அரசன் பொருள்களைக் கொண்டு இறைபணி செய்வது நம் பெருமைக்கு இழுக்கு என்கிற நாணம் வந்து, இரண்டுக்கும் இடையில் (நடுக்கடலில்) அழுந்திப் போராடிக் கொண்டிருக்கிறபோது, பெருந்துறைநாதனின் (தோணி) அருள் கிடைக்கவே நாணம் அகன்று உலகியற்கடலில் அழுந்தாமல் அருளியற் றோணிபற்றிக் கழுக்குன்றம் போந்து முத்திக் கரையில் ஏறிவிட்டார் அடிகள்! இந்த அடைவையே பின்னுள்ள வரி விளக்குகின்றது.

பேணுத பெருந்துறைப் பெருந்தோணி பற்றி உகைத்தலும - போற்றுதற் கரிய திருப்பெருந்துறையின் (நாதனுகிய நின்) பெரிய திருவருள் தோணியைப்பற்றிச்செலுத்துதலும்.

நடுக்கடலுள் தோணி கிடைப்பது என்றால் அது எளிதாகுமா? ஆதலினாலும், உலகியல் முன்னிலையில் போற்றப் படாதது எனவுங் கருதத்தக்க காரணத்தாலும் 'பேணுதது' என வந்தது.

தோணி-உலகியல் நிலையிலிருந்து அருளியல் நிலைக்கு ஏற்றிய குருவருள் மொழி. பெருந்துறையில் கிடைத்ததனல் அதைப் பெருந்துறைத்தோணி என்றூர். உகைத்தல்-செலுத்தல், இது அருள் பெற்ற பின் யாத்திரை செய்ததைக் குறிக்கின்றது.

காணுத் திருக்கோலம் நீ வந்து காட்டினுய் கழுக்குன்றிலே - எளிதிற் காணக்கிடைக்காத நின் திருக்கோலக் காட்சியை நீ திருக்கழுக்குன்றிலே வந்து காட்டியருளினுய்!

நான், நீ என்பன

இரண்டென்கிற (துவைத) நிலையை விட்டு இரண்டற்ற (அத்துவைத) நிலையை அடைகிறபோது செய்யப்பெறும் "அது (நீ) ஆகிருய்" (தத்துவமசி) என்னும் 'சோகம்பாவனை'யை நினைப்பூட்டுகிற வகையில், இப்பாடலின் பொருளுக்

கேற்ப "நீ" என்னும் சொல் வருகின்றது. இவைகள் முறையே துவைதங் கடந்த வேதாந்த சிந்தாந்த நிலையில் அமைபவை!

## பாடலின் சிறப்பு

இப்பாடலில் தம் அடைவின் வழியே உயிர் இறை உறவு, அன்பு அருள் உறவு, துவைத அத்வைத உறவு, பெருந்துறை கழுக்குன்ற உறவுகளை மணிவாசகப் பெருமான் இனிது விளக்கி இருக்கின்றார்.

## ஐந்தாவது "கோலமேனி வராகமே"

5. கோல மேனிவ ராக மே!குண மாம்பெ ருந்துறைக்
கோண்டலே
சீல மேதும றிந்தி லாதவேன் சிந்தை வைத்த
சிகாமணி
ஞால மேகரி யாக நானுனை நச்சி நச்சிட வந்திடும்
கால மேஉனை ஓதநீ வந்து காட்டி னாய்கழுக்
குன்றிலே!

கோலமேனி வராகமே! குணமாம் பெருந்துறைக் கொண்டலே—ஒருகால் அழகிய மினு மினுப்பான உடம்புடைய தாய்ப் பன்றி வடிவமாக வந்து எளிய பன்றிக்குட்டிகளுக்குப் பால் ஊட்டிய கருணை வள்ளலே! இந்நாளில் திருப்பெருந்துறையிற் கீழ்முகில்போலக் குரு வடிவமாக வந்து அருள் பொழிந்து காத்த குணச் செம்மலே!

கோலம்-அழகு, மேனி-உடம்பு, மினுமினுப்பானது.

இறைவன் தாய்ப் பன்றியாக வந்து பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தாரென்பது திருவிளையாடற் புராணத்தில் வருகின்றது. பன்றிகளில் வெள்ளைப்பன்றிகளும் உண்டு என்றாலும் கோலமேனி வராகம் என்று இங்கே குறிப்பிட்டது கருப்பு நிறமுடைய பன்றியைத்தான். என்னை? இந்நாட்டிலுள்ள பெரும் பாலும் அந்நிறமுடையதே யாதலாலும், அருள் செய்யும் அம்மையின் நிறம் கறுப்புதான் ஆதலாலும் என்பது. கறுப்பிலும் மினு மினுப்பான கறுப்பு உண்டு. நீலம், பச்சை முதலிய

**நிறங்கள்**

அழகிய நிறங்களும் கறுப்பின் பகுதிகளே. கறுப்பு பெண் நிறம்; சிவப்பு ஆண் நிறம். நிறம் நெருப்பின் தன்மையுடையது. அதன் வீறும் தண்மையும் ஆண் பெண்ணாகக் கொள்ளப்பெறும்.

### ஆணவமும் தாணுவும்

உயிர்களிடத்துள்ள ஆணவம் (அறியாமையை விளைவித்த வின்) இருட்டு நிறம் உடையது. இறைவன் ஒளியுடையவன். இறைவனின் கருணையொளிக்கும் மலத்தின் இருட்டுக்கும் எப்போதும் போராட்டம் நிகழ்ந்துகொண்டேயிருக்கின்றது. உலகத்தில் நடைபெறும் போராட்டங்களெல்லாம் இந்தப் போராட்டத்தின் மறு படிவங்களே. ஆணவத்துக்கு எதிர் தாணு (இறைவன்). இவற்றிற்கிடையில் உயிர்கள் சிக்கிக்கொண்டிருக்கின்றன. அவை, தம் சேர்க்கைக் கேற்ப இயங்கும். ஆணவத்தோடு சேர்ந்திருக்கிறபோது அதற்கேற்ற செயல்களும் தாணுவோடு சேர்ந்திருக்கிறபோது அதற்கேற்ற செயல்களும் செய்து முறையே துன்பமும் இன்பமும் பெறுகின்றன.

"ஆணவத் தோடத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணு வினேடத்துவித மாகுநாள் எந்நாளோ?
—தாயுமானூர்

### தாணுவின் கருணை

இறைவன் மிக்க கருணை உடையவன் ஆயிற்றே? எல்லா வல்லமையும் அவனுக்கு உண்டே? ஏன் ஒரே நாளில் அவன் எல்லா உயிர்களையும் வீடு பேறடையுமாறு செய்யக்கூடாது? ஒருவர்க்கு முன்னும் மற்றவர்க்குப் பின்னுமாக அருள் செய்வது ஏன்? என்றெல்லாம் தோற்றலாம். ஆணவமும், பேராற்றல் படைத்தது. முரட்டுக்குதிரையை அதன்போக்கில் ஓட விட்டுப் பின்னொரு நேரத்தில் அது இளைத்துவரும் நிலை தெரிகின்றபோது அதனை அடக்குவது போலத் தாணுவும் உயிர்களின் ஆணவமருள் நிகழ்ச்சிகளுக்குத் துணையிருப்பது போல் இருந்து பின் தன்வயப்படுத்திக் கொள்ளும். ஆணவத்துக்குள்ள ஆற்றல் எவ்வளவு பெரிதாக இருந்தாலும், அது அறியாமையாகிய இருள் தன்மை உடையதாயிருப்பதாலும், தாணுவின் செயல்கள் கருணைமிக்கதாய் அறிவின் திறத்தால் ஒளியுடையதாய் இருப்பதாலும் இறுதி வெற்றி

எப்போதும் தாணுவினுடையதாகவே இருக்கும் என்பதில் எதும ஐயமில்லை. செம்பிற் களிம்புபோல உயிர்களிடத்து இயற்கையாக உள்ள மலத்தை நீக்குவது எளிதாகுமா? கருணையினால் இறைவன் அதைத் தன் பெரும் போராற்றல்கொண்டு நிறைவேற்று கின்றான்.

தாணுவுக்கும் ஆணவத்துக்குமாக நடைபெறும் உலகப் போராட்டங்கள் குறையச் சமய இயக்கம் செம்மையாகப் பரவவேண்டும். திருவள்ளுவர் நெறியில் நின்று சமயவெறியின்றி அவற்றின் உண்மைகளைப் பரப்பவேண்டும். மற்ற இயக்கங்களால் புறத்திலேமட்டும் நிகழும் சீர்திருத்தங்களெல்லாம் அகத்தின் அடிப்படையும் ஆதரவும் இல்லாமற் போதலால், உரிய நெறியில் நிகழ்வதுமில்லை; நிலையான பயன்களைச் செய்வதுமில்லை. சமய இயக்கத்துக்குள் அடங்காத செயல்களோ, சீர்திருத்தங்களோ இல்லை என்றே சொல்லலாம். ஒரு குடும்பம் முழுதும், குழந்தைமுதல் முதியோர் வரையிலும் இருபாலாரும் ஈடுபடத்தக்கது சமய இயக்கமே. சமய இயக்கமே பெண்டிர்க்கு இன்னும் முதன்மையானது. எல்லா நிகழ்ச்சிகளையுமே சமய இயக்கங்களில் அடக்கி நிறைவேற்றுவது நல்லது. காலத்துக்கேற்ற முறையில் இன்று சமய இயக்கத்தை திறம்பட நடத்துபவர்களில் ஒருவராகச் சங்கர மடத்துத் தலைவர் சிறந்து நிற்கிறார்.

### சமய இயக்கம்

இறைவனது ஆணவமல அழிப்புவேலை, அவன் அருளால் (சக்தி) நடக்கிறது. இருள் நிறமுள்ள ஆணவ மலத்துக் கிடையிலே நுழைந்து வேலை செய்து உயிர்களைக் கழுவி எடுக்கவேண்டியிருப்பதனால் அருட் சக்திக்குக் கறுப்பு நிறம் சொல்லப்படுகிறது. முன்னவன் உருவமும் அருவமும் (அருவமும் உருவ வடிவங்களுள் ஒன்று. கண்ணுக்குத் தெரியாத உருவம்) தனி நிலையில் நிற்க, அவன் சக்தியே மாயையின் துணையினால் உருவங் கொண்டு உலகுயிர்களைப் படைத்து ஐந்தொழில் நடத்துகிறது. உருவங்களெல்லாம், பெரும்பாலும் பயன்படுகிற திரட்சி நிலை எல்லாம் அவ்வருளில் திருவிளையாடலே! திரண்ட ஆற்றல் மிக்கனவெல்லாம் கடுமையாகவே இருக்கும். ஆழமான நீர் கறுப்பாய் இருக்கின்றது; மழை முகில் கறுப்பாய் எழும்; செழிப்பான

### அருளின்தன்மை கறுப்பு

பயிர் கருமையோடிய பசுமையில் திகழும். ஆற்றல் மிக்க மயிர் கறுப்பாகவே இருக்கும். அம்மை கறுப்பு; மாயை-கறுப்பு; மாயன் என்னும் திருமால் கறுப்பு. இவ்வியைபு பற்றியே திருமாலும் அம்மையும் அண்ணன் தங்கை என்று சொல்லப் பெறுவர்.

## கோலம்

இறைவன் தாய்ப் பன்றியாக வந்தது கோலம். திருமால் பன்றி அவதாரம் எடுத்தார் என்று ஒரு கூற்று உண்டு. அவதாரம் என்பது, உலகுக்கு உதவும் பொருட்டு மேல் நிலையிலிருந்து கீழிறங்கி வருதல்; அந்நிலையிற், கருவிற் பிறத்தலையும் அவதாரம் என்பதுண்டு. தேவர்கள் இங்ஙனம் கருவிற் பிறந்து அவதாரம் செய்தலும் இயல்பு. இறைவனுக்கு அவதாரம் இல்லை. கடவுள் ஒன்றுதான். அது பிறப்பு இறப்பு இல்லாதது. அவதாரம் செய்யாதது. உற்ற காலத்திற் சிறிது நேரம் அருட் கோலமெடுத்து, அன்பர்க்கு அருள் செய்ய வல்லது! கோலமெடுத்து வருகிற நிலை, சத்தி நிலை.

## அறிவு

உண்மை (சத்)-சிவம், ஆண்; அறிவு (சித்) உள்ள பொருளின் விளக்கம், சக்தி, பெண்; பெண்கள் பேதை; பெண்களுக்கு விரிந்த அறிவில்லை என்றெல்லாம் மக்கள் எண்ணுகின்றனர். உருசியாவிலும், 'பெண்களுக்குக் கூந்தல்தான் நீளம் அறிவு மட்டம்' என்று ஒரு பழமொழி உண்டாம்; இது தவறு. பேதை என்று தமிழில் பெண்களைக் குறிப்பது அறியாமைப் பொருளில் அன்று; அறிந்தும் அறியாதது போல் இருக்கின்ற அடக்கத்தன்மையைக் குறிப்பது. 'கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை' மடம் என்று இதனை நக்கீரர் இறையனார் அகப்பொருளில் விளக்குகிறார். இறைவன் தொழிற் படுகின்றான் என்றால் அவன் சக்தியாகிய அறிவு தொழிற் படுகிறது என்று பொருள்; ஆசிரியர் மாணவர்களுக்கிடையில் வேலை செய்கிறார் என்றால், அவர் அறிவு மாணவர்கள் வாழ்வில் கலந்து அவர்களை இயக்குகிறது என்று பொருளாவது போல.

மாயை வரம்புள்ளது. வரம்புள்ள வெல்லாம் சிறிது ஒளி பெற்றிருக்கும்; ஒளி கவர்ச்சியுடையது; அதனால்தான் மாயையிலிருந்து தோற்று விக்கப்பட்ட உலகப் பண்டங்களெல்லாம் கவர்ச்சியுடையனவா யிருக்கின்றன.

### மாயை

ஆணவ இருளில் நெளிந்துகொண்டிருக்கிற உயிர்கள், இவ்வாறு உலகப்பொருள்களாகிய மாயை என்னும் சிறுவிளக்கின் உதவியால் சிறிது சிறிதே அறிவு விளக்கம் பெற்று வருகின்றன. இறைவன் தனது அருட் பேரொளியால் அவற்றை ஆட்கொள்ளுகின்றான். இறைவனது அருள் ஒளியே, அதன் ஒரு கூறே மாயை. மாயை வரம்புடையதாதலின் கணக்குக்கு உட்பட்டது. அதனால்தான் சாத்திரங்களில் பெரியோர்கள், அண்டாண்டங்களையும், பிறவிகளையும் தொகை தொகையாகக் கணக்கிட்டுக் குறிப்பிட்டிருக்கிறார்கள். திருக்கழுக்குன்றத் திருக்கோலம் கணக்கிலாத்திருக்கோலம் ஆதலின் அது மாயைக்கு அப்பாற்பட்டதும் அதை இயக்குவதுமாகிய அருட் சக்திக்கோலம் என்று தெரிகிறது.

அஞ்ஞானம்-ஆணவம்; உடம்பு-மாயை; செயல்கள்-கன்மம். செயல்கள் பொருளில் நிகழும் அதாவது கன்மம் மாயையில் கலக்கும். மிக்க இருட்டிலும் ஒளியிலும் வான் வெளியிற் கோள்கள் இயங்குவதுபோல ஆணவ இருளிலும் (அறியாமையில்), மாயை என்னும் சிற்றொளியிலும் (உலகத்தில்) உயிர்களின் கன்மம் (செயல்) நடைபெறுகிறது.

### தேவர் பணி

கடவுளுக்குக் கன்மம் இல்லை. ஆதலின் அவன் தனது அருளால் நடைபெறுகின்ற படைப்பு முதலிய தொழில்களை எல்லாம் நான்முகன் முதலிய தேவர்களைக்கொண்டு செய்கின்றான். ஸ்ரீ கண்ட ருத்திரர் முதலாக உள்ள தேவர்கள், எல்லாம் வல்ல சிவத்தின் அருட்சக்தியினால் உந்தப்படும் மாயையிலிருந்து தோன்றிய தூய வடிவத்துடன் ஐந்தொழில் நடத்துவர். தாய்ப் பன்றியாய்க் கோலங் கொண்டு இறைவன் வந்தார் என்றால், அவன் சக்தியின் உந்துதலால் கோலம் கொண்டு வந்தவர் ஸ்ரீ கண்ட உருத்திரர் என்று பொருள். எந்தச்செயலையும் சக்தியின் உந்துதலால்தான் நிகழ்கின்றன. 'சக்திமயம் ஜகத்' என்பது இதனால்தான்.

தேவர்கள், சக்தியின் பணியாட்கள்; பக்குவப்பட்ட உயிர்களைத் தேவநிலையில் சக்தி இவ்வாறு பணி கொள்ளுகிறது.

### சிவசக்தியின் சேர்க்கை

சக்தியே எல்லா இயக்கங்களுக்கும் காரணமானாலும் அது தனியே இல்லை. ஆனபடியால் சக்தியின் செயல்கள் நடக்கிறபோது சிவம் அதற்கு மூலப்பொருளாய் ஆதாரவாய் இருக்கிறது. சிவமும் சக்தியும் பிரிப்பற்றவை. அதனால்தான் இறைவனை மாதொருபாகனாக வைத்து வணங்குகின்றோம்.

மாயையின் வடிவங்கள் கருவிலும் வரும், கருவில்லாமலும் நினைத்தபடி தோற்றும். நினைப்புக்குத் தோற்றம் உண்டு. மனம் மாயையின் பிரிவு ஆதலின் அதனால் நினைக்க நினைக்க நினைக்கும் வடிவம் தோற்றுகிறது. அத்தகைய வடிவத்தைக் கையாற்பற்றலாம்; கட்டி அணைக்கலாம்; எதுவும் செய்யலாம். பொது மக்களில் சிலர் இராக்காலங்களில் எதையேனும் நினைத்துக் கொண்டிருந்து, பின்பு அது எதிரில் வருவது போலக்கண்டு பயப்படுவது வழக்கம்; மற்றவர்கள் அதை 'நினைப்பு' என்று சொல்லுவதையும் நாம் கேட்கிறோம். சூர்ப்பநகை இராவணனிடம் சீதையை வருணித்தாள்; அவன் மன நிலையில் எங்கும் சீதையைக் கண்டான் என்று கம்ப ராமாயணம் கூறும். நளன் தமயந்தியையும் அவ்வாறு கண்டதாக நைடதம் நுவலும். உளநூல்படி இவையெல்லாம் உண்மையே.

### சம்பந்தர் கண்ட காட்சி

புறச்சமயத்தாராகிய மாயாவாதிகள் (இப்போது வேதாந்திகள் என்று பெயர் பெற்று விட்டார்கள்), திருஞான சம்பந்தர் இறைவனைக் கண்ட காட்சியை வெறும் 'நினைப்பால்'வந்த காட்சியே என்றுகூறி மறுக்கிறார்கள். மூன்றாண்டுக் குழந்தைக்கு பாவனைப் பழக்கம் ஏது? என்று அவர்கள் எண்ணுவதில்லை. ஆகவே ஆளுடைய பிள்ளையார் கண்டது வெறும் நினைவு வடிவமாகிய மாயையன்று, அருளுருவம் என்று தெளிதல் வேண்டும்.

இந்திரன், பிரம்மா, விஷ்ணு முதலிய தேவர்கள் பிரகிருதி தத்துவத்துக்கு உட்பட்டவர்கள்; அதாவது ஆன்ம தத்துவங்களில்

## பல்வேறு தேவர்களின் காட்சிகள்

அடங்குவோர். ஆகவே அவர்கள் கருவில் வரக்கூடியவர்கள். சதாசிவன், ஸ்ரீகண்ட ருத்திரன் முதலிய தேவர்கள் பிரகிருதி தத்துவத்துக்கு மேற்பட்ட சுத்தத்துவம் வித்தியா தத்துவங்களில் விளங்குவோர் சைவ சமயத்தில் இறைவன் திருக்கோலம் பற்றி வருவன பெரும்பாலும் ஸ்ரீ கண்ட ருத்திரர் கோலங்களே ஆகும். தாய்ப்பன்றி வடிவமும் அப்படிப்பட்டதே. அருட்சத்தியின் கோலம் இவற்றினும் மேம்பட்டது. கணக்குக் கெட்டாதது. கழுக்குன்றத்தில் அடிகட்குக் கிட்டியது அதுவே.

## குரு நிலை

குணமாம் பெருந்துறைக் கொண்டல் என்றது, திருப்பெருந்துறையில் அடிகள் எதிர்ப்பட்ட குருவையும் அவர் பொழிந்த அருள் மொழிகளையும் எண்ணியாகும். குரு என்பவர் குணம் நிறைத்தவர்; கடவுளைச் சேர்வது என்றால், குணமாக இருப்பது; குணசாலிகளிடம் சேர்வது. 'குணமென்னும் குன்றேறி நின்றார்' என்று சிறப்பிக்கிறார் திருவள்ளுவர் நீத்தாரை (அடியாரை); குணம்-தாழ்வெனும் தன்மை, பணிவு, அடக்கம் (குணக்கு - கிழக்கு - கீழிடம்) குருமார் குணசாலிகளாதலின் அவர்கள்பால் அடக்கமும் பணிவும் இருக்கும். பணிவு என்பது பணி செய்வதுதான். அடக்கம் என்றாலும் அப்படியே பேசாமல் இருத்தல் அன்று; யாருக்கு அடக்கமோ அவர்கள் கருத்துப்படி பணி செய்தல்தான். தாழ்வெனும் தன்மையினால் வரும் இத்தகைய பணி மனப்பான்மையும், அதற்கேற்ற அடக்கமும் தான் சைவம்; அதாவது தாழ்வெனும் தன்மை; அதாவது, குணம். "தாழ் வெனுந் தன்மையோடு சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெயல் அரிது" என்னும் திருவாக்கு இங்கே கருதிப் பார்க்கத்தக்கது. குருவுக்குத் துணையாக இருப்பதென்பது குருமார் இயற்றும்பணிகட்குத் துணையாக இருப்பதுதான். அவர்களிடம் காட்டப்படும் நெளிவுகள் இப்பணிப் பண்பின் இணக்கமே. இறைவன் குணக்குன்றாதலின் இரங்குகின்றான்; பணி செய்கின்றான், குருவாக வந்து கொண்டல் போலத்தன் அருளைப் பொழிகின்றான்.

12772

**குணத்தின் செயல்**

குடும்பம் அரசு ஒப்புரவு எனத் தொண்டுகள் எப்படி நடந்தாலும், அவை பலவும் மன்பதை நிலையை உயர்த்தலாகவே முடிகின்றன. மாட்டாதார்க்கு உதவி தொழிலில்லார்க்குத் தொழிலுதவி போல்வன எல்லாம் மன்பதை நிலை யுயர்த்தலே; எல்லாம் குணத்தின் செயல்கள்!

**பணி**

பணி என்ருல் அதற்குப் பாகுபாடுவேண்டும். இறைவன் அம்மையும் அப்பனுமாகப் பிரிந்து வேலை செய்வது அதனுல்தான். விளையாட்டு என்ருல், ஒற்றுமையாயிருந்த நண்பர் இருவர் பிரிந்து எதிர் எதிராக நின்று விளையாடுகிருர்கள். பாகுபாட்டில் ஓர் ஒற்றுமையும் வேண்டும். இறைவன் மாதொரு பாகனுயினும் பிரியாப்பாக முடையான் என்பதும் இதனுலேதான். இருதிறத்தார்க்குள் ஓர் இயையும் வேண்டும். தலைவர் அடிமை; குரு மாணவர், தாய் சேய், பசு கன்று, ஏழை உதவுபவர் என்றுள்ள நிலைகளெல்லாம் குணம் வெளிப்படுகிற வாய்ப்புகள். கோயில் குளம் எல்லாம் கடமைகளை நினைப்பூட்டிக் கொள்ளவே. இறைவனைக் காணக் குணம் வெளிப்படுகிற வாய்ப்புகளில் நின்று இழிநிலையில் உள்ளார்க்கு இரங்கி, அவர்களின் கீழ் நிலைக்கு இறங்கிச் சென்று உதவிப்பணிசெய்ய வேண்டும்; அவர்களை உயர்த்தவேண்டும். 'மலங்களுக்குள் அழுந்திப் பன்றிபோல இருந்த எனக்கு, குணப் பெருங் கொண்டலாக வந்து திருப்பெருந்துறையில் அருள் செய்தாய்; அது, முன் ஒருமுறை நீ பன்றியாகவே வந்து பன்றிக் குட்டிக்கு அருளியது போல இருக்கின்றது என்னும் குறிப்புபட 'கோலமேனி வராகமே' என்று இறைவன் குண மாட்சியை விளக்குகிறது இப்பாடல்.

சீலமேதும் அறிந்திலாத என்சிந்தை வைத்த சிகாமணி - ஆசாரம் ஒன்றும் அறியாத எனது சிந்தையிலும் வந்து பதிந்திருக் கின்றதலை மணியே!

சீலம் - ஆசாரம், தூய்மையாய் இருப்பது. அகத்தூய்மைக்கு ஒழுக்கம்போலப் புறத்தூய்மைக்குச் சீலம் இன்றியமையாதது.

### சீலம்

அது நாடு குடும்பம் முதலிய சூழல்களுக் கேற்ப அமையும். உடல் நலத்துக்கு அது மிகவும் உதவியாக இருக்கும். புறத்தூய் மையே அறியாத எனது சிந்தையிலும் மணிபோல் ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்ற தன்மையனே என்று சிறப்பித்தபடி ஒழுக்கம் முதன்மையானது; அடுத்தபடி சீலமும் வேண்டும்.

கடமை (ஒழுக்கம்) பார்க்கிறபோது சீலம் பார்க்க முடியாமல் இருக்கலாம்; அதுபற்றிக்கவலையில்லை. கடமை முடிந்த பின் சீலமாயிருக்கவேணடும். குப்பை எடுக்கின்ற கடமையுடைய ஒருவர் சீலமாக இருக்க முடியாதுதான்; ஆனல் கடமை முடித்தபின் தூய்மையாய் இருக்கலாமன்றோ? அப்படி அந்தந்தத் தொழில் செய்வாரும், சீலத்திற்கருத்து வைக்காததனுற்றான் தொழில் வழி நேர்ந்த சாதிப்பிரிவு இடைக் காலத்திற் பிறப்பு வழி மாறிவிட்டது. சாதிவேறுபாடு ஒழிய வேண்டுமானல், அவரவரும் சீலத்தில் உயரவேண்டும். பழக்க வழக்கங்களில் தூய்மை பெருமற்போனல் சாதியோடு சாதி ஒன்றுபடுவது எளிதான செயலன்று. வெளிப்பகட்டில், கல்வியில், செல்வத்தில், அங்கங்கே நேர்ப்படுகிற காலங்களில், ஒருவரை ஒருவர் எவ்வளவு விரும்பி ஒற்றுமைப்பட்டாலும், நெருங்கிப் பழகுகிறபோது சீலம் ஒத்துவராவில்லையானல் காதலர்க்குள்ளும் கசப்பு நேர்வது இயல்பு. ஆகவே சீலத்தால் உயர வேண்டும்.

### சீலமும் சாதி வேறுபாடும்

நன்னூல்களின் பயிற்சியும், வழிபாட்டு ஒழுக்கமும் உடையாரிடம் சீலம் இயல்பாக அமையும். உருவவழிபாடு உள்ள இடங்களில் பின்னும் சிறப்பாக இச்சீலம் அமையும். காலை மாலை முழுகலும், நறுமணம் கமழும் மலர், அகில் சந்தனம், பால், தயிர், பழம், விளக்கு, படைப்பு முதலிய நற்பண்டங்களின் புழக்கமும், நன் நினைவுகளின் சூழலும் முறையாக அமைவதற்கு உருவவழிபாடு துணை செய்வதால் தூய்மையும் (சீலம்) உடல் நலமும் அமைந்து மன நிலைகளும் உயர்ந்து மகிழ்ச்சியான பிறவியாய் இருப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

### உருவ வழிபாட்டின் முதற்பயன்

வெறும் சீலம் இருந்து ஒழுக்கம் இல்லையேல் பயனில்லை. அகவொழுக்கத்தை மேலும் மேலும் வலுப்படுத்தவும் புறச்சீலம் கருதப்படுவதாதலின் இரண்டும் இருக்க வேண்டும். அக ஒழுக்கம் புறச்சீலத்தால் அமையும்; வளரும். சிந்தைவைத்த சிகாமணி என்றது அக ஒழுக்கத்தை எண்ணியே. குணம், கடமையுணர்வு இவைகளே ஒழுக்கம் எனப்படும். இவையுள்ள சிந்தையில்தான் இறைவன் குடியிருப்பான்; உயர்ந்த மாணிக்கம் போல் ஒளிவிட்டுக் கொண்டிருப்பான்.

**சீலமும் ஒழுக்கமும்**

அடிகள் இரண்டாம் பாட்டிலும் ஐந்தாம் பாட்டிலும் சட்டத்தையும் சீலத்தையும் குறிப்பிட்டு அவற்றின் முதன்மையைத் தெளிவு படுத்துகிறார். ஆதலின் அவர் காட்டும் அருள்நெறி உலகியலோடு எவ்வளவு ஒத்துப் போகிறது; இயல்பாகவும் உலகியல் நலங்களை விடாமல் எல்லோரும் பின்பற்றக் கூடியதாகவும் இருக்கிறது என்பதை உணரலாம்.

**அடிகளார் காட்டும் அருள்நெறி**

ஞாலமே கரியாக நான் உனை நச்சி நச்சிட வந்திடும் காலமே உனை ஓத நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே - உலகத்தார் சான்றாக நான் உன்னை விரும்பி அணுகி அணுகி வர, அதற்கு நீயும் இணங்கி வந்து எதிர்ப்பட்டிருக்கின்ற காலமே, உன்னைமேலும் மேலும் இவ்வாறு நச்சி ஓதுதலால் நின் திருக் கோலக் காட்சியை இத் திருக்கழுக்குன்றத்திலே வந்து காட்டியருளியிருக்கின்றாய்!

ஞாலம் - உலக மக்கள்; இங்கே மதுரை பெருந்துறை முதலிய தமிழக மக்களை உணர்த்தும். மணிவாசகர் அரசியல் பதவியாகிய அமைச்சர் நிலையைவிட்டு அடியார் நிலை எய்தினார் என்பதை எல்லோரும் அறிவர் என்றபடி - "தானெனை ஆட்கொண்ட தெல்லாரும் தாமறிவார்" என்

**ஞாலச்சான்று**

ளூர் அடிகள் பிறிதோரிடத்திலும். பெருந்துறையில் சிவப் பணி செய்தது; மதுரையில் சிறைப்பட்டது; இறைவன் குதிரைச் சேவகனாக வந்தது, பரி நரியானது, வைகை மணலில் நிறுத்தப் பட்டது, வெள்ளம் வந்து இறைவன் மண் சுமந்து பட்ட அடி அனைவர்க்கும் பட்டது முதலிய நிகழ்ச்சிகளில் அடிகளின் மாட் சிகள் அரசன் முதல் அனைவர்க்கும் விளங்கினவல்லவா?

**காலம்**

காலம் மாயையில் ஒரு பகுதி; அதன் ஆற்றல் நம்மைத் தாக்கும். காலத்தால் தாக்கப்படாதவன் இறைவன் ஒருவனே. அவன் அருள் நிலையில், அதன் தாக்குதல் நமக்கும் இராது. காலத்தால் தாக்கப் படாத நிலை உண்டாகுமா என்று ஏங்கி அதற்குரிய திருவருட்காட்சியும் கட்டளை யும் பெறும் காலம் எப்போது வரும், எப்போது வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்த நிலையிற் கழுக்குன்றத்தில் கிடைத்த இறைக்காட்சியைக் "காலம்" என்றே அழைக்கிறார் அடிகள்.

**மந்திரம்**

ஓதல் என்றால் ஓம் என்கிற மந்திர அடிப்படையில் உச்சரித்தல் என்று பொருள். படித்தல், பேசுதல், மொழிதல் எல்லாம் வேறு வேறு நிலைகள். எந்தச் சொல்லையும் ஓதினால் அவை மந்திரங்களாக மாறிக் கருதிய பயனைத் தரும். மந்திரம் என்பது, நினை வில் உறுதியை உண்டுபண்ணும் சொல்; எண்ணியதைப் பாவனையினாலும் அரு ளாற்றலாலும் அடையும்படி செய்வது. ஒலிகளுக் கெல்லாம் மூலமான ஓங்கார அடிப்படையிலிருந்தே மந்திரங்களெல்லாம் விரிந்தன. அதன் அடிப்படையில் மனம் ஒருங்கி உச்சரிக்க உச்சரிக்கப் பாவனை முதிரும். அதற்கு முத லில் அன்பும் உருக்கமும் (ஈடுபாடும்) வேண்டும். "காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி" ஓதவேண்டும். (காதல் - அன்பு, கசிவு - உருக்கம்) ஓதினால் காட்சி கிட்டும்.

## ஆருவது 'பேதமில்லதோர் கற்பு'

6. பேத மில்லதோர் கற்பளித்த பெருந்து
றைப்பெரு வெள்ளமே!
ஏத மேபல பேச நீஎனை ஏதி யார்முனம்
என்செய்தாய்?
சாதல் சாதல் போல் லாமை யற்ற தனிச்ச
ரண்சர ணமெனக்
காத லால்உனை ஓத நீவந்து காட்டி னுய்கழுக்
குன்றிலே.

கற்பு - ஆழ்ந்த நடை, நிலையான நல்லொழுக்கம்; அது தெய்வத்தன்மை யுடையதாகலின் ஒப்பற்றது என்னும் பொருளிலும், தெய்வநடை என்னும் பொருளிலும் 'ஓர்கற்பு' என்று சிறப்பிக்கப் பட்டது. உறுதியானது என்றும் கொள்ளவேண்டும். கல்லுதல் - தோண்டுதல். கல்வி - ஆழமாகப் படித்தல்.

| கற்பு |
|---|

கற்பு - கற்றபடி உறுதியாக நிற்றல். பேதமில்லதோர் கற்பு - சமரச சன்மார்க்க ஒழுக்கம்.

பெருந்துறையிற் பெற்றபேறு, கற்பு! அளித்த இறைவன் வெள்ளம் என்று பாராட்டப் படுகின்முன். குருவாய்வந்த அவன்

| அருள் வெள்ளம் |
|---|

அருள் மொழி, வெள்ளம் போல் பெருகக் கிடைத்ததுபோலும். எனவே பெருந்துறை என்பதற்கேற்பப் பெருவெள்ளம் என்கிருர் மலையில் மழை பொழிந்து வெள்ளம் பெருகுவதுபோலக் குருவினிடத்தில் அருள்வழிந்து பெருகிற்று என்று தெரிகிறது. அருளின் பெருக்கு அப்படிப்பட்டது.

குரு மலைபோன்றவர் என்று இலக்கணங்களும் கூறுகின்றன. மலை அசையாதது, வளமுள்ளது. குருவும் தன்னிலையிலிருந்தும் (இடத்திலிருந்துங்கூட) அசையமாட்டார். துன்பம், பகை எதற்கும் தளரமாட்டார்.

| குரு நிலை |
|---|

அறிவு வளம் அவர்பால் நிறைந்திருக்கும். கொள்கைத் தெளிவும் உள்ள உறுதியுங் கொண்டிருப்பார். உறுதி நிலை, ஐயமற்ற தெளிவினால்தான் உண்டாகும். குருவின் நிலை ஐயந்திரிபு அற்ற மெய்யுணர்வு நிலை.

**ஐயமும் திரிபும்**

ஐயமும் திரிபும் அற்ற நிலையே மெய்யுணர்வு நிலை. ஐயமுடையவர்கள் கருத்து வேறுபாடு இல்லாதவர்களாதலின், தெளிவுபெற்றதும் திருந்துவார்கள்; பின் இணக்க முறுவார்கள். திரிபுடையவர்கள் தெளிவு பெறுதலோடு கருத்து மாறுபாடுங்கொண்டு ஒன்றை இன்னொன்றாகத் தீர்மானித்துக் கொண்டவர்களாதலின் அவர்கள் திருந்தி இணங்க மாட்டார்கள். திரிபினால்தான் உலகில் பகையும் பிணக்கும் மிகுதியாகின்றன. ஐயம் ஒருவகையில் நல்லது கூட; ஐயப்பட்டு ஒன்றைத் தெளிவதுதான் நல்லது. ஆராய்ச்சிக்கும் உண்மைப் புலப்பாட்டுக்கும் அதுவே அடிகோலும்.

**ஆராய்ச்சி**

ஆராய்ச்சி ஐயத்தினால் உண்டாவது. அதன் முடிவுகள் எல்லாம் சரியாகவே இருக்கும் என்று சொல்வதற்கில்லை. நேர்மாறான (விபரீத) முடிவுகளாகவும் இருக்கலாம். ஆராய்ச்சியில் நல்ல முடிவுகளைப்பெற மெய்ப் பொருளின் (அருளின்) துணைவேண்டும். அடியார்கள், திருவருளுதவியினால் நல்ல முடிவுகளை ஐயமின்றித் தெளிந்தவர்கள். ஆதலின் அவர்களை நம்பிப் பின்பற்ற வேண்டும். அடியார்களுக்கு இறைவன் நன் முடிவுகளைத்தருகின்றான். அதற்கேற்ற வாய்ப்புகளையும் கொடுக்கின்றான்.

**ஆவுடையார் கோயில்**

பெருந்துறைக் கோயிலுக்கு ஆவுடையார்கோயில் என்று பெயர். சோகழி என்பதும் அதுவே. திருவாவடுதுறை என்பது பின்னால் இதே பொருளில் அமைத்துக் கொள்ளப்பட்டது. உயிர் அறிவு கெட்டு இறை அறிவு மிகுகின்ற இடம் ஆவுடையார் கோயில். அதாவது ஐயந்திரிபு முதலிய மாறுபாடுகள் (பேதம்) அற்ற மெய்யுணர்வு மிளிர்கின்ற இடம்.

அறிஞர்களால் அபாயம் (இடர்) இருக்கிறது; இக்கருத்தைச் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. இலட்சுமண சாமி முதலியார் அவர்களும் ஒரு விரிவுரையிற் புலப்படுத்தினர்.

**அறிஞர் நிலை**

'கற்ற அறிஞர்களே மக்களுக்குள் பல பிரிவுகளை உண்டாக்குகிறவர்கள்' என்று சுட்டிக் காட்டுகிறார் ஆசிரியர் மறைமலை அடிகள். அருள் தொடர்பு கொள்ளாத காரணத்தால் சரியான முடிவைச் செய்ய முடியாத அறிஞர்கள், தமக்குள் வேறுபடுகிறார்கள். நாள்தோறும் நிலையில் திரிகிறார்கள், நிலையிற்றிரியாமையாகிய பெருந்தன்மை அடியார்கட்கே உரியது. 'பேதம் அற்ற கற்பு' என்பது அதுதான். அதை அவர்கள் தக்கவர்களுக்கும் வழங்குகிறார்கள்.

**வெள்ளத்தின் பயன்**

பேதமற்ற தன்மையைத் தருவது வெள்ளம். அருள் வெள்ளம் அகத்தில் அத்தன்மையை நிரப்புகின்றது. நீர் வெள்ளம் புறத்தில் ஏழை பணக்காரன் என்ற வேறுபாட்டைப் போக்குகிறது. நாட்டில் வளம் நிரம்பிவிட்டால் அவரவர்க்கும் தாராளமான உள்ளம் ஏற்பட்டு விடுகின்றது. பின் பேதத்திற்கு இடம் ஏது? வெள்ளம், தான் போகின்ற இடத்தில் உள்ள மேடு பள்ளங்களையும் சமப்படுத்திவிடும். தானும் மேடுபள்ளங்களில் நிரம்பிச் சமமாய்ப் பரந்து திகழும். நீர்மட்டம் தானே, இடங்களின் உயரம் பள்ளம் முதலிய அளவுகளைக் காட்டுகிறது.

**பேதமற்ற நிலை**

வேறுபாடுடைய ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் தம்மில் ஒன்று படுகிறபோது, பேத மறுகிற நிலை வருகிறது. மேசை, அதன்கால், சட்டம், அறை எல்லாம் தனித்தனியாக இருக்கிறபோது தமக்கெனப் பெயர் பெற்றிருந்து, ஒன்றான போது ஒரே பெயர் பெற்றுவிடுகின்றன. அப்போது அவை இருந்தாலும் அவற்றைத் தனித்தனியாக எண்ணுவதில்லை. பேத முள்ளவைகள் ஒன்று படுகிறபோது பயன் ஏற்படுகிறது. மலை என்றும் கடல் என்றும் தனித் தனியே இருந்தாலும்

கடல் நீர் ஆவியாகி மேலே சென்று மலை யுச்சியைச் சேர்ந்து மழை பொழிகிறபோதுதான் அவை உலகத்துக்குப் பயன்படுகிறது. கை, கால், கண், மூக்கு, காது என்று வெவ்வேறு உறுப்புகள் ஒரே உடம்பில் ஒற்றுமைப்பட்டு இருப்பதனுல், உயிர் இயங்குகிறது; நாம் இன்பமாக வாழ்கிருேம். வேற்றுமையில் ஒற்றுமை வேண்டும். வேற்றுமையில் அறிவு வளரும்; ஒற்றுமை யில் அது நயப்பட்டு அன்பாகமாறும்; பயன் படும் அதனுல் பொதுமை (சமரச) உணர்வு நிலைக்கும்; பேதமற்ற கற்பு அந் நிலையிற் சிறக்கும்.

### மழை முயற்சி

பெருந்துறை என்பது தலையிலுள்ள மதி மண்டலம். ஆழ நினைந்தால் (யோகம் செய்தால்) அங்கே அமுதம் பொழியும். அகபேதம் நீங்கும். மழை என்றதும், கற்பு என்றதும் இவற் றையே. அமுத நிலையிலுள்ளாரின் நினை வால் புறத்திலும் மழை பொழியும். மழையின்மையால் நேரும் இடர்களைப் போக்கிக் கொள்ள அணைக்கட்டு கட்டுதல் முதலிய முயற்சிகள் செய்கிருர்கள். அவை அறிவார்ந்த நன் முயற்சிகளே ஆனுல் நிலையான அருளார்ந்த மெய்யுணர்வு முயற்சிகளாகா! ஆழமான நன்னினைவுடையார் தவ ஞான நன் முயற்சிகளைச் செய் தால் மழை பொழியும். நாடு வளம்பெறும்.

### அமிழ்த நிலை

கொப்பூழுக்குக் கீழே ஒரு கிழங்கு இருக்கிறது. அதிலி ருந்து நாடிகள் உடல் முழுதும் பிரிந்து செல்கின்றன. அவற் றுள் பத்தும், அப்பத்துள் மூன்று முதன்மையானவை. உரிய நிலையில் அம்மூன்று நாடிகளையும் வைத்துக் கொண்டால் உடல்நலம் நன்ருயிருக்கும். ஆகவே நாடி நிலைகளைப் பார்த்துச் செய் யப் பெறும் மருத்துவம் சிறந்தது என்று தெரிகின்றது. அத்தகைய மருத்துவர்கள் இப்போது அருகிவரு கின்றனர். அவர்களுக்கு அரசினர் ஆதரவும் இல்லாமல் இருப் பது இரங்கத்தக்கது. நாடி நிலை தகுதியாய் இருந்து நினைவை ஒருமுகப்படுத்தி விந்துவை மேலேற்றினுல் அமிழ்தம் பொழியும். சாவாமருந்து என்பது அதுவே.

சாவாமல் நம்மை ஓரளவு காத்துவருவன நீரும், பாலும், உணவும் என்கிருேம்; அவைமுறையே வான் அமிழ்தம், பால்

அமிழ்தம். அமிழ்தம் (அமுது) என்று சொல்லப்பட்டது ஒப்புக்கே. உயிர்ச்சத்துள்ள பொருள்களில் எல்லாம் அமிழ்தச் சத்துகள் உண்டு. இரத்தத்தில், அதன் தெரிப்பான விந்துவில் எல்லாம் அமிழ்தம் உண்டுதான்! விந்துவை வீணாக்கிவிடாமல், ஒருமைப் பட்ட உயர்ந்த எண்ணங்களாலும் தவபபயிற்சியாலும் மேலேற்றி உச்சியில் நாதத்தோடு கலக்கும்படி செய்தால், அங்குள்ள மதி மண்டலத்தில் அமிழ்தப் பொழிவு எற்படும். அதனால் சாவா நிலைகிட்டும். இதுயோக முறை.

### ஞான நிலை

தவத்தினால் அமிழ்தம் பெற்றுச் சாவாநிலை பெறுவது, அதாவது உடம்பை நன்றாகவைத்துக்கொள்வது, ஞானம் பெறத் தான். சிலர் அமிழ்தப்பேறே முடிந்த நிலை என்று கருதுகின்றனர். உடம்பு என்றாயினும் அழியவேண்டுவதே. அழிந்தேதீரும். அமிழ்த நிலை வேறு, ஞான நிலைவேறு; உடல் சித்திவேறு ஞானசித்திவேறு; முன்னது வெற்றுயோகத்தால் வருவது, பின்னது அதன்பயனாக அருள்யோகத்தால் அரும்புவது; வெற்று யோகம் வெறும் அறிவுநிலை; அருள்யோகம் மெய்யுணர்வுக்கு எதுவாயிருப்பது; ஞானம் (மெய்யுணர்வு) அருள் நிலையே! இத்தகைய அசட்டு யோகப்பயிற்சியில்லை எனினும், ஞானியே உயர்ந்தவன். ஞானிக்குத்தான் தெளிவு, சமரச உணர்வு, பேத மற்ற தன்மை இருக்கும்.

### கற்பு நிலை

கற்பு - பேதமற்ற ஒழுக்கம்; உறுதியான ஒரே ஒழுக்கம். பேதமில்லதோர் கற்பு என்பது வெண்ணிலா என்பது போல இயல்பான அடைமொழிகள் அமைந்தது. பேதம் - மயக்க உணர்வு, வேறு பாடான போக்கு. பிரிவு என்பது பேத மாகாது; ஆனால், பிரிவினால் கெடுதல் நேர்கிறபோது பேதமும் பகையும் உண்டாகும். ஆசிரியரிடம் பெற வேண்டியது மயக்கமற்ற கற்புதான்; சடங்கு முறையிற் பெறும் 'உபதேசம்' எனப்படும் மந்திர மட்டுமன்று. மந்திரம் பெறுவது, பெறவேண்டிய கற்பொழுக்கத்துக்கு ஒரு துணை. கற்பு பெண்களுக்கே உரியது என்று எண்ணுவது தவறு. ஒழுக் கம் இருவர்க்கும் வேண்டியதே. மாதர் உள்ளத்தை எளிதில் அறிய

முடியாது என்று தவறான போக்கில் வழக்கிருந்தாலும் அதுவும் அவர்களின் ஆழ்ந்து செல்லும் தன்மையையே காட்டுகிறது. பெண்களுக்கு ஆழ்ந்த நடை, உறுதியான உள்ளம் முதலியன இயல்பு. ஆதலின் கற்புநிலை அவர்கட்குச் சிறப்பாகச் சொல்லப்பட்டது

**சமயமும் சடங்கும்**

ஆசிரியரிடம் பெறும் மந்திர நெறியினால் மக்கள் தமது நிலையை மேன் மேலும் ஒருமுகப்படுத்தி உயர்த்திக்கொள்ள வேண்டும். அதை வெறும் சடங்காகவே உச்சரித்து வந்தால் பயனில்லை. சமயங்கள் எல்லாம் இக்காலத்தில் சடங்கு முறையில் வந்து விட்டன. கோயில்களும் குடும்பங்களும் எல்லாம் சடங்கு வண்ணமாய் நிகழ்கின்றனவே ஒழியப் பெரும்பாலோர்க்கு அவற்றின் கருத்து தெரிவதில்லை, தெரிந்தாலும் வாழ்க்கையில் ஒட்டுவதில்லை. சடங்கு மயமாய்ப போன சமயம், எதிர்ப்புக்கு உரியதே. சடங்கும் வாழ்க்கையும் ஒன்ற வேண்டும். அதை உறுதிப்படுத்துவது தான் குருவின்வேலை. குருவின் அருள் பெற்றதுமுதல் அந்தக் கற்பு நிலை நம்மிடம் கால்கொண்டு வளரும். அப்படி வளர்ந்த நிலை அடுத்த அடிகளில் புலப்படுகிறது.

**ஏதமே பல பேச நீ எனை ஏதிலார் முனம் என் செய்தாய்-பொதுமக்கள் (என் நிலையறியாது) காரணம் காட்டிக் குற்றம் சொல்ல அவ் வயலவர் முன் (நீ என்னை) என்னென்ன செய்துவிட்டாய் !**

**பொறுப்புணர்ச்சி**

ஏது-காரணம், ஏதம்-காரணங்காட்டிச் சொல்லும் குற்றம்; கண்டனம். ஏதிலார்-நண்பரும் பகைவரும் அல்லாத பொது மக்கள். என் செய்தாய் என்பது என்னென்ன வளர்ச்சிகளைச் செய்துவருகின்றாய் என்றும் உட்குறிப்பாய்ப் பொருள் படுகிற நிலையில் இருக்கிறது. பொதுமக்களுக்குத் தம் வாழ்க்கை எடுத்துக் காட்டாக இருக்கவேண்டுமே என்கின்ற பொறுப்புணர்ச்சியினால் இப்படிப் பாடுகிறார் போலும்.

திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்குப்பின் நேர்ந்த அடிகளின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பற்றிப் பலர் பலவாறு பேசியிருக்கலாம்.

அதனால்தான் என் செய்தாய்? என்று கேட்கிறார். 'முன்னை வினை முழுதும் ஓய' என்று அவரே பிறிதோரிடத்திற் குறிப்பிடுகிறபடி, வினைகள் ஒழியவே அவர் வாழ்வில் பாண்டியன் பொருளைக் கையாளல், சிறையிருத்தல், பரி நரியாதல், பாண்டியனால் ஒறுக்கப்படுதல், வாதம் செய்தல் முதலியன நேர்ந்தன என்று கொண்டு, அவற்றிற்கேற்ப என் உணர்ச்சி நிலையில் நீ என்னென்ன வளர்ச்சிகளைச் செய்தாய் என்று வியக்கும் உட்பொருட் குறிப்பு சிறப்பாக இருக்கிறது.

**சாதல் சாதல் பொல்லாமையற்ற தனிச் சரண் சரணாமென- (எப்படியிருந்தாலும்) இறத்தல் இறத்தல் என்று உலகத்தார் கூறும் தீமை என்பது அற்ற நின் ஒப்பற்ற திருவடிகளே அடைக்கலம் என்று.**

*சாதல்-இறத்தல்; சரண்-திருவடி; சரணுதல்—அடைக்கலமாதல்.*

மெய்யுணர்வினால் சாதல் போகும். சரண் என்றது மெய்யுணர்வையே. அதை அடைந்தால் சாவா நிலை வரும். சாவா நிலையாவது, உலகத்திலிருந்து மறையும்போது, உயிர் எளிதாகப் பிரிதல். யோக முறைகளினால் நீண்ட காலம் வாழலாமே தவிர எப்போதுமே மறையாமலிருக்கமுடியாது. சாதல் சாதல் என்று இருமுறை கூறியது, அதன்கொடுமை மிகுதி கருதிற்று; உலகத்தார் அவ்வாறு அஞ்சி வழங்குதலால் என்பது. ஞானத்தினால் சாதல் பொல்லாமை நீங்கும். சாதல் பொல்லாமை என்பது சாதலின் கொடுமை (வருத்தம்). அக்கொடுமை யற்ற அதாவது இயல்பாக உயிர் பிரியும்படி செய்கின்ற ஒப்பற்ற மெய்யுணர்வு என்று பொருள் கொள்ளுகிறபோது, இவ்வுண்மை புலப்படுகிறது. பொல்லாமையற்ற சாதலை, வருத்தமில்லாத இறப்பை, 'கரும் பாட்டிக்கட்டி சிறு காலைக் கொண்டார் துரும் பெழுந்து வேங்கால் துயராண்டு உழலார்' என்றபடி தாமே வரவேற்றுப் பெறுவர் திருவருள் ஞானம் கைவரப்பெற்ற பெரியோர். அவர்கள் மறைவை இறப்பென்றே சொல்ல முடியாதபடி, இயல்பாக, அவர்கள் கருதும் வகையில், உடம்பு ஐம்பெரும் பொருள்களில் ஏதேனும் ஒன்றாக மாறிவிடும். அப்பரடிகள் திருப்பெரும்புகலியில் இலிங்கவடிவமாக மாறி மண்ணும் நீருமானார். ஆளுடைய பிள்ளையார் திருநல்லூர்ப்பெருமணத்தில் தீ (சோதி)யிற்

**சாவா நிலை**

கலந்தார். நம்பி ஆரூரர் திருவஞ்சைக் கலத்தில் காற்றியக்கங் கொண்டு மறைந்தார். ஆளுடைய அடிகளார் திருச்சிற்றம்பலத்தில் விண்ணாகி (ஆகாசமாகி)க் கரந்தார்-வடலூரடிகளும் மேட்டுக்குப்பம் திருச்சத்தி விளாகத்திலே தாம் விரும்பியபடி உடலை விண் நிலையில் மறைத்துக்கொண்டார். இவர்கள் எல்லாம் சாதல் பொல்லாமை யற்ற முறையில் தாம் தாம் விரும்பிய வாறே தம் பருவுடல்களை மறைத்துக்கொண்டார்கள்.

**அடைக்கலப் படுதல்**

சரண் அடைதல் இம்மை மறுமைச் சாவுகளிலிருந்து நீங்கி வீடு பேறடையவே. தெய்வநிலை என்பதும் வேட்கையற்ற தேவை எதுவுமில்லாத வாழ்க்கையிலே நம்மை நாம் ஒடுக்கிக் கொள்வது என்பதும் அதுவே. அடைக்கலம் என்று சார்கிறபோது பயன் கருதுகிற நிலை இல்லை.

காதலால் உனை ஓத நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே— மெய்யன்பினால் நின்னை ஓதுதலும் நீ நின் திருக்கோலக் காட்சியைத் திருக்கழுக்குன்றத்திலே வந்து காட்டியருளினாய்!

## ஏழாவது "இயக்கிமார் அறுபத்து நால்வரை"

**7.** இயக்கிமார் அறுபத்து நால்வரை என்குணம்
செய்த ஈசனே
மயக்க மாயதோர் மும்மலப்பழ வல்வினைக்கு
ளழுந்தவும்
துயக்கறுத்தெனை ஆண்டுகொண்டு நின்தூய்மலர்க்
கழல் தந் தெனைக்
கயக்க வைத்தடி யார்முனே வந்துகாட்டி
னாய்கழுக் குன்றிலே.

இயக்கிமார் அறுபத்து நால்வரை எண் குணம் செய்த ஈசனே! — இயக்கியர் என்னும் தேவமாதர் அறுபத்து

நால்வரை எண்ணத்தக்க தெய்வப் பண்பில் திகழும்படி செய்த பெருமானே!

தேவ உலகத்தில் இயக்கர் (யக்ஷர்) என்பவர் ஒரு பிரிவினர். இயக்கன் என்பதன் பெண்பால் இயக்கி என்பது. இயக்கிமார், பன்மை (ஈசாமை-கோபம், குணமற்றதன்மை, எனவே) ஈசன் குணத்திலே தலை சிறந்தவன். இறைவன் தனியாக இருந்தால் வேலைக்கு இடமே இல்லை. உலக இயக்கமெல்லாம் அவன் திருவிளையாடலே என்றால், ஒன்று மற்றொன்றை வைத்துக் கொண்டுதான் விளையாடவேண்டுமே ஒழிய தனிப் பொருள் விளையாடுவதெப்படி? தன்னைப்போல் பிறிதொன்றை உண்டாக்கிக்கொண்டு விளையாடுகின்றான் என்றால் பயன் என்ன? என்னும் கேள்விகளுக்கு விடை வேண்டுமே. ஆகவேதான் இந்த நாட்டார் நுணுகி நோக்கி உயிரற்ற உலகம், சிற்றறிவுள்ள உயிர் என்னும் இவையிரண்டும் வேறுவேறு; இவ்விரண்டையும் இயக்கும் பேரறிவுள்ள கடவுள் வேறு ஆக மூன்று பொருள்கள் என்றும் உள்ளன என்று முடிவு கட்டியிருக்கிறார்கள்.

**இயக்கிமார்**

**மூன்று பொருள்கள்**

உலகத்திற் பேரறிஞராயிருப்போர் சிலரும் பிரம்மம் ஒன்றே, அதற்கு இரண்டாவதாக வேறு ஒரு பொருளும் இல்லை; மாயை உலகம் என்பதெல்லாம் பொய்; பிரம்மமே உலகமாகவும் உயிராகவும் தோன்றுகிறது என்று சொல்லும் அறிவிணக்கமில்லாக் கொள்கைகளில் மயங்குகின்றனர்.

**மாயா வாதம்**

இவை அறிவாராய்ச்சிக்கு ஒத்து வருவதில்லை. எனவே சிவனைப் போலச் சீவனும் உண்டு, என்று உறுதிப் படுத்திக்கொண்டு அத் தெளிவு நெறியில் நம் முன்னோர் சென்றனர். ஐயந்திரிபின்று இம்முப்பொருள்களை உறுதி செய்திருப்பவர்கள் நம் முன்னோர்களே. மொழி, சமயம் இவ்விரண்டின் திறத்திலும் இந்நாட்டார் எத்துணையோ ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்குமுன் கண்ட முடிபுகளின் உச்ச நிலையை இன்னும்

**தமிழர் சிறப்பு**

யாரும் எட்டிப் பிடிக்கவில்லை. உலக முழுதும் ஒருபக்கமும் இந்நாட்டார் ஒரு பக்கமுமாக இருக்கின்றனர். நடு நிலையி லிருந்து பார்த்தால் இவர்கள் போக்கு உண்மையை ஒட்டிப் போகின்றது என்பதும் மற்றப் போக்கு உண்மைக்குப் புறம்பாய் விளம்பரமாகிப் பரவிக்கொண்டிருக்கின்றது என்பதும் தெரியும்.

உலகியல் அருளியல் எல்லாவற்றிலும் இந்நாடு மிகச் சிறந்து நிற்கிறது. இந்நாட்டிற் கிடைத்த பழைய நூல்கள் மிகச் சிலவே ஆயினும் அவை ஒப்பற்ற உண்மைகளையும் முடிபுகளை யும் கொண்டிருக்கின்றன. இந்நாட்டிலேதான் பல்லாயிரம் ஆண் டுகளுக்கு முன்பிருந்தே தொகை தொகையாக அடியார்கள் தோன்றியிருக்கிறார்கள். கடவுள் ஒன்று; உயிர்கள் பல; உலகு யிர்களின் படைப்புக்குக் காரணமான மலங்கள் மூன்று என் றெல்லாம் அறுதியிட்டுப் பொருள்நூல் முடிபுகளுக்கு ஏற்பக் காட்டும் தமிழ் நூல்கள் பல இருக்கின்றன. அவற்றைப் பற்றி எல்லாம் உலகம் நன்றாக அறியுமாறு செய்ய விவேகாநந்தர் போன்ற பெரியோர் பலர் வேண்டும்.

### மக்களாட்சி

பொய்மைக்கு உலகில் பரவுதல் மிகுதி. சன நாயகம் என் னும் மக்களாட்சி கேட்பதற்கு நன்றாயிருக்கிறது; அது பெரும்பாலோர் போக்குக்கு ஏற்ப இயங்குவது; அதற்கு நாட்டிற்பெரும் பாலோர் உண்மையாளராய், அறிஞ ராய், நல்லவராய் இருப்பது முதன்மை. ஆனால், அல்லாதவரோடுபெரும் பான்மையாயிருப்பது இயல்பாயி ருக்கிறது; ஆகவே, பொய்மையிலும் போய்விடத்தக்க வாய்ப்பு கள் சனநாயகத்தில் மிகுதியாக இருக்கின்றன. ஆகவே மக்க ளாட்சியில் உண்மைக்கும் சான்றோர் வாக்குக்கும் முதன்மை கொடுத்து அந்நிலைக்கு இணங்கிவரும் பெரும்பான்மைக் கருத்தைத் தழுவிக் கொள்ளவும், அந்நிலைக்கு ஒவ்வாத பெரும்பான்மையோர் கருத்தை ஒதுக்கிவிடவுங் கூடிய வரையறையும் சேர்க்கப்பட வேண்டும்.

உயிர்களின் வேறுபாடுகள் அவற்றின் அறிவு நிலைக்கேற்ப அமைகின்றன. அறிவின் வேறுபாட்டை வகைப்படுத்திய சிறப்பும் இந்நாட்டோர்க்கே உரியது. ஒன்று முதல் ஆறு அறிவு வரை உயிர்களுக்கு இருக்கின்றன; இன்ன இன்ன உயிர்களுக்கு இன்ன இன்ன அறிவுகளே இருக்கின்றன என்றெல்லாம் ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட மிகப் பழைய தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியம் கூறுகிறது. அவற்றில் ஐந்து அறிவு, புலன் அறிவு; ஆறுவது அறிவு, மன அறிவு. அதிலும் பல பிரிவுகள் உண்டு. புலன்கள் ஐந்தும் மண், நீர், தீ, காற்று, வானம், என்னும் ஐந்து பூதப் பொருள்களை அறியக்கூடியவை.

### அறிவின் பாகுபாடு

உண்மை இப்படியிருக்க, சமயங்களிற் சில மட்டும் ஐவகை அறிவை ஒப்புக்கொண்டிருக்கின்றன. மண், நீர், தீ, காற்று என்னும் நான்கு பொருள்களை மட்டும் அறிந்திருந்தோரும் உண்டு. மேனாட்டவர் வான் (ஆகாயம்) என்னும் ஐந்தாவது பொருளை நெடுங்காலம் வரையில் அறியாதிருந்தனர்; அண்மையில்தான் அதனை அறிந்து கொண்டனர். கம்பியில்லாத்தந்தி கண்டுபிடிக்கப்பட்டபோது, ஒலிகள் எதன் மூலமாகச் செல்கின்றன என்னும் ஆராய்ச்சி பிறந்தது. 'ஈதர்' என்னும் வெளிநிலை அதனால்தான் அறிந்துகொள்ளப்பட்டது. பெருவெளி ஒன்று இருக்கிறது என்றும், அந்தப்பெருவெளியிலும் காற்று ஓரளவுவரையிலேயே உலவுகிறது என்றும் மெல்லாம் மேலு மேலும் கண்டுகொண்டனர். அவ்வெளியின் மூலமாக ஒலிகள் பாவிவருதலை அறிந்து ஒலிபெருக்கி முதலிய கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

### ஆங்கிலேயரின் ஐம்பூத அறிவு

தொல்காப்பியர் காலத்திலேயே இவ்வெளிபற்றித் தமிழர் நன்கு அறிந்திருந்தனர். ஐவகை பூதப்பொருள்களும் பொருந்திய உடலைக்கருவியாகக் கொண்டு யோக முறைகளால் அண்டங்களின் நிலைகளையும், எங்குமிருந்து வரும் ஒலிகளைக் கேட்கும் முறைகளையும் அறிந்திருந்தனர். அவற்றின் பாவலான உண்மை

### பண்டைத் தமிழரின் ஐம்பூத அறிவு

களைத் திருமந்திரம் முதலிய தமிழ் நூல்களிற் காணலாம். மன அறிவை அறிந்து அகப்பொருள் உணர்ந்து இலக்கணமும் செய்த வர்கள் தமிழர்கள். தொல்காப்பியர் அகப்பொருளுண்மைகளைப் பொருளிலக்கணம் எனக்கண்டவர்; தவத்தோர் சுற்றத்தவருடன் தவம்பயிலும் இயல்பை எடுத்துக்காட்டுகின்றார். சமண சமய நடை இந்நிலைகளுக்கு வேறானது. ஆதலால் தொல்காப்பியர் சமணர் அல்லர் என்று தெரிகிறது. தமிழக்கொள்கைகள் இன்றைய சித்தாந்தக் கொள்கைகளே!

**சமயம் என்பது குணமாட்சி-அறத்துப்பால்**

உயிர்கள் ஒன்றை ஒன்று பார்த்து உயர்ந்து கொண்டிருக்கின்றன. மக்கள் மன அறிவில் உயர்ந்து மேலு மேலும் உயர்ந்தவர்களுடன் தொடர்ப்பு கொண்டு உயர்கிறார்கள்.

அறிவைவிடக் குணம் உயர்ந்தது என்று கண்டு அதைப் பயிற்சியால் வளர்க்கவேண்டும். சமயம் இதையே வற்புறுத்து கிறது. அறிவு, பொருளையும்; அவை யிரண்டும் கலையையும், எல்லாம் குணத்தையும் நாடிப்போகவேண்டும். அறிவுடைமை, கல்வி முதலிய அதிகாரங்கள் பொருட் பாலிலும், அருங்கலைகள் இன்பத்துப்பாலிலும், குணங்கள் அறத்துப்பாலிலும் அடங்கி நிற்கின்றன. அதனால் அறத்தை முன் வைத்தும் அதன் வலியறிந்து பாயிரத்திற் சொல்லப்பட்டு மிருப்பதன் நுட்பம் அறிந்து இன்புறத் தக்கது.

அறத்துப்பால், குணப்பால். குணத்தை வளர்ப்பதே விடுதலைக்கு (துன்ப நீக்கத்துக்கு) வழி.

**எண் குணம்**

சிறப்பாக எண்ணினால் குணங்கள் எண்ணத்தக்க குணங்களாய் எண்குணம் ஆகும்.

திருக்குறளில் முதலில் பொருட் பாலையும், பின் இன்பத்துப் பாலையும் முடிவாக அறத்துப் பாலையும் படிக்கவேண்டும். வாழ்விலும் அப்படியே; முதலில் பொருளால் உயர்ந்து, இன்பமும் அறனும் எய்திச்சிறக்க வேண்டும்.

**வாழ்வியல்**

"நடு வணது எய்த இருமருங்கும் எய்தும்" என்பது காணப் பொருளின் உதவியால் சுவைத்திறத்தில் ஈடு படுதலும் பின் குணத் திறத்தில் நிலைத்தலும் உண்டாகும்.

சுவைத்திறம் என்பது கலை. குணம் என்பது அருளொழுக்கம். இலக்கியங்களில் குணமாட்சியை உயர்த்தும் கருத்துக்கள் பலவகைச் சுவைகளோடு காட்டப்படுவது உயிர்களின் இயல்பான இக்கவர்ச்சி நிலையை ஒட்டியேயாகும். பலவகைச் சுவைகளில் (அநுபவங்களில்) திளைப்பதால் தான் உயிர்களுக்குக் குணம் உயர்கிறது. நற்குணங்களின் திரண்ட ஆற்றலே கடவுள் ஆற்றல். சிலப்பதிகாரம் முடிவில், "தெய்வந் தெளிமின்! தெளிந்தோர்ப்பேணுமின்" என்கிறது. திருக்குறள், வாழ்க்கை யியலைப்பேச எழுந்த நூல்; முதலில் அது கடவுள் வாழ்த்தைக் கொண்டிருக்கிறது.

### இலக்கிய வழி

சங்க காலத்தில் தமிழ் நாட்டில் சுவைமிக்க இலக்கிய (கலை) நூல்கள் எழுந்தன; அருள் உணர்வு அவைகளில் செறிந்து கிடக்கின்றன; சிறப்புவகையில் அருளியலுக்கே உரிய நூல்களாய்ப் பிற் காலத்தில் திருமுறைகளும் மெய்கண்ட சாத்திரங்களும் திருநாலாயிரமும் போன்றன எழுந்தன. இவைபோன்ற இலக்கிய அருட்சுவை நூல்கள் இதுகாறும் எங்கும் எழவில்லை! நாகரிக நாடு என்பது இத்தகைய இலக்கிய அருட்சுவை நூல்கள் மலிந்த நாடே. அதில் நம் தமிழ்நாடு முன்னிற்கிறது. சிலகாலமாக வாழ்க்கையோடு இவ்வுண்மைகள் ஒட்டாமலிருக்கின்ற நிலையினுற்றான் தமிழ் நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் இழிநிலை எற்பட்டுள்ளது. மீண்டும் பண்டைய உயர்நிலையடையப் பண்டை நூல்களின் வழியில் நாம் நம் வாழ்க்கையைச் செலுத்த வேண்டும். வாழ்வின் பயன் பொருள் சேர்த்து நுகர்தலும், கலையில் மகிழ்தலும் மட்டுமன்று; குணத்தில் உயர்தல், அருளில் ஒன்றல்தான் என்பதை உணரவேண்டும். கடவுளைச் சேர்தல் என்பதும் அதுவே.

### தமிழகத்தின் பேறும் கடமையும்

உயிர்களின் மன அறிவு இவ்வாறு உயர்ந்து கொண்டே போனல், உயிர்கள் பிரகிருதி தத்துவங்களைக் கடந்து வித்யா தத்துவங்களையும் தாண்டி சுத்த தத்துவங்களை அடைந்து வாக்கை

எட்டி அருள் நூல்களைத்தந்து முத்தி நிலையை அடையும். குணத்தால் உயர்ந்து நல்வினை செய்பவர் தேவ நிலையை அடைவர். அந்நிலையிலே இரண்டுவகை உண்டு. வீடு பேற்றிற்காக மீண்டு வருவோர் நிலை ஒன்று. மீளாமல் அந்நிலையிலேயே இருந்துகொண்டு இறைபணி செய்வார் நிலை மற்றொன்று. மீண்டு வருபவர்கள் மக்களாய்ப் பிறந்து பின்னும் பல நல்வினை தீவினைகளுக்கு ஆட்பட்டு இறுதியில் அவற்றைக் கடந்து வீடுபேறடைவர். புண்ணியம் கருதி நல்வினை செய்தார் நிலை இது. புண்ணியம் கருதாது நல்வினை செய்வோர் மீண்டு வாராத தேவநிலை எய்தி, மகேசன் சதாசிவன் போன்று இறையருளால் உலகங்களை இயக்கி வருவர். வினைக்கேற்ப உயிர்களுக்கு உடம்பும் உலகமும் அமையும்.

## தேவ நிலை

ஒளி உலகங்களிலே உயிர்கள் அவ்வுலகுக் கேற்ற ஒளி உடம்புகளுடன் உலவும். இப்படிச்சொல்வது பொருள் நூல் (விஞ்ஞானம்) களுக்கு மாறன்று. நாம் காணும் சந்திரன் முதலிய கோள்களில் உயிர்களின் நடமாட்டம் இருப்பதாக மேலை நாட்டாரும் கூறுகிறார்கள். ஒளியுடம்புடன் ஒளியுலகங்களில் உலவுபவர்களையே தேவர்கள் என்று சொல்வது. தேவர் என்ற சொல்லிலேயே இப் பொருள் இருக்கிறது. (தே-தேசு-ஒளி) தேவர்களில் தாம் தாம் விரும்பும் வடிவெடுக்கவும், விரும்பும் உலகுகளுக்குச் சென்று வரவும் சித்திபடைத்தோரும் உண்டு.

தேவர்கள் முப்பத்திமூன்று வகைப்பட்ட பிரிவினர் என்று பெரியோர் வழங்கிவருகிறார்கள். அங்கங்கே இறைவனை வழிபட்டதாகப் பல தல புராணங்களில் வருபவர்களும் இவர்களே. திருக்கழுக் குன்றில் இந்திரன் வழிபட்டதாகச் சொல்லப் பெறுகிறது. இந்த இந்திரன் அதிகார இந்திரன் அல்லன்; மீளவாராத தேவன்.

"எசக்கி" என்று ஒரு சிறுதேவதை உண்டு. இயக்கி என்பதே எசக்கி எனமருவி வழங்குகிறது. இவர்கள் மற்றவர்களின் எண்ணங்களை இயக்குபவர்கள். (ஆதலின் இப் பெயர் பெற்றார்கள்) ஒருவர் எண்ணத்தை மற்றவர்களிடம் சேர்க்கவும் இவர்கள் உதவுவார்கள். யக்ஷிணி என்றும் இவர்களை வழங்குவதுண்டு.

## இயக்கர் நிலை

கழனிகளின் செல்வத்தைச் 'செல்லியம்மை' என்றும், நீர் நிலைகளின் வளத்தைக் 'கங்கையம்மை' என்றும், தோப்புகளில் பெய்யும் மழையை 'மாரியம்மை' என்று மெல்லாம் மக்கள் அவற்றை இயக்கும் சக்திகளைக் கூறுவதுண்டு. ஒருகாலத்தில் உருத்திர தேவரைக் காதலித்துத் தவம் செய்த நல்லோர்கள் எழு கன்னிமார் எனப்படும் தேவதைகள். இவ்வாறு பல வகைகளில் வந்து உலவும் தேவ சாதியினர் உண்டு; தேவர்கள் மக்களாகவும் மக்கள் தேவர்களாகவும் பிறப்பதும் உண்டு; பிறவாமலே வந்து போகும் தேவர்களும் உண்டு. இவர்கள் தமக்குள் ஒருவரை ஒருவர் காதலிப்பதோடு மக்களையும் காதலிக்கக் கூடும்.

### தேவதைகள்

இயக்கியர் போன்றார் தேவ சாதியினரே ஆயினும் அவர்கள் அங்கே இருந்துவிட எண்ணாமல் வீடு பேறடையக் கருதி, நிலவுலகம் போந்து தவமும் செய்வர். அவர்களை வணங்குவோர்க்குச் சில வகையில் அவர்கள் உதவி செய்வார்கள். ஆனால் அவர்களைத் தேவதைகள் என்று கருதலாமே தவிர, முழு முதல் என்று எண்ணி வழிபடக் கூடாது. வீடு பேற்றிற்கு அது தடையாகும். இயக்கிமார் தொகை தொகையாக வந்து சோலைகளும், ஆற்றங்கரைகளும் உள்ள நல்ல சூழல்களிலே தவமிருப்பர். இவ்வாறு வந்த அறுபத்திநான்கு இயக்கிமார்களை எண் குணத்தர்களாக்கி வீடு பேறடையச் செய்த இறைவனின் நிகழ்ச்சி பற்றி இப்பாடல் குறிப்பிடுகிறது.

### இயக்கர் போக்கு

மயக்கமாய தோர் மும்மலப் பழவல்வினைக்குள் அழுந்தவும்-அறிவை மயக்கம் செய்வதாய மூன்று மலங்கள் என்னும் வலிய பழவினையில் நான் அழுந்தி விடவும்.
மயக்கம் என்றது பொதுவாக இங்கு அறிவுக்கலக்கத்தை.

### இயக்கக்காரர் கடமை

நாட்டு முன்னேற்றத்துக்காக இயக்கங்கள் தேவைப்படுகின்றன. இயக்கங்களில் ஈடுபடுபவர்கள் ஆழ்ந்த அறிவும் ஆத்திரமற்ற தன்மையும் இல்லாதவர்களாய்க் கட்டுப்பாட்டுடன் வேலை செய்ய வேண்டும்.

### பரந்தாழ்ந்த அறிவாராய்ச்சி

இப்போது நம் நாட்டில் உள்ள இயக்கக்காரர்கள், பரந்த அறிவு வேண்டும், பிற நாட்டுக்கலைத் தொடர்பு வேண்டும் என்றெல்லாம் கூறுகிறார்கள். அவை எல்லாம் வேண்டுவனவே. ஆனால் அவற்றோடு நின்றுவிடலாமா? உலகம் ஒன்றல்லவே. ஒருபேரண்டத்துக்குள் பெரியவையும் சிறியவையுமாக எத்தனையோ கோளங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றனவே. அவற்றைப்பற்றி எல்லாம் அறிதலுங்கூட நன்மைதானே! அதற்கான முயற்சிகள் என்ன?

எவ்வளவு முடியுமோ அவ்வளவு சாதனங்களைக்கொண்டு விஞ்ஞானிகள் இவ்வுலகை ஆராய்கிறார்கள். மற்றவற்றைப்பற்றி அறியவும் முயல்கிறார்கள். கருவிகளையே சாதனங்களாகக் கொண்டு ஆராய்ந்தால் இந்த உலகத்தைக்கூட முழுமையும் ஆராய முடியும். என்று சொல்வதற்கில்லை! அறிவாராய்ச்சிச் சாதனங்களைக்கொண்டு நுட்பவகையில் ஆராய்தல் இன்னும் மேல்! அப்போதுதான் மற்ற உலகங்களைப்பற்றியும் ஓரளவானும் ஆராய முடியும். நம் நாட்டுப்பெரியோர்கள் அருள் நெறியில் நின்று யோக முதலிய சாதனங்களைக்கொண்டு அவற்றைப்பற்றி யெல்லாம் அறிந்திருக்கிறார்கள்; அறிந்து சாத்திரங்களில் ஏதேதோ எழுதியிருக்கிறார்கள். அவற்றை எல்லாம் அறவேபொய் என்று கருதி ஒதுக்கிவிடாமல், அதே அருள் நெறிகளிற் சென்று அவற்றின் உண்மைகளை அறிய முயலவேண்டும்.

### முன்னேற்றத்தின் முழுநிலை

பகுத்தறிவுக்கு மேற்பட்ட நிலையில் உள்ள உண்மைகளைச் சமய நூல்களும் சமயப் பழக்கங்களும் உணர்த்துகின்றன. அவற்றை எல்லாம் விளக்கிக் கொள்ள முயலாமல், உயிரின் எதிர்காலம் பற்றிய நிலைகளை அறியாமல், உலகங்களின் இயக்க முடிவுகளையும் பயன்களையும் பற்றி எல்லாம் நினையாமல், வினைகளின் தாக்குதலின்றி வாழக்கருதாமல், உண்டு உடுத்து மகிழ்ந்து போகிற நெறிகளிலேயே கருத்திருத்துவது முன்னேற்றத்தின் முடிந்த இடமாகக் கொள்வதற்கில்லை. மயக்கம் என்றே கொள்ளவேண்டியிருக்கிறது.

மும்மலங்களில் 'மாயை' என்பது இடையிற் செயற்படுவது. அதிலிருந்தே உடம்புகளையும் உலகங்களையும், பண்டங்களையும் அருளால் இறைவன் படைத்துக் கொடுக்கின்றான். 'ஆணவம்' என்பது அறியாமையை விளைவித்துக்கொண்டு உயிர்களோடு சேர்ந்திருக்கின்ற மூல மலம். கன்மம் என்பது உயிர்களைச் செயற்படுத்துவது. அதனால்தான் முதல் பிறவி உயிர்களுக்கு வாய்க்கிறது. பிறவி

## வல் வினை

தோறும் உயிர்கள் அதிலிருந்து செய்யும் நல்வினை தீவினைகளுக்கேற்ப மேன் மேற் பிறவிகள் வாய்க்கின்றன. முளைக்கும் இயல்புடைய வித்தை மண்ணிலே ஊன்றுவதுபோல, இப்பழவல்வினை என்னும் முளையுடைய உயிர்களை இறைவன் மாயையிலே ஊன்றி அருள் மழை பொழிந்து பிறவிகளை வளர்த்து அறியாமைப் பசியைப் போக்குகின்றான்.

துயக்கறுத்தெனை ஆண்டு கொண்ட நின் தூய்மலர்க் கழல் தந்து - (அதன்) தொடக்கை அறுத்து என்னை (குருவடிவமாக வந்து ஆட்கொண்டு நின் தூய மெல்லிய வெற்றித் திருவடிகளைக் கொடுத்து) துயக்கு-சிக்கு, தொக்கு-கழல் என்றது திருவடி; இங்கே வெற்றிக் குறிப்புடையது.

எனைக்கயக்கவைத்து அடியார் முனே வந்து காட்டினாய் கழுக்குன்றிலே - என்னை நின்பிரிவினால் (சிலகாலம்) வருந்தும்படி வைத்து (இப்போது) அடியார்களின் முன்னே வந்து நின்திருக் கோலக்காட்சியினைக் காட்டியருளினாய்!

கயக்கவைத்து - கசக்கவைத்து, வருந்தும்படி செய்து - அடியார் முனே கயக்கவைத்து என்றும் காட்டலாம். கயம் - பெருமை (யானைக்கும் பெயர், பெருமிதமாக இருத்தலின்) கயக்கவைத்து - பெருமைப்படும்படி வைத்து என்றும் பொருள். கசக்கவைத்துத் தான் பெருமைப்படுத்த முடியும். துணியைக் கசக்கித்தானே அழுக்கு போக்கி வெளுத்து மேலே போட்டுக் கொள்ளுகின்றோம். அடியார்முனே வந்து காட்டினாய் என்பதனாலே அடிகளார்க்குக் கிடைத்த அருட்கோலக் காட்சி, ஆளுடைய பிள்ளையாருடன் இருந்த அடியார்கள் எல்லாம் சோதியுட் கலந்தது போல, அடியார்களுக்கும் தெரிந்தது என்று தெரிகிறது. ஆகவே அடியார் திரளுடன் திருக்கழுக் குன்றம் செல்வதுதான் சிறப்பு என்றும் புலப்படுகிறது. அங்கே வைக்கப்பெற்றிருக்கும் திருவடி ஞானம் எல்லார்க்கும் வழங்கத்தானே உள்ளது.

## முடிவுரை

எழு நாட்களாகத் திருக்கழுக்குன்றப் பதிகத்தின் எழு பாடல்களிலும் திளைத்து கருத்துக்கள் பல கண்டோம். பதிகம் என்றால் பத்து என்று பொருள். ஆனால் நமக்குக் கிடைத்திருப் பன எழு பாடல்களே. இறுதிப் பாடல்கள் மூன்று கிடைக் காமல் போய் விட்டன. என்னே நம் தீவினை! தமிழர்களின் போற்றுதல் அப்படி இருந்திருக்கின்றது.

மணிவாசகரைப் போன்றார் இந் நாட்டில் பிறக்க எவ்வளவோ தவம் வேண்டும். அத்தவத்தின் பயனான நூல்களை எவ்வளவு கருத் தாகப் போற்றவேண்டும்? எத்துணையோ அரிய பெரிய இலக்கியச் செல்வ, அருளமுத நூல்களைச் செல்லுக் கிரையாக்கி விட்டோம்.

வட நாட்டிலிருந்தும் மற்ற நாடுகளிலிருந்தும், ஏன் வானு லகத்திலிருந்தும் பலர் இத் தென்னாட்டுக்குப் போந்து நலம் பெற் றுப் போகிறார்கள். அதற்குக் காரணம் நால்வர் பெருமக்களும் சங்கரர், மாத்துவர், இராமானுசர் போன்ற பெரியோர்களும் ஆழ்வார்களும் நாயன் மார்களும் இந் நாட்டில் தோன்றின மையாகும். இந் நாட்டு மண்ணும் பண்பும் அப்படிப்பட்டச் சிறப்புடையன.

**தென்னாட்டின் சிறப்பு**

இந் நாட்டுப் பண்பில் ஊறிமுகிழ்த்த தொல்காப்பியம் புறநானூறு, திருக்குறள், திருமந்திரம், தேவார திருவாசகம், சிவஞான போதம் போன்ற நூல்கள் வேறு எங்குமே இல்லை. எண்ணிறந்த நூல்கள் இறந்துபோக எஞ்சியுள்ள சில நூல்களையேனும் நாம் சரியாய்ப்போற்று கிறோமா? தமிழரில் எத்துணைப் பேருக்கு இந் நூல்களின் பெயர்களே தெரியும்? இந் நிலையினால்தான் நால்வர் பாடல்களில் பல தில்லையில் செல் லுக்கு இரையாயின. திருமந்திரம் பலி பீடத் தடியில் மறைக்கப் பட்டது. இனியேனும் தம் அருந்தமிழ் நூல்களின் அருமை பெருமைகளை அறிந்து அவற்றைப் போற்றிப் படித்து உலகெங் கும் பரப்பி நலம் பெருக்க தமிழர்கள் முயல்வார்களாக!

**நூல்களைப் போற்றல்**

கருத்தற்ற இத்தகைய போக்குகளினால் தான் நாடு, மொழி, சமயம், அரசு முதலிய துறைகளில் வேற்றவர் நுழைவும் ஆட்சியும் இந்த நாட்டில் பல நூற்றாண்டுகளாகவே வலுப்பட்டன. மணிவாசகர், ஞான சம்பந்தர் காலங்களில் பௌத்த சமண சமயங்களும், பிற்காலத்தில் பல வேற்றவர் ஆட்சிகளும் இந்நாட்டில் நுழைந்தன. மலைபோன்ற தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள் அழிந்து அவற்றில் இவை ஒரு பிடியளவே என்று சொல்லும்படி உள்ள நூல்கள் மட்டுமே எஞ்சின. இவைகளே இன்று உலகுக்கு தமிழரின் இணையற்ற சிறப்பை எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

**வேற்றவர் நுழைவு**

தமிழின் தனிச்சிறப்புகளிலே தொன்மையானவை மூன்று. இலக்கணச் சிறப்பு, அருளியல் சிறப்பு, உலகியல் சிறப்பு. தொல்காப்பியம் போன்ற இலக்கணங்களும், தேவார திருவாசகங்கள் போன்ற அருள் நூல்களும், புறநானூறு திருக்குறள் போன்ற உலகியல் நூல்களும் அவற்றிற்கு எடுத்துக்காட்டாகும்.

**தமிழின் தனிச் சிறப்புகள்**

இனியேனும் தமிழ் மக்கள் தம் பண்டை நூல்களின் ஒப்பற்ற சிறப்பையும் உண்மைகளையும் உணர்ந்து போற்றி உயர்வார்களாக! வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!!

**தமிழர் கடமை**

8B
3-22

சென்னைச் திருக்கூட்டம்
1898
சிவனடியார்